694 694

Regd. No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 4

செந்தமிழ் மாத சஞ்சிகை

இதழ் 1

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1351 றமலான்மீ 1933 ஜனவரிமீ

உள்ளடக்கம். பக்கம்.

1. ஸூரத்துத் தாரீக் 2. நாயக வாக்கியம் ... 1—4
3. நமது நான்காம் மலர் ... 5
4. இஸ்லாமிய வீரர்களின் தெய்வீக சக்தி ... 6
5. மார்க்கந் தான் நம்மை மனுஷ்யராக்குகிறது 8
6. முஸ்லிம்களும், தொழில் முறையும் ... 12
7. பண்டைய இஸ்லாமிய தொழில்முறை ... 14
8. சுகாதாரம் ... 17
9. கான்ஸ்டாண்டு நோபிளின் வெற்றி ... 20
10. காதியான் கம்பனியின் புதிய தந்திரம் ... 24
11. தா. இ. ஹாபிஸின் தவரூன பத்வா ... 27
12. செய்தித்திரள் ... 28
13. மிர்ஸாவும், தா. இ. ஹாபிஸும் ... 30
14. றமலான் மாதச் சிறப்பு ... 31
15. நோன்பின் மகத்துவம் ... 33
16. நோன்பின் விபரம் 17. ஆசிரியர் குறிப்புகள் 36—39

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

சந்தா நேயர்கட்கு!

மாண்புமிக்க நண்பீர்!

நமது அரும் மாசிகையைத் தாங்கள் அன்போடு ஆதரித்து வருவது பாராட்டத்தக்கதே யாகும். உங்களிலனேகரின் சந்தா சென்ற டிஸம்பர் மாதத்தோடு முடிவடைந்திருக்கிறது அதில் நாளது வரை சந்தா செலுத்தாமலிருக்கும் ஒரு சிலருக்கு இம்மாதப் பத்திரிகை வி. பி. செய்யப்பட்டிருக்கிறது.

சிலோனுக்கு வி. பி. செய்வதில் பல கஷ்டங்களிருக்கின்றது. சிங்கப்பூர், பினங், மலாய் எஸ்டேட் முதலிய இடங்களுக்கு வி. பி. - யே கிடையாது. ஆகவே சிலோனிலுள்ள சந்தாதார்களில், 1932-க்குச் சந்தா செலுத்தாமலிருக்கும் ஒரு சிலர், தங்களின் பாக்கியையும் நடைபெறுவதாகவுள்ள 1933-ம் வருஷத்திற்குள்ள சந்தாவையும் முன் பணமாக அனுப்பிவைக்கும்படி கோறுகிறோம். அவ்வாறே சிலோனிலுள்ள இதர சந்தாதார்களும் 1933-ம் வருஷத்திற்குள்ள சந்தா ரூபாயை முன்பணமாக நமக்கு நேரிலாகிலும், நமது கொளும்பு ஏஜெண்டு ஜனாப் அ. மு. க. ஆலிம் சாஹிப் (220, 2-வது கராஸ் ஸ்டீட்) அவர்களிடமாகிலும் செலுத்திவிடும்படி கோறுகிறோம்.

மலாய் எஸ்டேட்டிலுள்ளவர்கள் கிள்ளான் ஜனாப் K. A. பகீர் முஹம்மது சாஹிப் அவர்களிடம் செலுத்திவிடுவோர்களென எதிர்பார்க்கின்றோம்.

தவிர, நம் நாட்டிலுள்ள இதர சந்தாதார்களும் தங்கள் சந்தாவை முன்பணமாக அனுப்பிவைத்து மாசிகையை ஆதரிப்பார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

மானேஜர்,

OFFICE OF THE REGISTRAR OF BOO[KS]
30 JAN 1933
MA...

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்ரஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 4	ஹிஜ்ரி 1351 ரமலான்மீ 1933 ளூ ஜனவரி மீ	இதழ் 1

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு (நாம் இதனை ஆரம்பிக்கின்றோம்.)

ஸூரத்துத்தாரிக்.

1. வானத்தின் மீதும் (இருளுடைய) இரவில் தோன்றக்கூடிய தன் மீதும் பிரமாணமாக,

2. மேலும் இரவில் தோன்றக்கூடியது இன்னதென உமக்குத் தெரியுமா?

3. (அது) பிரகாசிக்கக்கூடிய நக்ஷத்திரமாகும்.

4. அதன்மீது (ஆண்டவன் புறத்திலிருந்து) காவலர் இல்லாத யாதோர் ஆத்மாவுங் கிடையாது.

5. ஆதலின், மானிடன் தான் எதினின்று படைக்கப்பட்டிருக்கின்றான் என்பதை நோட்டமிடட்டும்.

6. (மானிடன்) குதிக்கக்கூடிய தண்ணீரினின்று படைக்கப்பட்டிருக்கின்றான்.

7. (அது) முதுகுக்கும்நெஞ்செலும்புகளுக்குமிடையினின்று புறப்படும் (தண்ணீராகும்.)

8. நிச்சயமாக அவன் (அல்லாஹ்த ஆலா) அவனை (மானிடனை) மீட்பதன் மீது சக்தியுள்ளவனாக யிருக்கின்றான்.

9. இரகசியங்களை வெளியாக்கப் படும் நாளில்,

10. அதுபொழுது அவனுக்கு (மானிடனுக்கு) யாதொரு பலமுமிராது; உதவிசெய்பவனும் இருக்கமாட்டான்.

11. (மழையை) மீட்பிக்கக்கூடிய வானத்தின்மீது பிரமாணமாக,

12. (புற்பூண்டுகளினால்) பிளக்கக்கூடிய பூமியின் மீது (பிரமாணமாக)

13. நிச்சயமாக இது (ஆண்டவன் மானிடர்களை மீட்பதன் மீது சக்தி பெற்றிருக்கின்றான் என்பது) தீர்மானமான வார்த்தையாகயிருக்கும்.

14. மேலும் இது வீண் (வார்த்தை) அல்ல.

15. அவர்களோ (குப்பார்களோ) ஒரு சூழ்ச்சி புரிகின்றார்கள்.

16. நானும் ஒரு சூழ்ச்சி செய்கின்றேன்.

17. ஆதலின் நிராகரிப்பவர்களுக்கு அவகாசம் கொடுப்பீராக. (சில நாளைக்கு அவர்களை) விட்டு வைப்பீராக.

[அதாவது வானத்தின்மீதும், இருளுடையதாகிய இரவில் அவ்வானத்தின்மீது தோன்றக்கூடிய நக்ஷத்திரங்களின்மீதும் பிரமாணமாக ஒவ்வொரு சிறியபெரிய ஆத்மாக்களின் மீதும் ஒவ்வொரு காவலாளியை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதனால் அவ்வாத்மா பலவாறான சங்கடங்களில் அகப்பட்டுக்கொள்ளாமல் காற்கப்பட்டு வருகிறது. ஆதலின் மானிடன் தான் எதினின்று படைக்கப்பட்டிருக்கின்றான்; அவனைப் படைப்பதற்குள்ள ஆதிவஸ்த்து எங்கிருந்து சேகரிக்கப்பட்டிருக்கிறது என்பவைகளை அவன் நோட்டமிட்டுப் பார்க்கட்டும். அவன் முதுகு, நெஞ்செலும்புகள் இவைகளுக்கிடையினின்று வெளியாகும்குதிக்கக்கூடிய தண்ணீராகிய இந்திரியத்தினின்றும் படைக்கப்பட்டிருக்கின்றான். நிச்சயமாக அல்லாஹ்தஆலா மானிடன் மரணமானபின், இரகசியங்களெல்லாம்வெளியாகக் கூடிய நாளில் அவனை மீட்பதன்மீது சக்தி பெற்றவனாகயிருக்கின்றான். அந்நாளில் மானிடன் தான்உலகின்கண் புரிந்த காரியாதிகளைவெளிப்படுத்தாமலிருப்பதற்குயாதொரு சக்தியும் பெற்றிருக்கமாட்டான். அவனுக்கு யாதொரு உதவியாளரு மிருக்கமாட்டார்கள். மழையை வருஷிக்கக்கூடிய வானத்தின்மீதும், பிளந்து புற்பூண்டு உண்டாகக்கூடிய பூமியின்மீதும் பிரமாணமாக நிச்சயமாக மானிடர்களை மீட்பதன்மீது ஆண்டவன் சக்திபெற்றிருக்கின்றான் என்பது தீர்மானமான வார்த்தையாக யிருக்கும். இது வீணான வார்த்தையல்ல. ஆனால் குப்பார்களோவெனில், இவ்வார்த்தையை நிராகரித்து ஒரு சூழ்ச்சி புரிகின்றார்கள். அல்லாஹ்தஆலாவும் அதற்குப் பகரமாக ஒரு சூழ்ச்சி புரிகின்றான். ஆதலின் நிராகரிப்பவர்கள் மீது சாபமிடாது சற்று அவர்களுக்கு அவகாசம் கொடுப்பீராக. பிறகு அவர்களுக்கு சதாகாலத்தின் வேதனை ஏற்பட்டிருக்கின்றது என்பதே.]

இத்திரு அத்தியாயம் மக்கீயாம். இதன் ஆரம்பத்தில் "தாரிக்" எனக் கூறப்பட்டிருக்கிறது. தாரிக் என்பது இரவில் நிகழக்கூடிய சம்பவங்களுக்குச் சொல்லப்படும். எனவே, இவ்வத்தியாயத்தில் இரவில் வெளியாகக் கூடிய வஸ்த்துவின்மீது பிரமாணஞ்செய்யப்பட்டிருப்பதால், இஃது "ஸூரத்துத்தாரிக்" என்னும் திருப்பெயருடன் அழைக்கப்படுகிறது.

இவ்வத்தியாயம் இறக்கி வைக்கப்பட்டதின் காரணமாவது, எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது பெரிய தந்தையாராகிய ஹஸ்ரத் அபூதாலிப் (ரலி) அவர்கள், ஒருநாளன்று எம்பெருமானார் (ஸல்) அவர்களைச் சந்திக்க அவர்களது இல்லமேகினார்கள். அது சாப்பிடக்கூடய நேரமாகயிருந்ததால், ரொட்டியும் பாலும் கொணர்ந்து வைக்கப்பட்டது. இருவரும் சாப்பிடுவதற்காக உட்கார்ந்தார்கள். அதுபொழுது ஒரு நக்ஷத்திரம் வானத்தினின்று கீழே விழ ஆரம்பித்து பூமிக்குச் சமீபித்து வந்தது. அதனால் பூமியிலுள்ள யாவற்று வஸ்துக்களும் பிரகாசமாய்விட்டது. இதனைக் கண்டு ஹஸ்ரத்அபூதாலிப் (ரலி.) அவர்கள் பயந்து சாப்பிடுவதை விட்டெழுந்து இஃது யாதாகுமென வினவினார்கள். அதற்கு, மலக்குகள் வானத்தினின்று ஷைத்தான்களை விறட்டுகின்றார்கள்; இஃது அல்லாஹ்தஆலாவின் சக்தியினை வெளியாக்கும் அடையாளமாகும் என சற்குண சீலர் (ஸல்.) அவர்கள்கூறினார்கள். இதனை அபூதாலிப் அவர்கள் கேட்டு மௌனமாக யிருந்துவிட்டார்கள். அதுபொழுது ஜிப்ரயீல் (அலை.) அவர்கள் இவ்வத்தியாயத்தைக் கொண்டு வந்தார்கள். இதனை மானிடன் நன்கு நோட்டமிட்டுப் பார்த்து சன்மார்க்கத்தின்மீது உறுதியாகயிருக்கவேண்டியது அத்தியா அவசியமாகும். எனவே வானத்தைக் காவல்புரிவதற்காக மலக்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்பது வெளிரங்கமாகயிருப்பதால், ஒவ்வொரு மானிடனையும் காவல் புரிவதற்காக அல்லாஹ்தஆலா மலக்குகளை ஏற்படுத்தியிருக்கின்றான் என்பதை நன்கு தெரிந்துகொள்கின்றோம்.

இதன் ஐந்தாவதுவாக்கியத்தில் மானிடன், தான் எதினின்று படைக்கப்பட்டிருக்கின்றான் என்பதை நோட்டமிட்டுப் பார்க்கட்டும் எனக் கூறுகின்றான். அதாவது, மானிடன் எதினின்று படைக்கப்பட்டிருக்கின்றான்? அவனது அசல்யாதாகும்? இவ்வாறு அவனைப் படைத்தது யார்? என்பனவற்றை அவனே நோட்டமிட்டுப் பார்க்கட்டுமெனக் கூறிவிட்டுப் பிறகு, முதுகந்தண்டு நெஞ்

செலும்பு இவைகளுக் கிடையிலிருந்து வெளியாகும் ஒரு சொட்டுத் தண்ணீரினின்று மானிடன் படைக்கப்பட்டிருக்கின்றான் என அவனே அறிவிக்கின்றான். எனவே, இந்திரியமானது கெர்ப்பப்பைக்குச் செல்லுங்கால் அதுபீஜத்தின் கீழுள்ள நரம்புகளின்வழியாக வந்து வெளியானபோதிலும், ஆரம்பத்தில் திரேகத்தினின்றே உற்பத்தியாகின்றது. அதிலும் முக்கியமாக மூளையிலிருந்தே உற்பத்தியாகின்றது. இதனால்தான் மூளையில் பலக்குறைவு ஏற்பட்டுவிடுமாகில், மானிடனுடைய பலமும் குறைந்துபோகின்றது. எனவே மிகுதமாகப் பெண்டிர்களுடன் கலந்திருப்பது கொண்டு மூளையில் பலக்குறைவு ஏற்பட்டுவிடுவது ச்கஜம். அதன்பின் திரேகமுழுதிலும் தளர்ச்சி ஏற்பட்டுவிடுகிறது. இவ்வாறான அருவருக்கத்தக்க ஓர் அற்ப வஸ்துவாகிய இந்திரியத்தினின்று மானிடன் படைக்கப்பட்டிருக்கின்றான் என்பது வெள்ளிடை.

இதன் ஒன்பதாவது வாக்கியத்தில், இரகசியங்கள் வெளியாக்கப்படும் நாளென்று குறிப்பிட்டு, கியாமத்-மறுமை நாளைக்குள்ள அடையாளங்களிலொன்றைக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆதலால் இதுபொழுது மறைமுகமாகச் செய்யப்படுபவைகளெல்லாம் அந்நாளில் வெளியாய்விடும். இவ்வுலகின்கண் ஆத்மாவின் சக்திமறைந்து திரேகத்தின் சக்தி வெளியாய்யிருந்தபோதிலும், மறுமை நாளில் இவைகளெல்லாம் மாற்றமாய்விடும். எனவே உலகின்கண் எவைகளை மறைக்க வேண்டுமென பஹீரதப்பிரயத்தனஞ் செய்யப்படுகிறதோ, அவைகளெல்லாம் அங்கு நல்ல விதமாக வெளியாய்விடும். அவ்வாறு வெளியாவதை மறைத்துவைப்பதற்கோ, அன்றி அதனால் கிடைக்கும் தண்டனையைத்தடுப்பதற்கோ மானிடனுக்கு யாதொரு சக்தியுமிராது. அவனுக்கு உதவி செய்பவர்களும் கிடைக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

மேலே கூறப்பட்டுள்ள வாக்கியங்களில், அல்லாஹ்தஆலா மானிடனை முந்தியநிலைமையில் மறுபடியும் மீட்டிவைப்பான் என்றும், எதுபொழுது இவ்வாறான நிலைமை ஏற்பட்டுவிடுமோ உடனே மறைவுதலாகயிருக்கக் கூடியவைகளெல்லாம் வெளியாய் விடுமென்றும் கூறியிருப்பதால், இவ்விரண்டிற்காகவும் இரு உவமானங்களைக் குறிப்பிட்டு, மழையை மீட்பிக்கும்படியான வானத்தின்மீது பிரமாணஞ் செய்தும், புற்பூண்டுகளினால் பிளந்து போகக்கூடிய பூமியின் மீது பிரமாணஞ் செய்தும் கூறுகின்றான். எனவே மழையினால் ஒருகாலத்தில் பூமியிலிருந்து பசுமையான புற்பூண்டுகள் உற்பத்தியாகி, அது ஒரு பக்குவத்தை அடைந்தவுடன் காய்ந்து வரண்டு போய்விடுகின்றது. மறுமுறை மழை வருஷிப்பதுகொண்டு அப்பூமி செழித்துத் தன் பழைய நிலைமைக்கு வந்துவிடுகின்றது. இவ்வாறு தான் மானிடன், தான் மரணமடைந்தபின் தன்பழைய நிலைக்கு மீண்டும் வந்துவிடுவது ஆச்சரியமானதாகமாட்டாது. இரண்டாவதாக, பூமிக்குள்ளால் எந்த சக்தியை மறைத்து வைக்கப்பட்டிருக்கிறதோ, அந்த சக்தி ஒருகாலத்தில் வெளியாகி பூமியினின்று பலவாறான கொடி செடிகள் முளைக்கின்றன; பலவாறான ஊற்றுக்கண்கள் கனிகள் வெளியாகின்றன. எனவே ஆகாயத்தினின்று வருஷிக்கக்கூடிய மழைத்தண்ணீரானது தந்தையைப்போன்றும், பூமியானது தாயின் கெர்ப்பத்தைப்போலவும், அதினின்று உற்பத்தியாகும் கொடி செடிகள், புற்பூண்டுகள் யாவும்அதன்பிள்ளைகளைப்போலவுமிருக்கின்றது எனக் கூறுகின்றான்.

மறுமையில் சுவர்க்கம் நரகம் இருப்பதை யார் கண்டது? இவைகளெல்லாம் சாதாரணமாக மானிடர்களுக்குஆசையையோ, அன்றி பயத்தையோ உண்டுபண்ணுவதற்காக அன்பியாக்களாலும் பெரியார்களாலும் கூறப்பட்டுவந்த கட்டுக்கதைகளேயன்றி வேறில்லை. எவ்வாறு சிறுபிள்ளைகளுக்கு பயத்தை உண்டுபண்ணுவதற்காக பலவாறு கூறப்படுகிறதோ, அவ்வாறுதான் இக்கூற்றுக்களுமிருக்கிறதென குப்பார்கள் கூறிக்கொண்டிருந்தனர். இதுதான் அவர்கள் செய்த சூழ்ச்சியாகும். இதனை மறுத்து தக்க முறையில் அவைகளை அல்லாஹ்தஆலா குப்பார்களுக்கு நன்கெடுத்துக்காண்பித்திருக்கின்றான்.

(அல்லாஹ் அஃலம்)

நாயகவாக்கியம்.

எதுபொழுது ரமலான் மாதம் பிறந்துவிடுமோ, உடனே சுவர்க்கத்தின் கதவுகளெல்லாம் திறக்கப்பட்டும் நரகத்தின் வாயல்களெல்லாம் அடைக்கப்பட்டும் போய்விடுகிறதென எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

சுவர்க்கத்திற்கு எட்டு வாயல்களிருக்கின்றது. அதிலொன்றுக்கு “ரய்யான்” எனப் பெயர். அதில் நோம்பாளிகளைத் தவிர வேறு யாரும் நுழைய மாட்டார்களென நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் நவின்றிருக்கின்றார்கள்.

பரக்கத்துடைய மேலான சங்கை பொருந்திய ரமலானென்னும் மாதமாகிறது உங்களிடம் வந்திருக்கிறது அம்மாதத்தில் நோம்பு நோற்பதை அல்லாஹ்தஆலா உங்கள்மீது கடமையாக்கி யிருக்கின்றான். மேலும் அம்மாதத்தில் மேன்மைபொருந்திய ஒரு இரவிருக்கின்றது அது ஆயிரம் மாதங்களைவிட மிக சிறப்பினையுடையதாகும். எவனொருவன் தெண்டித்து அதனை அடைந்து அதன் பலனைப் பெற்றுக்கொள்ளவில்லையோ, அவன் பெயர் கெட்டவனாகயிருக்கும் என சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள் அருளியிருக்கின்றார்கள்.

நோம்பும், குர்ஆன் ஷரீபும் மானிடனுக்கு சிபாரிஷ்செய்யும். எனவே மானிடன் பசியாகயிருந்தநேரத்தில் அவனுக்கு விருப்பமான வஸ்த்துக்களை அவன் புசிப்பதைவிட்டும் விலக்கினேன் என் கட்டளையை சிறமேற்றாங்கி நடந்துகொண்டான் என நோன்பு கூறி சிபாரிஷ் செய்யுமென்றும், அவனது இராத் தூக்கங்களை எனக்காக விட்டுவிட்டான் என குர்ஆன்ஷரீப் கூறி சிபாரிஷ் செய்யுமென்றும் சத்தியத்தூதர் (ஸல்.)அவர்கள் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றார்கள்.

யாராகிலுமொருவன் ரமலான்மாதத்தில் பரலான ஒரு வணக்கம்புரிவானாகில், ரமலானல்லாத இதரகாலங்களில் எழுபது பரலான வணக்கம்புரிவதற்குள்ள நன்மைஅவனுக்குக் கிடைக்கும். ரமலான் மாதமாகிறது பொருமையுடைய மாதமாகும். அப்பொருமைக்குக் கூலி சுவர்க்கமாயிருக்கும் என ஏகத்துவத் தூதர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

எவனொருவன் ரமலானுடைய காலத்தில் இரவில் வணக்கம் புரிகின்றானோ, அவனுடைய பாவங்கள் யாவற்றும் மன்னிக்கப்பட்டுப் போகிறது.

எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் ஷஃபான் மாதத்தின் கடைசி தினத்தில் மிம்பரின் மீதேறி மகாஜனங்களை நோக்கி, “மானிடர்காள்! உங்களிடத்தில் மேன்மை பொருந்திய சங்கையானதோர் மாதம் வரப்போகிறது அதன் பகற்காலங்களில் நோன்பு நோற்பதை அல்லாஹ்தஆலா உங்கள்மீது கடமையாக்கி வைத்திருக்கின்றான். அது சப்ருடைய மாதமாகயிருக்கும். பொருமைக்குக் கூலி சுவர்க்கமாகயிருக்கும்” எனக் கூறினார்கள்.

மானிடர்காள்! சஹ்ருடைய சாப்பாட்டைப் புசியுங்கள். அதில் பரக்கத்து உண்டாயிருக்கிறதென சர்வரே ஆலம் (ஸல்.) கூறியிருக்கின்றார்கள்.

யாராகிலுமொருவன் ஒரு நோன்பாளிக்கு நோன்பு திறப்பதற்காக ஏதாகிலுமொரு வஸ்துவைக் கொடுப்பானாகில் அவனுக்கு அளவற்ற பாக்கியம் கிடைக்கும்.

நோன்பாளியின் தூக்கமாகிறது வணக்கமாக இருக்கும். அவன் வாய் மூடியிருப்பதாகிறது(தஸ்பீஹ்) ஆண்டவனை துதிசெய்வதாகயிருக்கும். அவனுடைய பிரார்த்தனையானது ஆண்டவனால் ஒப்புக்கொள்ளப்பட்டதாயிருக்கும். அவனுடைய செயல்களுக்கு இரட்டிப்பான கூலி கொடுக்கப்படுகிறது என உலகரெட்சகர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

நோன்பாளிக்கு நோன்பு திறக்கும் நேரத்தில் ஒரு சந்தோஷமும், ஆண்டவனை சந்திக்கும் நேரத்தில் ஒரு சந்தோஷமும் ஏற்படுகிறதென காத்தமுந் நபிய்யீன் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.



நமது நான்காம் மலர்

ஏக வல்லமை பொருந்திய காருண்யக் கடலாம் நமதிறைவனான அல்லாஹ் ஜல்ல ஷானஹு வத ஆலாவின் கிருபானுகூலத்தாலும், சற்குண சீலர் உலக தயாளர் ஏகத்துவத் தூதர் (ஸல்.) அவர்களினது மாண்பு மிக்க திருஅருளாலும், உள்ளன்பு மிக்க மெய்யன்பர்களான தங்களனைவர்களின் ஆதரிப்பாலும் நம் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" என்னும் செழுமலர், மூன்றாண்டுகளைக் கடந்து இன்று நான்காம் வயதை அடைந்திருக்கிறதென்னும் சுபச்செய்தியை அறிந்த தாங்களெல்லீரும் சந்தோஷ சாகரத்தில் முழுகியிருப்பீர்களென கருதுகின்றனம். இற்றைய நாள்வரை அதன் அரும் இனிய தேன்களை உண்டுகளித்திருக்கும் அன்பர்களாகிய நீங்கள், அதன்மீது மோகங்கொண்டு மேன்மேலும் அதனைப் பருக அவாக்கொண்டிருப்பீர்களென்பது திண்ணம்.

தவிர, உங்கள் அரும் மாசிகையாம் "ஹிபாஜத்" என்னும் பாதுகாவலன் இதுவரை ஆற்றி வந்திருக்கும் அரும்பெரும் தொண்டுகள் அளவிடற்பாலனவாம். எனவே இஸ்லாமிய உயரிய நோக்கங்களையும் அதன் உண்மைத் தத்துவங்களையும் மானிடர்பால் நன்கெடுத்துக் காட்டி, வழிமாறிய போதனைகளும், மானிட வர்க்கம் முத்திபெறுவதைத் தடை செய்வதாகவுள்ள துற்பிரசாரங்களும் தலைகாட்டாது அழிந்தொழிந்து அவை இருந்த இடந்தெரியாது போவதற்காகப் பாதுகாவலன் ஆற்றியுள்ள அரும் தொண்டுகளைக் கண்டு நம் முஸ்லிம் உலகம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றது.

தவிர, உயிரைப் பாலிக்க உணவு அவசியமாவதாயின், அறிவைப் பாலிக்க அறிவுடைய கட்டுரைகள்—செய்திகள் முதலியன பொருந்தியநற்பத்திரிகைகளும்இன்றியமையாதனவாகும். அதிலும் பொதுவாய் இதுபொழுது நம் முஸ்லிம் சமுகம் இதரர்களால் தாக்கப்பட்டு வருவதுஒருபக்கல் கிடக்க, சிற்சில மாறுபட்ட கொள்கையினையுடைய வழிகெட்ட தீயப்பிரசாரகர்களால் பரிகசிக்கப்பட்டு வருங்காலை, அதனைக் கண்டித்துப் பொது மக்கள்பால் உண்மையை எடுத்துக்காட்டும் ஓர் அரும் கருவி வேண்டற்பாலனவே யாகும். ஒரு சமுகமோ, தேசமோ முன்னேற்ற மடைய வேண்டுமோயின், அல்லது மக்களிடையே பரவிவரும் தீய கொள்கைகள் ஒழிய வேண்டுமாயின் அதற்குப் பத்திரிகைகளே இன்றியமையாத சாதனமாகுமென்பது வெள்ளிடை. எனவே இத்தியாதி சிறப்பினையுடைய அரும் மாசிகையை நம் சமுகத்தினரனைவரும் ஒருமுகமாய் ஆதரித்து மேன்மேலும் ஓங்கச் செய்ய முயற்சிப்பார்களென்பதை நாம் மிக மிக எதிர்பார்க்கின்றோம். அதுதான் நம்மவர் கடமையுமாகும்.

அன்பர்காள்! இவ்வரும் மாசிகை உங்களுடையதாகும். உங்கள் மத, சமுக, வணிக உரிமைகளைக்காப்பாற்று வதற்கென்றே கச்சு வரிந்து கட்டிக் கொண்டிருக்கின்றது; உங்களுக்காக உங்கள் பகைவர்களை அடக்கி ஒடுக்க முனைந்து எழுகின்றது; உங்களில் ஒற்றுமையை உரம்படச்செய்து உங்களை வயிரம் போன்றதோர் சமுகமாக்கி வருகின்றது இவ்வுண்மைகளை உணர்ந்த நீங்கள், இனிவிழிப்புற்று ஆதரிக்க முன்வருவீர்களாக.

கடந்த மூன்றாண்டுகளாக பல நண்பர்கள் நம் அரும் மாசிகையின்மீது பேரபிமானங் கொண்டு சந்தாதார்களாகச் சேர்ந்தும், பற்பல சந்தாதாரர்களைச் சேர்த்து அனுப்பியும் பேருதவி புரிந்திருக்கின்றார்கள். அன்னவர்களுக்கு எங்களின் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்திக்கொள்வதோடு மேன்மேலும் உதவிபுரியுமாறும் வேண்டிக்கொள்கின்றோம். வாசகர்களனைவரும் இந்நான்காம் மலரின் முதல் இதழை ஏற்று மனமகிழ்வார்களென ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

இஸ்லாமிய வீரர்களின் தெய்வீக சக்தி.

நீலநிற வானத்தின்கீழுள்ள இப் பூப்பரப் பின்கண் சன்மார்க்க உதயகிரியினின்று பரிசுத்த இஸ்லாமெனும் சூரியன் உதயமாகி, தன் மெஞ்ஞான ஒளிமயமான வதனத்தை வெளிப்படுத்தி, மிக விசாலமான இப் பூப்பிர தேச மெங்கணும் தன் ஒளிக்கிரணங்களை வீசவே, யாண்டும் பரவி மலிந்து கிடந்த குப்ரென்னும் அந்தகாரமும், கார்மேகமும் நிலைகுலைந்து தாண்டவமாடலாயின. பிரிதோர் திசையினின்றும் வழிகேடு, நாஸ்திகம் என்னும் கார்மேகப்படலங்கள், அவ்வொளி மயச் சூரியனைப் போக்கிவிடலாமெனக் கிளம்பின. (அதாவது, பரிசுத்த இஸ்லாம் மதம் தோன்றி விக்கிரகாராதனையையும் நாஸ்திகத்தையும் போக்கி ஏக தெய்வவணக்கத்தைப் போதிப்பதைக்கண்ட விக்கிரகப்பூசகர்களும் வழி கெட்ட வர்க்கத்தினரும் முஸ்லிம்களை எதிர்க்க முற்பட்டனர்.)

மேலும் அஞ்ஞானக் குழாத்தினரான காபிர்கள், தங்கள் ஜனப்பலத்தோடு படை பலங்களையும் ஒன்று திரட்டிவந்து புதியவிருந்தினர்கட்கு நிகரான—சொற்பத் தொகையினரான முஸ்லிம்களை பலமாக எதிர்க்க முற்பட்டனர். எனவே அசத்தியப் பொருளாய விக்கிரகங்களை வணங்கும் முஷ்ரிக்கள் தங்கள் யுத்த சாதனங்களைத் திரட்டிக்கொண்டு யுத்தகளத்திற்கு வந்துவிட்டனர். எனவே இஸ்லாத்துக்கு விரோதமாய் நாட்டின்கண் பெரியதோர் புரட்சி ஏற்படலாயின. அதனால் ஒவ்வோர் விக்கிரகக் கோவில்களிலும் பெரும் பெரும் (அபாய அறிகுறி) "துவிஜங்கள்" ஏற்றப்பட்டன. ஆகவே, பெரும் பான்மையினராக யிருந்த குப்பாருலகமனைத்தும் ஒன்று திரண்டு இஸ்லாத்தை எதிர்ப்பதாயின. இஃது ஒளிவுடன் இருளும், சத்தியத்துடன் அசத்தியமும், ஆஸ்திகத்துடன் நாஸ்திகமும் போரிடுவதைப்போலிருந்தது.

கரிய நிழலைப் போக்குவதற்கு சொற்பத் தூய ஒளிவும், காரிருளை நீக்குவதற்கு ஒரே ஒரு பிரகாசக் கிரணமும் போதுமாயிருக்கிறதெனினும், தெய்வீக சக்தியின் பான்மை வேறு விதமாகக் காணப்பட்டது.

அதாவது, விருத்தாப்பியக்குழாத்தினரான குப்பார்களின் தொகை பெரும்பான்மையாக யிருந்தும் அதிகப்பட்ட சக்திவாய்ந்த சொற்ப வாலிப வீரர்களின் முன்னிலையில் எதிர்த்து நில்லாது வெட்கப்பட்டொழிந்தே போயிற்று. ஒருவர்க்கத்தினர் மிகக்குறைந்த தொகையினராயிருந்த போதிலும், அன்னேரிடையே ஐக்கியமும், சத்தியமும் ஊக்கமுமிருக்குமாயின், அன்னேரிடம் ஆயுதசாதனங்கள் மிகஅற்பசொற்பமாகயிருந்தபோதிலும், அவர்கள் அஞ்சா நெஞ்சத்தோடு முன்வந்து தம் வீரதீரப் பராக்கிரமத்தை உபயோகிப்பார்களாயின், அன்னேர் எடுத்த காரியத்தைச் சாதித்து பூரணவெற்றிப் பெறுவரென்பது திண்ணம். ஆகவே சத்தியவான்கள் அசத்தியத்தை யெதிர்த்தொழிப்பது அன்னேர்க்கு அஃதோர் அரிய காரியமன்று!

எனவே அக்காலத்தில், இஸ்லாத்தின் தியாகிகளும், இறைவனுடைய சன்மார்க்க தாஸர்களும், ஷரீஅத்தின் பக்தர்களும், மில்லத்தெ இப்ராஹீமை (இப்ராஹீம் (அலை)யின் ஆசாரத்தை)ப் பின்பற்றுபவர்களுமான முஸ்லிம்கள் எண்ணிக்கையில் மிகச்சொற்பமாக யிருந்ததுடன் மிகமிக ஏழைகளாகவும், வறுமையின் பிரஜைகளாகவு மிருந்தனர். ஆகையால்அன்னேர் ஜீவனேபாய சாதனம், சுகபோக வசதி முதலியவைகள் இல்லாதவர்களாகவே யிருந்தனர். ஆனால் அவர்களது எதிரிகளான குப்பார்களோ, இவ்வம்சங்களிலெல்லாம் மேன்பாடடைந்தவர்களாயிருந்ததோடு தொகையிலும் பெருத்தவர்களாயிருந்தனர்.

அதுகாலை எளியவர்களான முஸ்லிம்கட்கு உதவி புரிய எந்த அரசாங்கமும் முன்வரவில்லை. முஸ்லிம்களும் கொடிய காபிர்ப்படைகளோடு போர்த்தொடுப்பதற்கென்று எத்தகைய முன்னேற்பாடுகளும் செய்துகொண்டவர்களுமல்லர். இன்னேர், யுத்தக் கலைப் பயிற்சிக்கொப்ப, சேனைகளை அணிவகுத்தல்,

இனமினமாய்ப் பிரித்தல், தினமும் அப்பியசித்தல், பரீக்ஷித்துப் பார்த்தல், யுத்தப் பாஷைகளில் தேர்ச்சியடைதல், ஆயுதங்களை ஒழுங்காக இயங்கும்படி செய்தல் முதலிய எந்தப் பயிற்சியிலும் சட்டதிட்டப்படிப் பழகியவர்களுமல்லர். எந்த சேனாதிபதியின் கீழிருந்தும் பாடம் படித்தவர்களுமல்லர்.

அங்ஙனமிருந்தும், மாபெரும்சேனா சமுத்திரம் போல் திரண்டுவந்த குப்பார்கள் யாவரும் சொற்பத் தொகையினரான முஸ்லிம்களைக் கண்டு பயந்து நடுங்கியதின் காரணந்தானென்னே? காபிர்களோ பல வருடங்களாக முன்னேற்பாடோடு தயாராகி முஸ்லிம்களை எதிர்க்க வந்தவர்கள். முஸ்லிம்களோ சொற்ப நேர முன்னேற்பாடின்றி அவசர அவசரமாய்ப் புறப்பட்டு வந்தவர்களாவர். அங்ஙனமிருந்தும் காபிர்களை அச்சுறுத்தி நடுங்சச்செய்த அம்சம் சத்தியமென்னும் தெய்வீக சக்தியேயாம்!

உலக அனுபவத்தைநோக்குவோமாகில், யுத்தத்துக்குச் செல்லும் சிப்பாய்கள் பற்பல அம்சங்களில் சிறந்தவர்களாகவும், அநேக சௌகரியங்கள் அளிக்கப்பட்டவர்களாகவுமிருத்தலைக்காண்கின்றோம். உதாரணமாய் போற்சேவகர்களிடம் தற்காப்புக்கான ஆயுதங்களும், எதிரிகளைத் தாக்குவதற்கான ஆயுதங்களும் பல இருப்பதுண்டு. தவிர, அன்னோர் தம் குடும்பக்கவலை, மனைவிமக்களின் அன்னவிசாரம், தமது உணவு உடைகளின் ஞாபகம் முதலிய சகல தொல்லைகளைவிட்டும் நீங்கியவர்களாயிருப்பார்கள். இதற்கான உதவிகளையெல்லாம் குறைவற அளிப்பதற்கு பெரியதோர் பொக்கிஷ உதவியும் இருக்கும். அத்துடன்கூடயிருந்து போர்த்தொடுக்கும் துணைச்சிப்பாய்களும் போதிய தொகையினராயிருந்து தைரிய மூட்டினால்தான் சிப்பாய்கள் போர்க்களத்துக்கு வருவார்கள். இவ்வாறான உலகானுபவங்களையும், இஸ்லாமிய ஆரம்பகால முஸ்லிம்களின் நிலைமைகளையும் ஒப்புநோக்கின் மலைக்கும் அணுவுக்குமுள்ள வித்தியாசம் காணப்படும்.

இஸ்லாமிய பக்தர்களான சொற்ப முஸ்லிம்கள் “தெய்வீக சக்தியின்” உதவியில்லாது சுய சக்தி சாதனத்தினால் அம்மாபெருங் காபிர்ப்படையை முறியடித்து வெற்றிக் கொள்வதாயின், அக்காபிர்களைவிட அதிகத் தொகையினராகவும், உலகத்திற்றனில் சிறந்த ஏதேனுமோர் அரசாங்கத்தின் சகாயம்பெற்று உண்டுஉடுத்திப் பயிற்சிப்பெற்றுக் கொழுத்தவர்களாகவும், வறுமைப்பிணியை அனுபவியாதவர்களாகவும், குடும்பக்கவலையோ, மனைவிமக்கள் விசாரமோ இல்லாதவர்களாகவும், செல்வாக்கும் அதிகாரப் பதவியும் உடையவர்களாகவுமிருத்தல் வேண்டுமன்றோ? ஆனால்அம்முஸ்லிம்கள் உலக வியலான இவ்வம்சங்களிலெல்லாம் நேர்மாற்றமானவர்களாயிருந்தனர். ஓர் வேளை உண்டால் மறுவேளைக்கு வகையில்லாதவர்களாகவும், உடுத்தியிருக்கும் ஓர் உடையின்றிவேறுடைக்கு வகையில்லாதவர்களாகவும், ஜனங்களில் சிறிது செல்வாக்கு யில்லாதவர்களாகவுமிருந்தனர். தவிர அவ்வாரம்பகால முஸ்லிம்கட்கு எவ்வரசாங்க அதிகாரவர்க்கமும் எவ்விதபக்க உதவியும் புரிந்தது கிடையாது.

ஆகையால்,மேலேகூறப்பெற்ற பொதுஅம்சங்களை ஓர்த்துப் பார்க்குமிடத்து, முஸ்லிம் முஜாஹித்(மார்க்கவீரியன்)ஒருவன், தன்சுய சக்தியான பராக்கிரமத்தினால், தான் பல காபிர்களை வென்று வெற்றிப்பெற்றான் என்று சொல்வதற்கு யாதொரு முகாந்தரமுமில்லை. அங்ஙனமிருந்தும் முஸ்லிம்கள், “நாமே ஜயித்துவெற்றிக்கொடி நாட்டுவோம்” என்று தைரியங் கொண்டமைக்குரிய அந்தரங்க அம்சம் குப்பார்களில் கிடையாது. ஏனெனின், அசத்தியத்தை வணங்கும் குப்பார்கள் தங்கள் சேனை பலத்தையும் திறமையையும் உத்தேசித்துதான் அற்பசொற்ப நம்பிக்கையும் தைரியமும் கொள்ளக்கூடும்.

மேலும் உலக வியலின் போக்கையனுசரித்துப் பார்ப்போமாயின், போர்ப்படையினரில் இருக்கவேண்டிய பராக்கிரமம், ஆயுத பலம், தற்காப்புப்பொருள் முதலியவற்றிலும் காபிர்கள் முஸ்லிம்களைக்காட்டிலும் சிறந்தவர்களாயிருந்தனரே யல்லாமல் குறைந்தவர்களாயிருக்கவில்லை. ஏனெனின், காபிர்களிலும் வீர தீர பராக்கிரமசாலிகளும், மல்லர்களும், வல்லவர்களுமிருந்தரென்று சரித்திரம் கூறுகிறது. ஆகையால் முஸ்லிம்கள் காபிர்கள் மீது ஜயங்கொண்டு புகழப்பெற்றதற்கு, முஸ்லிம்களின் இயற்கையான வீரதீர பராக்கிரமம் பிரதான காரணமல்லவென்று நன்கு தெரிகிறது.

அங்ஙனமெல்லாமிருந்தும் சொற்ப முஸ்லிம் வீரர்களைக் கண்டு ஏராளமான காபிர்கள்

பயந்து நடுங்கியதற்கு மூலகாரணமான அம்சம் யாதென்பதை ஆழ்ந்து சிந்தித்துணரக் கடவோமாக:—அம்மூலகாரணமான அம்சம் சத்தியம் தான். முஸ்லிம்களில் சத்திய அம்சம் நிலவியிருந்தது ; அவர்களுடைய வாக்கிலும் அனுஷ்டானத்திலும் எண்ணத்திலும் சதா சத்தியமே நிரம்பியிருந்தது. சத்திய தெய்வ பக்தி அவர்களுள்ளத்தில் அலைமோதிக்கொண்டிருந்தது. உண்மை பேசுதல், சத்தியந் தவறாது ஒழுகல், தூயமனத்தோடு விளங்கள் முதலியவற்றில் முஸ்லிம்கள் சிறந்தவர்களாயிருந்தனர். முஸ்லிம்களுள்ளத்தில் சத்தியத்தின் மூலமான ஈமான் இலங்கிக்கொண்டிருந்தது. தெய்வ பக்தியும் மதப்பற்றும் சமூகாபிமானமும், சமத்துவ சகோதரத்துவ நேயமும் அன்னோர் தன்மையில் ஊறி உரைந்திருந்தது. இந்தச் சத்திய அம்சங்கள் தான் முஸ்லிம்களை ஜயசீலர்களாகச் செய்தனவாகும். இந்த சத்திய அம்சங்களின் முன் எவ்வித புஜபல பராக்கிர வீரதீர சிகாமணிகளாயிருப்பினும் ஒடுங்கி ஒளியவேண்டியவர்களேயாவர். முஸ்லிம்கள் சத்தியத்தின் தன்மையால் தெய்வீக உதவிபெற்றே ஜயம் பெற்றது உண்மையாதலினால்தான் அவர்களை இன்றளவும் உலக சரித்திரம் போற்றுகிறது. சர்வஜீவதயாபரனும் சத்தியத்தின் உரைவிடமுமான எல்லாம் வல்ல அல்லாஹ் தஆலாவும் அம்முஸ்லிம்களைநோக்கி அன்துமுல் அஃலவ்ன இன் குன்தும் மூமினீன் (நீங்கள்மூமின்களாயின், (நீங்கள்மேம்பாடுடையவர்களாவீர்கள்) என்று போற்றிப் புகழ்ந்துள்ளான்.

இனியும் எக்காலமும் சரியே முஸ்லிம்கள் பூரணமான மதபக்தியும் உறுதியான ஈமானும், சத்தியானுஷ்டானமும் உடையவர்களா யிருப்பார்களாயின், உலகத்தின் எப்பெரும் அரசியற்சக்தியும் அவர்களை முறியடிக்க முடியாதென்பது திண்ணம். எல்லாம் வல்ல அல்லாஹ் தஆலா முஸ்லிம்கட்கு பண்டைய முஸ்லிம்கட்கருளியதுபோன்ற ஈமானின் உறுதியை அருள்வானாக ! ஆமீன் !

மார்க்கந்தான் நம்மை மனுஷ்யராக்குகிறது.

ஒருகாலத்தில் ஐரோப்பா தேச முழுதிலும் மத வெறியே தாண்டவமாடிக்கொண்டிருந்தது. அவிவேக அந்தகாரங்கள் சிறந்து விளங்கிய அக்காலை, அநேகமாய் அம்மகா கண்டத்தின்கண் எத்திக்கிலும் நியாயரீதியான அரசாங்கமோ, சட்திட்ட ஒழுங்குகளோ இல்லாமல் சர்வமும்பாதிரிகள், அல்லது மதத்தலைவர்கள் எனப்படுவோர்களின் ஏதேச்சாதிகாரத்திலேயே இருந்து வந்ததென்பதற்கு சரித்திரம் போதிய சான்றுயிருக்கின்றது. எனவே அப் பாதிரிகள் கூடாதகாரியத்தைக் கூடுமெனவும், தகாத காரியத்தைத் தகுமெனவுஞ் செய்துவந்தார்கள். மேலும் அக்காலை துரதிருஷ்டசாலிகளான யூதவர்க்கத்தார்மீது, மனம் பதற்றமடையும் விதமான கொடுமைகளும் அதிக்கிரமங்களும் புரியப்பட்டுவந்தன. இங்ஙனம் அன்னவர்கள் கொடுமைக்காளானது, அன்னோர் திருடர்களாகவோ, கள்வர்களாகவோ அதிக்கிரமஸ்தர்க ளாகவோ, போக்கிரிகளாகவோ, பொய்யர்களாகவோ, மோசகாரர்களாகவோ இருந்தார்க ளென்பதற்காகவல்ல! ஆனால், அன்னோர் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றி யொழுகாமல் மூஸா நபியைமட்டும் தங்கள் தீர்க்கதரிசியாகவும் வழிகாட்டியாகவும் பற்றி யொழுகினர்கள் என்பதற்கேயாம். யூதர்களும் அக்காலை இறைவனையே வணங்கி வந்தனரெனினும், கிறிஸ்துவர்களுடைய ஆசாரமுறையைத் தெரிந்து கொள்ளாமல் தங்கள் வழக்கப்படியே வணங்கி வந்தார்கள்.

அக்காலத்தில் பாதிரிகளின் ' மதவெறி ' எம்மட்டும் உச்சஸ்தானத்தை அடைந்துபோயிருந்ததென்பதை கவனிப்போமாகில், தங்கள் கிறிஸ்துவ மார்க்கத்துக்குள்ளேயே ஒரு பிரிவார் மற்றொரு பிரிவார்க்கு ஜீவப்பகைவர்களா யிருந்து வந்தனர். எப்போதேனும் சந்தர்ப்பம் கிடைத்து விடுவதாயின் ' ரோ

மன் கத்தோலிக்' பிரிவின் பாதிரிகள், "புரோடெஸ்டாண்ட்" வர்க்கத்தை ஒடுக்கி ஒழித்துப் போடுவதற்கு ஒரு சிறிதும் பின் தயங்குவதில்லை. இங்ஙனம் எதிர்ப் பிரிவினரினின்று நூற்றுக்கணக்கானவும் ஆயிரக்கணக்கானவுமான மக்கள் கொல்லப்பட்டுப் போயுள்ளார்கள். மேலும், பெண்மணிகள் உயிரோடு தணல்விட்டெரியும் அக்கினிக்குண்டத்துக்கு இரையாக்கப்பட்டுப் போயுள்ளார்கள். மதத் தலைவர்களென்றும், பரிசுத்தர்களென்றும், உலகத்தில் ஆண்டவனின் பிரதிநிதியாய்த் தோன்றியவர்களென்றும் பாராட்டப்பட்டுவந்த பாதிரிகளே அவ்வக்கினிகுண்டத்தினருகில் நின்றுகொண்டு மனுஷ்ய சோதரர்களுடைய உடலின் மாமிசமும், கொழுப்பும் உருகிக் கரிந்து ஜ்வாலைவிட்டெரிவதை சிரித்த முகத்தோடு கண்டானந்தித்துக் கொண்டிருந்தார்கள். அம் மனிதப் பிணங்களின் துற்கந்தத்தை சகிக்கமாட்டாமல் வானப் பறவைகளும் அப்பால் ஓடிவிடுங்கால், சுத்தமான கூட்டத்தினரென அழைக்கப்பட்டு வந்த பாதிரிகள், தங்கள் மூக்கில் அங்கவஸ்திரத்தையுங் கூட வைத்துக்கொள்ளாமல் வேடிக்கை பார்த்து வந்தனர்!

பண்டையக் கிறிஸ்துமதக் குருவான பிரதமப் போப்புடைய கொலுச் சபையின் முன், மகா மகாப் பெரும் மன்னர்களெல்லாம் சிரம்பணிந்து செல்லவேண்டியவர்களா யிருந்தனர். மாபெரும் தீர்க்கதரிசிகளேபோலும், சமூக சீர்திருத்தக் கார்களேபோலும் தோன்றியிருந்த — தங்களை இயேசுநாதருடைய பிரதி நிதிகளென்று சொல்லிக்கொண்டிருந்த அன்னோர், மானுஷ்ய சமுதாயத்தின் அல்லல்களை நீக்கி சுபீக்ஷையளிப்பதற்காக ஏசுநாதர் என்ன வழியை வகுத்துச் சென்றுள்ளாரென்பதை ஒரு சிறிதும் உய்த்துணர்ந்து பாராமல், மானுஷ்ய சோதரர்களை அதாவது இறைவனின் அடியார்களாகிய தங்களைப் போன்றவர்களை அல்லல்கட்குள்ளாக்கி அன்னோரைத் தங்கள் அடிமைகளைப்போல் நடாத்திவருவதற்கான (கொடுங்கோன்) அந்தஸ்தைத் தாங்கள் பெற்றுவிட்டதாக அளவிளா இறுமாப்புக் கொண்டிருந்தார்கள்.

லண்டன் மாநகரின் கண்காட்சிசாலையில் வைக்கப்பட்டு இன்றும் இருந்துவரும் புராதன விலங்குகளையும், நசுக்குப் பலகைகளையும், துன்புறுத்தப்படும் இதர ஆயுதங்களையும் கண்ணுறுங்கால், நம்மனோரின் இன்னுயிரும் பதரிப்போய் விடுமென்பதி லய்யமில்லை. அக்கொடுங் கருவிகளெல்லாம் எதற்காக உண்டாக்கப்பட்டிருந்ததெனின், குற்றமற்ற எளிய பிறவர்க்க மக்களை அவற்றில் பூட்டி நெறுக்கி சித்திரவதைக்குள்ளாக்கித் தூக்கிடுவதற்கும், அதைக்கண்டு பாதிரிமார்களின் மனமும் ஆன்மாவும் ஆனந்த பரவசமெய்துவதற்குமேயாம். (ஆ! என்னேகொடுங்கோன்மை!)

இவ்வெதேச்சாதிகார அதிக்கிரமங்கட்கு, சரித்திராசிரியர்கள் "மதவெறி" என நாமகரணஞ் சூட்டியுள்ளார்கள். உண்மையை நோக்குமிடத்து இந்நாமகரணம் தவறான முறையில் சூட்டப்பட்டிருக்கிறதென்பது நன்கு விளங்கும். எனவே, மேலேகூறப்பட்டுள்ள அதிக்கிரம அட்டூழியங்களெல்லாம் மதத்தின் பெயரால் புரியப்பட்டு வந்ததனால், அங்ஙனம் மதவெறி யென்று அதற்கு நாமஞ் சூட்டமுனைந்து விட்டனரெனத் தெரிகின்றது. பாதிரிகள் மேற்கூறியவாறு அதிக்கிரமங்களைப்புரிந்துவிட்டு மதத்தின்பெயரைக்கூறிக்கொண்டு தப்பித் திரிந்தனரென்பது உண்மையே யாயினும் அவ்வக்கிரம வட்டூழியங்கட்கும் மதப் போதனைக்கும் எத்தகைய சம்பந்தமுங் கிடையாதென்பது திண்ணம். ஆகவே, அதற்குள்ள உண்மைக்காரணம் "தான்றோன்றித்தனமே" யாகும். பிர்ஒளனைப்போன்ற மூர்க்ககுணம் படைத்த பாதிரிகள் அவற்றை சுயமே ஏற்படுத்திக்கொண்டு அதனை பிழைப்புக்கோர் சாதனமாய்ச் செய்துகொண்டனர். தவிர, அதன் அனுகூலத்தால் பாமர மக்களின் மனங்களில் அச்சத்தையும் திடுக்கத்தையும் உண்டாக்கி, அன்னோர் தங்களையும் தங்கள் அதிகாரத் தன்மையையும் பாராட்டும்படிச் செய்துகொண்டார்கள்.

வஞ்சகம், மோசம், கொடுமை, அட்டூழியம், துர்க்கிருத்தியம் முதலியவைகள் ஒருபோதும் நிலைத்திருக்கமாட்டாது. அங்ஙனம் நிலைத்திருந்ததுங் கிடையாது. எனவே (மேற்கூறிய அட்டூழியம் நிகழ்ந்த காலத்தில்) ஓர் புரட்சி யேற்பட்டது. ஆம்! அஃதோர் மாபெரும் புரட்சியாகவே விளங்கிற்று. "அவ்

வக்கிரமங்களை இனி சகியோம்'' என்ற புத்
துணர்ச்சியோடு சில ஜனங்கள் தோன்றினர்.
அன்னோர் சத்திய வசனத்தை எடுத்துரைப்
பதில் தங்கள் இன்னுயிர்களை தியாகஞ் செய்
வதற்கும் பின் வாங்கினார்களில்லை. தம்
கௌரவம், செல்வம் முதலியவற்றிற்கு ஹானி
ஏற்பட்டுவிடுமென அஞ்சவுமில்லை. அங்ஙனம்
தோன்றிய மக்கள் சின்னாளில் ஒரு பெருங்
கூட்டத்தினராய்ப் பெருகிவிட்டனர். இன்
னோர் தங்களது பகீரதப் பிரயத்தனத்தினால்
சிறுகச்சிறுக, தான்றோன்றித்தனம் படை
த்த பாதிரிகளின் அதிக்கிரமங்கள் தலை தூக்
கா வண்ணம் ஒடித்து முறித்து ஒடுக்கி வர
லாயினர். இதில் அன்னோர் ஜயமடைந்தனர்.
ஆகவே மிருகாண்டித்தனங்களும், தான்
றோன்றிச் செயல்களும், எதேச்சாதிகார
தண்டனைகளும் முற்றும் ஒழிந்து போய்
விட்டன. அதனால் மானுஷ்ய சமுதாயத்
தினர்க்கு மனச்சாக்ஷிப் படி நடக்கும் உரி
மையும், சமசுதந்திர பாத்தியதையும்
கிடைத்துவிட்டன. இவ்வாறான உரிமை
களும் அனுகூலங்களும் அன்னோர்க்குக்
கிடைத்தபோதிலும் மனப்பூர்வமான திருப்தி
ஏற்படவில்லை. அதற்குக் காரணம் பொது
வாய் மதத்தின் பெயரில் அன்னோர்க்கு ஓர்
வித வெறுப்பேற்பட்டு விட்டதேயாகும்.
ஆயினும், அவர்கள் நற்குண சத்தொழுக்க
முள்ள நல்லோராய்த் திகழவும், நற்காரியங்
களைச் சாதிக்கவும், அமைதியாயும் சமரஸ
மாயும் வாழ்க்கை நடாத்தவும் விருப்பங்
கொண்டவர்களாய்த் திகழ்ந்தார் களாயி
னும், அன்னோர் மதத்தின்பெயரையெடுத்துக்
கொள்ளாமலே அக்கிரம அட்டூழியங்களை
யொழித்து அமைதியை நிலைநிறுத்தினர்;
ஆண்டவனின் கட்டளைகள் எனக் கூறிக்
கொள்ளாமலே ஒருவாறு தேச சமுதாய
சீர்திருத்தங்கள் புரிவதாயினர். இவ்வாறெல்
லாம் அன்னோர் புதிய சட்ட திட்ட அனுஷ்
டானங்களை ஏற்படுத்திக்கொண்டு நல்லோ
ராய் விளங்கினரெனினும், தாங்கள் 'ஒரு
மதத்துக்குக் கட்டுப்பட்டவர்கள்' என்று
கூறிக்கொள்ள சம்மத மில்லாதவர்களா
யிருந்துவந்தனர். தவிர சன்மார்க்கமானது
ஜன சமூகத்துக்கு என்னென்ன போதிக்கிற
தோ, அதைப்போலெல்லாம் அவர்கள் நடந்
தொழுகி வந்தார்களெனினும் அவற்றை
மதப்போதனையென்று கூறிக்கொள்ளவில்லை.
இவ்வாறு அன்னோர் உண்மைச் சன்மார்க்க
மொன்றின் ஆசாரத்தை மக்களிடை பரத்தி
வந்து அதற்கு "புதிய சட்டங்கள்"
என்று புதுப்பெயரும் வைத்துக்கொண்ட
னர்.

இவ்வாறாக சில நூற்றாண்டுகள் கழிந்தன.
பின்னும் இதுகாலை, பண்டைப் பாதிரி
களும் மதக் குருக்கள்களும் புரிந்துவந்தது
போன்ற தான்றோன்றித்தனமான வஞ்சகம்
மோசம், அக்கிரமம், அநீதி முதலியன வெல்
லாம், இக்கால சட்டதிட்டங்களின் பெயரால்
புரியப்படுவதாய்விட்டன. எனவே அதிகார
வர்க்கத்தில் எவ்வகையான நபர்கள் செல்
வாக்கும் பலமும் பெறுகின்றனரோ அன்
னவர்களே தம் மனோபீஷ்டங்களின்படி
சட்டங்களை யேற்படுத்திக் கொண்டு, அதன்
மூலியமாய் பிறர்க்குத் தீங்கும், சங்கடமும்
இழைத்து வருகின்றனர். இவ்வாறே முத
லாளிவர்க்கத்தினர், தொழி லாளவர்க்
கத்தாருக்குப் பாதகமான சட்டங்களை ஏற்
படுத்திக்கொண்டும், வெள்ளை நிறத்தினர்
கள் கருப்பு நிறமக்களுக்குப் பாதகமான
சட்டங்களை யேற்படுத்திக்கொண்டும் அதன்
மூலம் எளியோர்களை அவ்வலியோர்கள்,
சங்கடங்கட் குள்ளாக்கிவரலாயினர். தவிர
குளிர்மிகுந்த தேசத்தில் வதிந்து வந்தவர்
கள் சூரியோஷ்ணமுள்ளப் பிரதேசத்தைத்
தேடிச் செல்லலாயினர். நாகரிகம் பெற்ற
வர்கள், நாகரிகம் பெற்றிலாத எளியவர்க்
கத்தாரை ஆதீனங்கொண்டு அடக்கியொடு
க்கி அரசாக்ஷிப் புரிவதாயினர். இவ்விதப்
போக்கும், சமத்துவசமசுதந்தரமற்ற தாகை
யால் இது இயற்கைக்கு முரணானதாகும்.
இவ்வாறு பிறர்க்கு அடிமைப்பட்டிருப்பதை
மானுஷ்யத்தன்மையானது சகித்துக்கொண்
டிருக்க முடியாது. எனவே, அவ்வாதீனத்
துக்கு எதிரிடையாக இதுகாலை பல பகுதியி
னின்றும் கூச்சலுங்கிளர்ச்சியுங்கிளம்பி அமை
தியின்மைதோன்றிவிட்டது. எனவே தொழி
லாளிகள் முதலாளிகளுக்கு விரோதமாக
ஒன்று சேர்ந்தனர்; சகல மாந்தர்களையும்
சமத்துவ நிலையினராக்கி விடுவதற்காக
போல்ஷ்விக் திட்டமென்று (பொதுவுடை
மைக்கிளர்ச்சியை) ஆரம்பித்தனர். இத் திட்ட
நிபந்தனைகளில் அநேகம் விரும்பத்தகாதன
வாக விருந்தன. எனவே, செந்நிறத்தின
ரான வர்க்கத்தார் வெண்ணிறத்தினரான

வர்க்கத்தாரை வெறுத்து வேறுபடுவதாயினர். உஷ்ணப்பிரதேசத்தி லிருப்போருக்குக் குளிர்ப்பிரதேசத்து ஜனங்களின் நடத்தைகள் அறு வறுப்பாய்க் காணப்பட்டன.

இவ்வாறான பேதாபேதங்களின் காரணத்தால் பிணக்குகளுண்டாகி, உலகத்தின் ஐந்து மாபெரும்பூகண்டங்களிலும் ஒன்றாய்ச் சேர்ந்துவாழ்ந்திருந்த வர்க்கத்தினர்கள், சுயநலத்தையும் சுயாதீனத்தையும் கோரி சிறுசிறு பிரதேசங்களாய்ப் பிரிவினைப்பட்டு சிதறிவிட்டனர். இவ்வாறு பிரிந்தவர்க்கத்தினர்களில் ஒருசாரார் தம்மை ஆங்கிலேயர் என்றும், வேறு சாரார் தம்மை ஜர்மனியர் என்றும், இன்னொரு சாரார் பிரான்ஸிய ரென்றும், பிறிதொரு சாரார் ருஷ்ய ரென்றும் வேறு மற்றுஞ்சாரார் தங்களைத் துருக்கிய ரென்றும் ஈரானியரென்றும், சீனரென்றும், ஜப்பானியரென்றும் அழைத்துக்கொள்ளமுற்பட்டுவிட்டனரே யன்றி, ஒருவரும் தம்மை மனுஷ்யர் என்று சொல்லிக்கொள்ளத் துணியவில்லை.

அப்பிற நாடுகளல்லாத நம் ஹிந்துஸ்தான் தேயமும் மேனாட்டாரின் நடையுடைப்பாவனைகளைப் பின்பற்றி வருகின்றது. இதன் காரணமாய் இத்தேயத்திலும் ஒருவகுப்பார் சன்மார்க்கத்தை வீணானதென்றும், அநாவசிய மானதென்றும் எண்ணி அதனைக் கை விடுபவர்களாயிருந்து வருகின்றனர். இன்னோரின் இந்நிலை மென்மேலும் விருத்தியாகி வருமாயின், மேனாட்டுச் சமூகத்தினர்களைப்போல் நம் இந்துஸ்தானியர்களும் சன்மார்க்கத்தை உதறிவிட்டுத் தான்றோன்றித்தனமாய் சிலசட்டங்களை ஏற்படுத்திக் கொண்டு தாமே ஓர் செயற்கை மார்க்கத்தை ஸ்தாபித்துக் கொண்டுழலுங்காலம் வெகு தூரத்திலிருக்குமென்று எவருங் கருதவேண்டியதில்லை.

நிற்க, இதுகாலை மதத்தையும் ஆசாரத்தையும் உதறித்தள்ளிவிட்டு தான்றோன்றித்தனமாய் எதேச்சையான வாழ்க்கை நடத்திவரும் வர்க்கத்தார் முன்னையைவிட இதுகாலையே அதிகமான தொல்லையினும் சங்கடத்திலும் அமைதி யின்மையினும் உழன்று வருவதாய் அறிகின்றோம். அதனால், அவ் வர்க்கத்தாரின் தற்காலப் போக்கானது பயங்கரமான உயிரழிவையும், நாட்டு நாசத்தையும் உண்டாக்கும்படியான யுத்த சாதனங்களைத் தயார் செய்வதிலேயே கழிந்து வருவதைத்தெரிந்து கொள்கின்றோம். இவ்வாறெல்லாம், மனித வர்க்கத்தை அமைதியின்மையிலும், சங்கடத்திலும், நித்தப்பெரு விசாரத்திலு மாக்கிவரும் விஷயந்தான் யாதென்பது அன்னோரின் சிந்தைக்கு எளிதில் எட்டாமலிருந்து வருகின்றது. எனவே, நன்றாய்ஆழ்ந்துஉய்த்துணர்ந்து நோக்குமிடத்து, அவ்விஷயமானது, 'நம்மானிட வர்க்கம் சன்மார்க்காசாரத்தை விட்டு விரண்டோடி மேனாட்டாரின் தன்மையின் பக்கல் சார்வதற்கு மோகங்கொண் டிருப்பதேயாகும், என்பதைத் தெரிந்து கொள்கின்றோம்.

நம் நாட்டாரில் நூற்றுக்கு 94 பேர்கள் ஒன்றுமறியா மாக்களாய் வாழ்ந்திருந்து வருகின்றனர். இத்தகையோர் சுயமே எந்த விதத்திலும் உண்மையும் சத்தியமும் நிறைந்த சன்மார்க்கத்தைத் தெரிந்து அதனைப் பற்றிக்கொள்ள வியலாதவர்களாக யிருந்து வருகின்றனர். மேலும் நூற்றுக்கு 3 பேர்களே (நம் நாட்டு ஜனத்தொகையில்) உயர்தரக் கல்வியறிவுள்ளவர்களாகக் காணப்படுகிறார்களெனினும், அன்னோர் ஆங்கிலேய போதனாமுறையில் ஆழ்ந்துவிட்டதன் காரணத்தால், மேனாட்டு நவநாகரீகக் காதலில் மனஞ் சொக்கியவர்களாய் இருக்கின்றனர். இதுவன்றி ஆங்கிலங் கற்றோரிற் சிலர், அறியா மக்களால் மார்க்கத்துள் புகுத்தப்பட்டுள்ள சில நூதனங்(பித்அத்)களைக் கண்டு, இவ்வித பித்அத்துகள் தான் சன்மார்க்கம்போலும்! என தவறாகக் கருதி, வீணே நாஸ்திகத்தின் பக்கல் தங்கள் மனதைத் திருப்பிவிடுகின்றனர். இவ்வாறே அன்னோரும் சிறுகச் சிறுக முன்னேறி இறுதியில் ஐரோப்பியருடைய திண்டாட்டமான வாழ்க்கையில் சிக்குண்டு போய் விடுகின்றனர்.

ஐரோப்பியர்கள் தவறான முறையில் சன்மார்க்கத்தை உதறித் தள்ளியதினால் விசாரத்தையும் அமைதியின்மையையுந் தவிர வேறெவ்வித நன்மையையும் பெற்றுக்கொண்டனரில்லை. எனவே ஐரோப்பியரைப் பின்பற்றி யுழலும் நம்மவரி லுள்ளோர்க்கும் இதே கதிதான் வாய்க்குமென்பதில் ஐயமில்லை.

மானுஷ்ய வாழ்க்கையில் மனத்திருப்தியும் சாந்தியும் ஏற்படவேண்டுமானால், அப்

பாக்கியமானது, மனுஷ்யசமுதாயம்,லோகாயதப் பற்றைப்பார்க்கிலும் ஏக இறைவனது வணக்கத்தின்பக்கல் திரும்புவதினுல் தான் கிடைக்கப்பெறும். ஏனெனின் லோகாயத்தின்மீது மிகுதமான பற்றுக் கொள்வதானது, நம்மானுஷ்ய வாழ்வின் விசால நோக்கத்தையும் குறுகியதாகச் செய்துவிடுகின்றது. இது தகாத காரியமேயாகும். இதனுல் நாமெல்லோரும், பொதுவாக மனுஷ்யக்கோடியனைத்துக்கும் அனுகூலஞ்செய்யும்முறையில் சகல வேற்றுமைகள், நிற வித்தியாசங்கள் யாவற்றையும் அகற்றி மனுஷ்ய ஊழியஞ் செய்வதற்கு பதிலாய், தம்தம் சுயநலப் போக்கிலிறங்கி, நம் ஊழியத்தை குறுகிய நோக்கத்தில் நம் கூட்டத்தில்மட்டுமேனும், நம் இனத்தில்மட்டுமேனும், நம்குடும்பத்தில் மட்டுமேனும், இறுதியாய் நம் சுயநபரில் மட்டுமேனும் செய்து அதனைச் குருகியதாய்ச் செய்துகொள்கிறோம்.

எனவே, கடவுள்வணக்கமானது நம்மவர்களின் சுபாவ நோக்கத்தை மிக விசாலமானதாகச் செய்துவிடுகிறது. இதனுல் நாம், நம் குடும்பத்துக்கும், நம் இனத்தார்க்கும், நம் கூட்டத்தினருக்கும் முடிவாய் சர்வ மனுஷ்யவர்க்கத்தாருக்கும் அனுகூலமான ஊழியம் புரிபவர்களாகின்றோம். இதுமட்டுமல்ல! இறைவனின் வணக்கமானது, நம்மை பரோபகாரியாய் உழைக்கச்செய்வதோடல்லாமல், நமக்கு நஷ்டம் நேரிடினும் பிறர்க்கு அனுகூலஞ்செய்ய வேண்டுமென்ற தத்துவத்தை நமக்குப் புகட்டுகின்றது.

நாம், ஆண்டவனுடைய அடியார்கட்கு ஊழியம்புரிந்து இறைவனின் திருப்தியையும் அருளையும் பெற்றுய்யுமாறு சன்மார்க்கமானது நம்மவர்க்கு வழி கற்பிக்கின்றது. மேலும் ஏக இறைவன் சர்வலோக இரக்ஷகனுக (ரப்புல் ஆலமீனுக) இருக்கின்றான். அவன் தன் அடியார்களெல்லோர்மீதும் அதிக விசுவாசமுள்ளவனுக யிருக்கின்றான். ஆகையால் நாம் அவனது குணத்தை ஏற்று நடப்பதற்காகவும் அவ் விறைவன் நம்மீது சந்தோஷ முடையவனுக இருப்பதற்காகவும் நாம் செய்யவேண்டிய காரியம், இறைவனின் அடியார்களாகிய உலக மாந்தர்பால் நாமும் விசுவாசங்கொண்டு, நல்லூழியம் புரிவதேயாகும்.

எனவே சகல மாசுக்களைவிட்டும் தூய்மையான (இஸ்லாமிய) சன்மார்க்கந் தான் நம்மவர்கட்கு அந் நல்லம்சங்களைக் கற்பிக்கின்றது. ஆகையால் சன்மார்க்கத்தை விட்டும் விலகிப்போய் தான்றோன்றித் தனமாய் இருப்பதுகொண்டு நாம் ஒருபோதும் "மனுஷ்யனுக முடியாது" என்பது திண்ணம்.

முஸ்லிம்களும், தொழில் முறையும்.

மகா மேன்மையும் கீர்த்தியும் வாய்ந்த அல்லாஹ்த ஆலாவாகிறவன், நன்மை செய்தோருக்கு நற்கூலி கொடுப்பதற்காகவும் தீயோருக்கு தெண்டனை அளிப்பதற்காகவும் மறுமைநாளைக் குறிப்பிட்டிருக்கின்றான் என்பதும், ஜீவனஞ் செய்வதற்காக வேண்டியனவற்றைத் தேடிக்கொள்வதற்காகவும் மறுமைக்காக வேண்டியனவற்றைத் தயாரித்துக் கொள்வதற்காகவும் இவ்வுலகத்தை ஏற்படுத்தி யிருக்கின்றான் என்பதும் யாவருக்கும் மறைந்ததன்று. ஆகவே மறுமை என்பது இம்மைக்குப்பிறகு ஏற்படக்கூடியதென்பதையும், இம்மையானது மறுமைக்குவேண்டியனவற்றைத்தயார்செய்துகொள்வதற்குத் தக்க இடமென்பதையும் நன்கு தெரிந்துகொள்கின்றோம். இதற்காகத்தான் எம் பெருமானர் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள், "உலகமானது மறுமைக்கு வேண்டியனவற்றை வெள்ளாமை செய்துகொள்ளக் கூடிய இடமாக இருக்கும்" எனக் கூறியிருக்கின்றார்கள். எனவே, இப் பூவுலகின்கண்ணுள்ள ஒரு ஜமீன்தார், விரை, விரைக்காமலும் யாதொரு கஷ்டத்தை அடையாமலுமிருந்துவிடுவானுயின், அவன் அறுவடை காலத்தில் கைசேதமடைந்து துக்கத்தை அனுபவிக்க நேரிடுவதுபோல், மானிடன்

தமது உலகவாழ்க்கைக்குத் தேவைப்படுபவைகளைச் சம்பாத்தியஞ் செய்துகொள்ளாமலும், மறுமைக்கு வேண்டியனவற்றைச் சேகரித்து வைத்துக்கொள்ளாமலு மிருந்து வீடுவானாகில், பிறகு, அவன் மறுமையில் துக்கத்தோடு கைசேதமடையும்படி நேரிடும். ஆனால் அவ்வாறு அடையும் கைசேதங்கள் யாதொரு பிரயோசனத்தையும் அளித்து விட மாட்டா தென்பது திண்ணம். ஆகவே முஸ்லிம்கள் மறுமையைப் பிரதானமாகக் கொண்டு தான் இவ்வுலக வாழ்க்கையிலீடுபட வேண்டுமென்பதை நன்கு தெரிந்து கொள்கின்றோம்.

மானிடர்கள் உலகத்தைத் தேடும் விஷயமாய் மூன்று வகையினராகஇருக்கின்றார்கள். (1) மறுமையின் ஞாபகத்தைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வராமலே மறுமைக்குப் பகரமாக உலகவாழ்க்கையைத் தெரிந்து கொண்டவர்கள் இவர்களுக்கு மறுமையில் எவ்வித சம்பந்தமுமில்லை. இவ்வாறு உலக வாழ்க்கையையே கட்டி அழுதுகொண்டிருப்பவர்கள் நாசமடைந்தவர்களாகும். (2) இவ்வுலக வாழ்க்கையை விடுத்து மறுமையைத் தெரிந்துகொண்டவர்கள். இவர்கள் ஜெயம் பெற்ற வர்கத்தைச் சார்ந்தவர்களாகும். (3) மறுமைக்காகவேண்டி உலகத்தைத் தெரிந்து கொண்டவர்கள். இவர்கள்தான் ஒழுங்கான தக்கவழி முறையில் நடப்பவர்களாகும். இதைத்தான் மானிடர்கள் பின்பற்றியொழுகவேண்டுமென ஹஸ்ரத் இமாம் கஜ்ஜாலீ (ரஹ்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். ஆகவே முஸ்லிம்கள் மறுமையில் இன்புற்று வாழ்வதற்காக உலகவாழ்க்கையிலீடுபடுவது அத்தியா அவசியமாகும் என்பதை நன்கு தெரிந்துகொள்கின்றோம்.

ஜீவனத்தின் வழியைத் தேடுவதின் அவசியம்

“நாம் (மானிடர்கள் தங்கள்) ஜீவனத்திற்குள்ள வழியைத் தேடிக்கொள்வதற்காக பகற்காலத்தைப் படைத்திருக்கிறோம்” என அல்லாஹ்த ஆலா அறிவித்திருக்கும்போது, ஜீவனஞ் செய்வதற்காகப் புரியப்படும் தொழில் முறையின் மேன்மையையும் சிறப்பையும் நாம் நன்கு தெரிந்துகொள்கின்றோம். ஆதலின் அல்லாஹ்த ஆலா பகற்காலங்களை ஜீவனஞ் செய்வதற்குத் தேவையுள்ள வஸ்துக்களைத் தேடிக்கொள்வதற்காகப் படைத்திருப்பதால், ஒழுங்கானமுறையில்-சன்மார்க்கத்திற்குப் பொருத்தமான முறையில் நாம் பகற்காலத்தைச் செலவிடுவோமாகில், நாம் நன்றியறிதலுள்ளவர்களாய் விடுவோ மென்பதுதிண்ணம். இதுவன்றி காலங்களை வீணில் போக்குவோமாகில், நாம் நன்றிகெட்டவர்களாய் விடுவோமென்பது வெளிப்படை.

“எவனொருவன் தன் குடும்பத்தாருக்காகவும், பிள்ளைகளுக்காகவும் தேவைப்படுபவைகளை ஒழுங்கான முறையில் சம்பாத்தியஞ் செய்வதற்காகத் தொழிலி லீடுபடுகிறானோ, அவன் மறுமையில் ஆண்டவனை மிக சந்தோஷமான முறையில் சந்திப்பானென்றும், ஒழுங்கான முறையில் வியாபாரஞ் செய்யும் வர்த்தகன் மறுமை நாளில் ஜெயம் பெற்ற கூட்டத்தாருட னிருப்பானென்றும்” எம் பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

“உங்களில் யாரும் யாதொரு தொழிலி லீடுபடாது அல்லாஹ்தஆலா தமக்கு (ரிஜ்க்) இரணத்தைக் கொடுப்பான் எனக் கூறிக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டாம். வானத்திலிருந்து வெள்ளி தங்கம் முதலியவைகள் இறங்கி வருவதில்லை” என ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

உண்மையாக நடக்கக்கூடிய வியாபாரி மேலானவரா? அன்றி சாதாரணமாக வணக்கம் புரிந்துகொண்டிருக்கும் ஆபித்சிலாக்கியமுடையவரா? என ஹஸ்ரத் இப்றாஹீம் இப்னு அத்ஹம் (றஹ்.) அவர்களிடம் கேழ்க்கப்பட்டபோது, உண்மையான வியாபாரிதான் மேலானவராயிருக்குமெனக் கூறிவிட்டு, அவரிடம் நிறுவையிலும் அளவையிலும் குறைவு செய்யும்படியும் லேவாதேவி செய்பவர்களை ஏமாற்றும்படியும் சதாவும் ஷைத்தான் கூறிக்கொண்டிருக்கும்போது, இவ்வர்த்தகர் அவனுடன் பகல் முழுதும் யுத்தஞ்செய்து உண்மையைக் கைகொண்டு நடந்துகொள்கின்றார். இதனால் அவ்வர்த்தகர் மேலானவராகயிருக்கும் என அறிவித்தார்கள்.

இக்காலை ஜீவனத்தைத் தேடுவதற்குள்ள வழியும், அபரிமிதமான ஐசுவரியங்களைத் தேடுவதற்குள்ள மார்க்கங்களும் அநேகமாய் வியாபாரஞ் செய்வது, வெள்ளாமைபுரிவது,

க்கைத்தொழில் செய்வது ஆகிய இம்மூன்று விஷயங்களினுல்தான் ஏற்படுகிறதென்று தெரிந்துகொண்டு அதனைக் கைகொண்டு நடக்கமுற்படுவதினுல், இக்காலே இவ்வுலகின்கண் அநேகர் ஐசுவரியவான்களாகத் திகழ்வதைக் காண்கிருேம். அதிலும் முக்கியமாய் வியாபாரம்புரிவது இக்காலத்திற்கேற்ற சாதனமெனக் கருதப்பட்டு வருகிறது. எனவே ஐரோப்பாவின் கண்ணுள்ள பெரிய பெரிய ராஜங்கங்களும், அமெரிக்கா, ஜப்பான், ஜர்மனி முதலிய தேயங்களும் தற்கால வியாபாரங்களிலேயே ஈடுபட்டு அதிலேயே தமது முழுகவனத்தையும் உபயோகப்படுத்தி வருகின்றது.

இதுவன்றி நமது சன்மார்க்கமும், மானிடர்களின் ஜீவிப்புக்கு அத்தியா அவசியமானவைகளைச் சம்பாத்தியஞ் செய்வதற்கு, வியாபாரத்தையே பிரதானமாகக் குறிப்பிட்டிருக்கின்றது. எம்பெருமானர் (ஸல்.) அவர்களும் வியாபாரத்தி லீடுபெட்டிருந்திருக்கின்ருர்கள். இதுவன்றி அநேக சஹாபாக்களும் வர்த்தகத்திலீடுபட்டு சம்பாத்தியஞ் செய்து ஜீவனஞ்செய்திருக்கின்ருர்கள். தவிர அநேக மகான்களும் வியாபாரத்தைத் தங்கள் காலக்ஷேபத்திற்கு இன்றியமையாத சாதனமெனக்கருதி, அதிலீடுபட்டுவந்திருக்கின்ருர்கள். மேலும் வியாபார சம்பந்தமாய் நாம் அனுஷ்டித்து நடக்கவேண்டிய எத்தனையோ விஷயங்கள் பிக்ஹுடைய கிரந்தங்களில் கூறப்பட்டிருப்பதைத் தெரிந்துகொள்ளலாம். ஆகவே நஞ்சோதிரர்கள் ஒழுங்கான சன்மார்க்கத்திற்குகந்த தக்க முறையில் ஜீவிப்புக்குத் தேவைப்படுபவைகளைத் தேடுவதில் பிரயாசை எடுத்து அதிலுள்ள கெடுதிகளைவிட்டுத் தவிழ்ந்து இதரர்களுக்கு அநீதி புரிவதைவிட்டு விலகி, கொடுக்கல் வாங்கல் முதலியவற்றில் அநீதி மோசம்புரியாது தக்க முறையில் நடந்து வருவார்களாக.

பண்டைய இஸ்லாமியத் தொழில் முறை

(மலர் 3, இதழ் 11-ன், 490-ம் பக்கத்தொடர்)

பண்டைய இந்திய வர்த்தகநிலே

பதினோராம் நூற்ருண்டின் கப்பற்ருெழிலேப்பற்றியும், வர்த்தகநிலைமையைப் பற்றியுமான வரலாறுகள் 'அல்பேறானீ' வாயிலாக நம்மவர்க்கு நன்கு தெரியவந்துள்ளன. எனவே தங்களை "பேருஜ்" என்றபெயரால் பிரசித்தப் படுத்திக்கொண்டு, "பேர்ஜா" என்னும் பெயருள்ள தங்கள் கப்பல்கள் மூலம் மேற்குப்பிரதேசக் கடற்பகுதிகளில் கடற் கொள்ளைப்புரிந்து, கள்ளத் தொழில் செய்துவந்த வர்க்கத்தாரைப்பற்றி 'பேருனி'' வாயிலாய்த் தெரிந்துகொள்ளுகின்ருேம்.

கூர்ஜரத்தின் துறைமுகப் பகுதியானது அத்தேசவியாபார நிலைமைக்குப் போதிய பிரபல்யமும் சௌகரியமு முடையதா யிருந்து வந்தது. அவ்விடத்தினின்று ஒவ்வொரு பிறதேசத்துக்கும், பிரிதோர் நகரத்துக்கும் சர்க்கரை, மஞ்சள் முதலிய சரக்குகள் அதிகமாக ஏற்றுமதியாகிக்கொண்டிருந்தன.

அத்தகைய காலத்தில் மலபார் தேயமானது வியாபாரத்துறைக்கு ஹிந்துஸ்தானின் வாயல் என்ற பெயரால் பிரசித்திப்பெற்றிருந்தது. இவ்விடத்திற்கு இராக், குராஸான், ஷாம், ரூம், ஐரோப்பா ஆகிய தூர தேசங்களி லிருந்தெல்லாம் முத்துக்களும் வைரங்களும் கொண்டுவரப்பட்டு வர்த்தகம் நிகழ்பெற்று வந்தது. இதல்லாமல், சீனப் பாஷையில் "ஜனக்" என்றழைக்கப்படும் மாபெரும் கப்பல்கள்மூலமாய் பலவிதமான துணிகள் அங்கு இறக்குமதிச் செய்யப்பட்டு வந்தன. கி. பி. 1328-ம் ஆண்டில் வாஸிப் என்பார் அந்தக் கப்பல்களைக் கண்டுள்ளார். ஆகவே அவர் "அக்கப்பல்கள் சமுத்திரத்தின்மீது நீய்ந்துச் செல்லுங்கால், பெரும் பெரும் மலைகளே நகர்ந்து செல்வதுபோல் காணப்படும்" என்று அக்கப்பல்களைப்பற்றி சிலாகித்துக் கூறியிருக்கின்ருர்.

மேலும் 'அல் இத்ரீஸி' வெளியிட்டுள்ள விஷயங்களினின்று தெரிய வருவனவாவது:-

பன்னிரண்டாவது நூற்றாண்டின்போது, "சிந்து தீவால்" என்னும் பிரதேசத்துறை முகமானது, மகாப்பிரம்மாண்டமானதாயிருந்தது. அவண் சீனு, உம்மான் இன்னும்மற்றும்பல தூரதேசங்களின் கப்பங்கள் அங்கு வந்து இறக்குமதி ஏற்றுமதிச் செய்வதுண்டு. அங்கு காரு மண்டலத்தின் துணிகள், மலபாரின் மிளகுகள் முதலியவற்றின் வியாபாரம் மிக மும்முரமாய் நடைபெற்றனவென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கியாஸுத்தீனின் கடற்படை.

"கியாஸுத்தீன் பல்பன் என்பார் வங்காளத்தின் கவர்னரான தொக்றல்கானுக்கு எதிரிடையாக அனுப்பிவைத்திருந்ததும், டில்லியில் புரட்சியை அடக்கி சுயேச்சாதிகாரத்தை ஸ்தாபித்து பகிரங்கப் படுத்தியதுமான படையே பதின்மூன்றும் நூற்றாண்டின் போது, மிகப் பெரிய கடற்படையாயிருந்தது. இப்படைக்கு எதிரிடையாக தொக்றல்கான் இரண்டு படைகளை அனுப்பியிருந்தான். இவை யிரண்டும் அபஜயமடைந்தன.

அதன்பின் சுல்தான் கியாஸுத்தின், தாமே தம் சேனைகட்குத் தலைமை வகித்துப் போர் நடத்தினர். இன்னவர் சொந்தமாக அநேகக் கப்பற்களையும் படகுகளையும் தயார் செய்து கங்கா நதிதீரத்திலும், யமுனா நதியிலும் ஓட்டிவைத்தார். பிறகு ஸுல்தான் டில்லியிலிருந்து 'ஊது' என்னும் மாகாணத்துக்குச் சென்றார். அங்கு இவருடைய ஆதீனத்தின்கீழ் இரண்டு இலக்ஷம் சிப்பாய்கள் சேர்ந்தார்கள். அன்னவர் தயாரித்த கப்பல்களின் வாயிலாகவே அவ்விரண்டு இலக்ஷ சேனைகளும் "கார்க்கரு" நதியைக் கடந்துச் சென்றன. அதன் பின் மழைகாலம் ஆரம்பமாகிவிட்டது. ஸுல்தானிடம் கப்பல், படகு ஆகிய சாதனங்கள் அபரிமிதமா யிருந்துங்கூட அன்னோர் அளவிறந்த கஷ்ட நஷ்டங்களி லீடுபட்டுழலவேண்டியதாயிற்று.

எனவே ஸுல்தான் கியாஸுத்தீனுடைய படைகள் முன்னேறிவந்துவிட்ட விஷயத்தைக் கேள்வியுற்ற எதிரியாகிய தொக்றல் திடுக்கமடைந்தவனுகி, லக்னோ என்ற இடத்தைவிட்டு ஜாஜ்நகருக்கு ஓடிவிட்டான். ஆயினும் ஸுல்தான்பல்பன், அவனைப் பின் தொடர்ந்துசெல்லலானர். எனவே சின்னாட்களுக்குள் "ஸுனர்காவுன்" என்னு மூருக்குப் போய்ச் சேர்ந்தார். அவ்விடத்திலிருந்து வந்த அதிகாரியை ஸுல்தான் கண்டு பேசி "தொக்றலுக்கு, நதியைக் கடந்து செல்வதற்கு இடமளிக்கக் கூடாதென்று" ஒப்பந்தஞ் செய்துகொண்டார். அதன்பயனுய் தொக்றலுடைய சேனைகள் தோல்வியடைந்து தொக்றலுங்கொல்லப்பட்டுப் போகவே, சுல்தானின் படையெடுப்பு முடிவடைவதாயிற்று. எனவே ஸுல்தான் அப்புரட்சிக்காரர்களையெல்லாம் அடக்கி ஒடுக்கிவிட்டுமீண்டும் டில்லிக்கு வந்துசேர்ந்தார்.

13-ம் நூற்றாண்டின் நிகழ்ச்சிகள்

பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதியில், ஹிந்துஸ்தானுக்கு யாத்திரீகராய் வந்திருந்த அன்னிய நாட்டுப் பிரயாணிகளில் பிரசித்தியானவர்கள் திம்ஷ்கு தேசத்து 'அபுன்னிதா' என்பாரும் 'மார்க்கோ போலோ' என்பாருமாவர். 'அபுன்னிதா' என்பார் நேர்த்தியான வஸ்திரங்கள், கரும் மிளகு ஆகியவற்றின் அக்கால வர்த்தக நிலைமைகளைப் பற்றிப் பிரஸ்தாபித்துள்ளார். 'மார்க்கோ போலோ' என்பார், காருமண்ட துறைமுகப்பட்டணத்தில் நிகழ்ந்த முத்துக்களின் இறக்குமதி விற்பனை விஷயத்தைப்பற்றியும், கூர்ஜரத் துறைமுகத்தில் நிகழ்ந்த கடற்கொள்ளைக்காரர்களின் ஆர்பாட்டங்களைப் பற்றியும் பிரஸ்தாபித்திருக்கின்றார். அவ்விதக் கடற்கொள்ளைக்காரர்கள் வழக்கமாக வெய்யிற் காலங்களில் தம் மனைவி மக்களுடன் கப்பலேறி சமுத்திர மத்தியிலிருந்து கொண்டுஇதரவர்த்தகக்கப்பல்களைக் காணுங்கால் விரைந்தேகி கொள்ளையடித்து அதனல் காலக்ஷேபஞ் செய்வார்கள்.

மார்க்கோபோலோ என்பார் "கோலம்" துறைமுகத்தைப்பற்றி யெழுதி யிருப்பதாவது :—இவ்விடத்தில் சுக்கு, கரும் மிளகு, நீலம் முதலிய பொருட்களின் வர்த்தகம் மிக மும்முரமாக நடைபெற்று வந்தது. அராபியா, பர்ஷியா (ஈரான்) முதலியதேசங்களின் வியாபாரிகள் தங்கள் கப்பல்களை இங்கு வியாபார நிமித்தம் கொண்டு வருபவர்களாகவுமிருந்தனர்" என்பதே.

மேலும் கோலம் என்னும் துறைமுகத்தைப்பற்றி "இப்னு பத்தூத்தா" எழுதி

யிருப்பதாவது :—“ மலபார் பிரதேசங்களில் இந்தநகரந்தான் மற்றெல்லாவற்றையும் விட வனப்பு மிகுந்ததாயிருந்தது. இங்குள்ள கடை வீதிகளும் மிக நேர்த்தியானவையா யிருந்தன. இவ்விடத்து வியாபாரிகள்மா பெரும் பிரமுகர்களாக யிருந்து வந்தமை யால், சாமான்களை கப்பல் கப்பலாக வாங் கிக்கொள்ளும் ஆற்றலுடையவர்களாயிருந்து வந்தனர். அங்ஙனம் வாங்குவனவற்றை உட னுக்குடன் ஏலத்தில் விற்றுவிடுவார்கள். முஸ்லிம் வியாபாரிகளும் அங்கு அதிகமாக வே இருந்துவந்தனர்'' என்பதாகும்.

மேலும் மார்க்கோ போலோ எழுதி யிருப்பதாவது :—“ கோலம் பகுதியில் மஸா லா தினுசுகள் அதிகம் கிடைக்காவிட்டா லும் வாசனை திரவியங்கள் அதிகமாய்க் கிடைத்துவந்தன. மேலும் இங்கு வியாபாரி கள் தங்கள் கப்பல்களோடுசதாவும் இருந்து வந்தார்கள். இவ்விடத்தினின்று தோல், பஞ்சு, ஒருவிதத் துணி முதலிய சரக்குகள் ஏராளமாக ஏற்றுமதியாகிக் கொண்டிருந் தன. தவிர கும்பாத் என்னும் பிரதேசத் தில் நீலம் அபரிமிதமாய் உற்பத்தியாகிக் கொண்டிருந்தன. இதுவன்றி விதவிதமான நேர்த்தியான மெல்லிய துணிகள், பஞ்சு கள் முதலியனவும் இவ்விடத்தினின்று ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தன. இங்கு தோல்வர்த்தகமும் அதிகமாய் நடைபெற்று வந்தது.

கப்பல்தொழிலின் நேர்த்திகள்

மேலும்மார்க்கோபோலோ இன்னும் பல தகவல்களையும் தெரியப்படுத்தியிருக்கின்றார். அதாவது—“ பற்பலவிதமான சரக்குகள் ஏற்றப்பட்ட இந்தியாவின் வியாபாரக் கப்பல் கள் காலாகாலத்தில் ‘அதன்’ தேசத்துக்குச் சென்று கொண்டிருந்தன. ஹிந்துஸ்தானத் துக் கப்பல்கள் வியாபாரத்தின் நிமித்தம் ஜஞ்ஜிபார்க் தேசம்வரைப் போய்வந்துக் கொண்டிருந்தன. அவை இருபது நாட்களுக் குள் அங்குபோய் சேர்ந்துவிடக் கூடிய சாத னம் பெற்றனவாயு மிருந்தன என்பதே.

மேலும் இந்தியா கப்பல்செய்யுந் தொழி லும் போற்றத்தக்க விதமாய் இருந்தது. கப் பல் நிர்மானிப்பதற்கு ‘ ஸனோபர்’ என்னும் விருக்ஷத்துப்பலகைகள் அபரிமிதமாய் உப யோகிக்கப்பட்டுவந்தன. கப்பல்கட்கு பலகை களை இரட்டையாக இணைத்துப் பொறுத்தி திவைப்பர். இப்பலகைகளை வெளிப்புறமும் உட்புறமும் கீல், ஆணிகளால் இணைத்து உறு திப்படுத்திவைப்பர். பலகைகளின் கீழ்பா கத்திலும் இடுக்குகளிலும் ஜலம் கசியாம லிருப்பதற்காக பட்சன் என்னும் பொருளும் சுண்ணும்புங்கலந்து பூசிவந்தார்கள். அதன் மீது (ஒருவித விருக்ஷத்தினின்று உற்பத்தி யாகும்)ஒருவிதத்திராவகத்தைப்பூசிவிடுவார் கள். இதனால் பலகைகள் உறுதிப்படுவ தோடு பிளப்பு ஏற்படாமலும் ஜலம் ஊறாம லும் உறுதியாக யிருந்துவரும்.

“யான் இன்னும் சிலவித கப்பல்களையுங் கண்டிருக்கின்றேன். அவைகளை கடத்திச் செல்வதற்காக இருநூறு (சிலசமயம்) முன் னூறு ஆட்கள் தேவைப்பட்டுக்கொண்டிருந் தனர். இக் கப்பல்களில் கரும்மிளகின் ஐயா யிரம் மூட்டைகளை ஏற்றிச் செல்லக்கூடிய வசதி இருந்தன. இக்கப்பல்கள் படகுகளைப் போலவே துடுப்புகளை அசைப்பதுகொண்டு ஓட்டப்பட்டுவந்தன. அத்தகைய ஒவ்வொரு துடுப்புகளை அசையச்செய்வதற்கு நான்கு ஆட்கள் தேவைப்பட்டுவந்தனர். இப்பெரிய பிரம்மாண்டக்கப்பல்களோடு இரண்டுமூன்று சிறுசிறு கப்பல்களும் விடப்பட்டு வந்தன. இச் சிறுசிறு கப்பல்களை செலுத்துவதற்கு 70, 80 மாலுமிகள் தேவைப்பட்டு வந்தன ரெனின், இவைகளின் பருமனைப்பற்றி விவ ரிக்கவேண்டியதில்லை. அக் கப்பல்களுக்குள் அதைவிட சிறிய படகுகளும் ஆபத்துக்கா லத்துக் குதவுவதற்காக முன்னேற்பாடாய் வைக்கப்பட்டு வந்தன.

அத்தகையப் பெரும் படகுகளில் ஒவ் வொரு ‘டக்’ (அதாவது தட்டு) இருக்கும். அந்த டக்கின் கீழ் சுமார் 60 சிறு அறைகள் தடுக்கப்பட் டிருக்கும். இவ்வித அறை கட்கு ஆங்கிலத்தில் கேபின் (Cabin) என்று பெயர் கூறப்படுகின்றது. இவ்வித மாகவுள்ள ஒவ்வொரு அறையும் ஒவ்வொரு வியாபாரிக்குப் போதுமானதாயிருக்கும். அக்கப்பல்களில் இன்னும் பற்பல விதமான சௌகரியங்களும் நூதனங்களு மிருந்து வந்தன.

அக்கப்பல்கள் சமுத்திரமலையிலோ, பாறை யிலோ மோதிச் சேதமேற்படுவதாயினும்

அதினின்றும் தப்பும்விதமாக, கப்பல்களின் பாகங்கள் பதின்மூன்று பகுதிகளாக வகுத்து இணைக்கப்பட்டிருந்தன. எனவே அக்கப்பல் பாறையில்மோதி நசுக்குண்டுபோனாலும்; முழுக்கப்பலும் மூழ்கிப்போகாமல் சில பாகம் போய்விடினும் மற்றவை நல்லவிதமாகவே தப்பிவிடும். அதனால் உடைப்பட்ட பகுதியிலுள்ள சாமான்கள் தப்பிய பகுதிகளில் ஏற்றிக்கொள்ளப்படும்.

"முத்துக் குளித்தலென்னும் (அதாவது சமுத்திரத்தினின்று முத்து எடுக்கும்) நிகழ்ச்சியும் மிகவும் அறியத்தக்கதாகும். எனவே பெரும் வியாபாரிகளும்சிறு வியாபாரிகளும் தனித்தனிக் கூட்டமாய்ப் பிரிந்து பற்பலவிதமான கப்பல்களிலும் படகுகளிலும் ஆரோகணித்து நடுசமுத்திரத்துக்குச் சென்றுவிடுவார்கள். முத்துச்சிப்பிகள் எடுத்துவர சமுத்திர ஜலத்தடிக்குள் செல்லுபவர்களுடன் 'காற்றுப்பை' யொன்று இணைக்கப்பட்டிருக்கும். அப்பையிலிருந்து சுவாசத்தை இழுத்துக்கொண்டு வெகு நேரம்வரை ஜலத்திலிருப்பார்கள். பை காலியானதும் ஏராளமான சிப்பிகளோடு மேலுக்கு வந்துவிடுவார்கள். மீண்டும் அவ்வாறே மூழ்குவார்கள்.

முஸ்லிம் மன்னர்களின் வரலாறுகள்.

14-வது நூற்றாண்டில் பிரபல்யமான பண்டைய உலக யாத்திரீகரான இப்னுபத்தூத்தா அவர்கள், ஸுல்தான் முஹம்மத் துக்லக் அவர்களுடைய உத்திரவின்படி சீன தேசத்துக்கு யாத்திரை சென்றார்கள். அவர்கள் கும்பாத்திலிருந்துபுறப்பட்டு, பெங்களூர் கள்ளிகோட்டை, ஸிலோன் முதலிய இடங்களையெல்லாம் கடந்துசென்று, சீன ஜனங்களின் 'ஜன்க்' என்ற கப்பலிலேறி பற்பல கஷ்டசங்கடங்களை எல்லாம் சகித்துக்கொண்டு, இறுதியில் சீனதேசம்போய்ச் சேர்ந்தார்கள். இப்னுபத்தூத்தா தம் இப்பிரயாணத்தை யொட்டிவெளியிட்டுள்ள பலநூதன வரலாறுகளைத் திரட்டி நாமும் இதன்கீழ் சில வெளியிடுகிறோம்.

கும்பாத் என்பது, மஸ்ஜிதுகளுடைய வனப்பினாலும், கட்டிடங்களின் நேர்த்தியினாலும் மிக மிக சீர்பெற்றோங்கியதோர் பட்டணமாகும். அவ்வூர்வாசிகள் அதிகமாக வெளி நாடுகளுடன்தான் வியாபாரங்கள் புரிந்து வந்தார்கள்.

காதீ, கந்தார், என்னு மிருநகரங்கள் பரூச் மாகாணத்தைச்சேர்ந்த பட்டணங்களாகும். இவற்றிற்குத் துறைமுகங்களுண்டு. இவை ராஜா ஜாலீனீ என்பாரின் ஆட்சியின்கீழிருந்ததாகும். இவ்வரசர் இஸ்லாமிய அதிகாரத்தின் ஆதரவின் கீழிருந்துவந்தமையால், இவருடைய தர்பாரிலும்காரியாலங்களிலும் முஸ்லிம்கள் பிரதானிகளாகவும் அதிகாரிகளாக பல்லோர் இருந்து வந்தனர். அவ்விதப் பிரமுகர்களில் ஒருவர் காஜாபஹ்ரா என்றும் இன்னொருவர் நாகதா இப்ராஹீம் என்றுமிருந்தனர். இவ்விருவர் ஆறு பெரும் கப்பல் கட்குச் சொந்தக்காரர்களாயிருந்தனர்.

(தொடரும்)

சுகாதாரம்.

சுகமான வாழ்வு.

'ஆரோக்கியத்தைக் கவனிப்பதுதான் ஒருவனது ஜீவியகாலத்திற்குப் பெருந் தடங்கலாகும்' என்று ப்ளேடோ என்பவர் சொல்லியிருக்கிறார். இது ஒரு வம்புப்பேச்சாகயிருந்தபோதிலும்இதில்அர்த்தம் நிரம்பியுளது. எப்படியெனில், வியாதியில் காலத்தைக் கழிப்பதானது, காலத்தை வியர்த்தப்படுத்துவதாகும். ஆனதுபற்றி சுகமான வாழ்விற்கு இது ஒரு தடங்கல் என்றே சொல்ல வேண்டும். ப்ளேடோவும் தத்துவசாஸ்திரியானதுபற்றி, ஆரோக்கியமின்மையானது, முன்னேற்றமுள்ள அவரது மனதின் தொழிலிற்கு ஒரு முட்டுக்கட்டையாக விருக்குமென்று அவர் எண்ணி யிருக்கவேண்டும். மகான்கள் எல்லாம், இவ்வாரான சாரமான வசனங்களைத் தங்கள் அனுபவத்தை

யொட்டிச் சொல்லியிருக்கின்றனர். இவைகளை நாம் தீர்க்கமாய் ஆலோசித்து, அவற்றைக்கொண்டு வாழ்நாட்களையும் நடத்திக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு நபரும், ஸ்திரீயானாலும், புருஷரானாலும், தன் மனோபாவப்படி சுகமான வாழ்வு வாழ இச்சிக்கின்றனர். ஆனால் ஆரோக்கியமின்றி சுகமில்லை. ஆரோக்கியமில்லாமல் சுகமான வாழ்வு வாழ எண்ணவும் முடியாது. சுகமான வாழ்வு இன்னதுதான் என்று தீர்மானிப்பது கடினம். ஒன்றுமட்டும் நிச்சயம். அதாவது மூடனாயிருந்தால் சுகமான வாழ்வு ஒருபோதும் வாழ முடியாது. தற்காலத்தின் பெரிய தத்துவசாஸ்திரியாகிய பெர்ட்ராண்டு ரஸ்ஸல் என்பவர் சுகமான வாழ்வை வரையறுத்துப் பேசும்போது, 'அது விஸ்வாசத்தால் கிளப்பிவிடப்பட்டதும் அறிவால் வழிகாட்டப்பட்டதுமாகும்' என்று சொல்லியிருக்கிறார். மனிதருடைய சுகத்திற்கு அறிவே அடிப்படையாகும். ஒருவனது ஜீவியத்தில் எப்படி அவனது நன்மைக்கு அறிவு பிரதானமாயிருக்கிறதோ, அப்படியே அவனது கெடுதலுக்கு, மடமையே காரணமாக விருக்கிறது. ஆனதுபற்றி சுகமாக வாழ்வு வாழவேண்டுமானால், அதாவது நோயால் வருந்தாமலும் ஆரோக்கியமே சுகமான வாழ்வு என்றெண்ணிக்கொண்டு வாழவேண்டுமானால் நம்மை, நாம் அறியவேண்டிய தவசியமாகும்.

ஆரோக்கியத்திற்கிருப்பிடம் மூளை. மனதின் ஆரோக்கியமின்றி தேகாரோக்கியமடைவது துர்பலம். ஆனதுபற்றி, ஒருவன் வாழ்நாளில் முதன் முதல் மனதைத் தேற்ற வேண்டும். சுகமும் துக்கமும் மனதின் இரு வித நிலைமைகளாகுமென்று தத்துவ சாஸ்திரிகள் சொல்லி யிருக்கின்றார்கள். நமது தொழில்கள் யாவும் மனோ நிலையுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் அதனைமுதலில் கவனிக்க வேண்டிய தவசியமாகிறது. எனவே நல்ல எண்ணங்கள், பக்ஷமான விருப்பங்கள், இரக்கம், விசுவாஸம், உற்சாகம் ஆகிய இக்குணங்களை நாம் ஒவ்வொருவரும் விருத்தி செய்ய முயலவேண்டும். இவற்றால் நமது நரம்புத் தொகுதிக்கு ஒருவித அமைதி ஏற்படுகிறது. இதுவே ஆரோக்கியத்திற்கு முக்கியமானதாகும்.

மானிடர்காள்! 'உங்கள் பேதமையான ஜன்மத்தை நினைத்து வருந்துங்கள். நல்ல தொழிலைச் செய்துகொண்டிருங்கள். சோம்பேறித்தனமாகயிராதீர்கள். உங்கள் பழக்கங்கள் சாமான்யமானவையாயும், ஆகாரம் சுவல்ப்பமானதாயும்இருக்கட்டும். சுறுசுறுப்பாயிருங்கள். உங்கள் தேகத்தின் ஒவ்வொரு பாகமும் சுறு சுறுப்பைக் காண்பிக்கட்டும். விக்டோரியா மகாராணியாரின் கட்டுரையாகிய 'நல்ல காற்றும், திறந்த ஜன்னலும்' என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அதனால் அந்த ராணியார் ஆரோக்கியமாய் வெகுகாலம் வாழ்ந்து வந்தனள். எப்போதும் மனோவேஷ்டைப் படலாகாது. இவை யாவும் புதிதல்ல. எல்லாம் உங்களுக்குத் தெரிந்த சமாசாரந்தான். ஆனால் ஒன்றை அறிந்தால்மட்டும்போதாது. அதை அனுபோகத்தில் கொண்டுவந்து அதன்பலனை அனுபவிக்கவேண்டும். ஆனது பற்றி நல்ல விஷயங்களை, நடக்கையில் கொண்டு வந்தால், சுகமாய் வாழலாம்.

தூக்கமின்மையை ஒழிக்கும் விதம்.

ஒழுங்கான பழக்க வழக்கங்களால் தூக்கம் சுலபமாக வரலாம். அநேகர் யாதொரு பிரயாசையு மின்றியே தூங்குகிறார்கள். அதற்குத் தேவையான நேரந்தான் அவர்களுக்கு வேண்டும். ஆனால் இன்னு மநேகர், ஏதோ ஒரு காரணத்தினால் விழித்துக் கொண்டே யிருக்கின்றார்கள். இரவில் நல்ல தூக்கமின்றி படுக்கையில் அமைதியற்றுக் காலங் கழிக்கிறார்கள். இந்த வியாஸமானது தூக்கமின்மை என்னும் வியாதியால் வருந்துவோர்க்கு உதவி புரிய வேண்டுமென்ற கருத்துடன் எழுதப்பட்டது என்று 'ஹெரால்டு ஆப் ஹெல்த்' என்னும் பத்திரிகையில் மிஸ்டர் ஏ. பி. ஆல்சன் எம். டி. டி. பி. எச். என்பவர் எழுதியிருக்கிறார்.

அயர்ந்ததூக்கமானது தேகத்திற்கு வேண்டிய முழு ஒய்வையும் கொடுக்கிறது. டானிக் மருந்துகளைக் காட்டிலும் அது தேகத்திற்கு வலுவையும் தேற்றுதலையும் அளிக்கிறது. தேகத்தின் உறுப்புகள் யாவற்றிற்கும் அதாவது சதைகள், நரம்புத்தொகுதி, மூளை இவற்றிற்கு தூக்கமானது வேண்டிய ஒய்வைக் கொடுக்கிறது. ஏனெனில் ஆகாரமின்றி கொஞ்சகாலம் ஜீவித்திருக்கலாம். தூக்-

மின்றி அதிக நாள் இருக்கமுடியாது. ஆகாரத்திற்கு அடுத்தது தூக்கமே. ஆகவே கிளர்ச்சியடைந்த நரம்புகளைச் சமனப்படுத்தவும், துன்பமுற்ற மனதிற்கு அமைதியைக் கொடுக்கவும், தூக்கத்தைத் தவிர வேறு நல்ல மருந்து கிடையாது. நோயைத் தடுப்பதற்கு இதுவே ஏற்ற மருந்து. நரம்புகளைச் சமனப்படுத்துவதற்கு இதுவே தக்க ஒளஷதம். இது இயற்கையில் ஏற்பட்ட தூக்க மருந்தாகும்.

தூக்கமின்மைக்கு வைத்தியம் செய்யும்போது, அதன் காரணம் இன்னதென்று கண்டறிந்து, கூடுமானல் அதை ஒழிக்க முயலவேண்டும். ஆனல் அதன் காரணம் தெளிவாய்த் தெரிகிறதில்லை. அவைகளைக் கண்டுபிடிப்பது கடினம். இதற்கு அடுத்தபடி செய்யவேண்டிய முறை யாதெனில், இயற்கை வாழ்வை அனுசரித்து, ஆரோக்கியமாக யிருத்தலேயாம்.

பழக்கங் செய்துகொள்ளல்.

தேகமும் அதன் உறுப்புகள் யாவும், பழக்கங்களுக்கு உட்பட்டு அவற்றின்படியே நடக்கக்கூடியன. தூக்கம் ஒரு விஷயத்தில் அநேகருக்குப் பழக்கத்தில் சம்பந்தப்பட்டது. தூக்கம் போய்விடும் பக்ஷத்தில், சிறிது பொறுமையுடன் தூக்கம் வரும்படி பழகிக்கொண்டால் போதுமானது. இதற்காக, குறித்தகாலத்தில் தூங்கப் போவது அவசியம். அது இரவு 10 மணிக்கு அதிகப்படாமல் இருக்கவேண்டும். பிறகு ஒவ்வொரு தினமும் அதேமாதிரி தூங்கப் போகவேண்டும். கால ஒழுங்கும் விடா முயற்சியும் அத்தியாவசியமாகும்.

படுக்கையறை.

படுக்கை யறை காற்றோட்டமுள்ளதாய் இருக்கவேண்டும். நல்ல தூக்கத்திற்கு சுத்தமான காற்றுவேண்டும். திரைபோட்ட தாழ்வாரம் அநேகருக்கு நல்லது. குளிர்ந்த காற்றானது டானிக் மருந்தை ஒக்கும். அதனை இரவு முழுதும் சுவாஸிப்பதினல், மறுநாள் தேகம் வலுவாக விருக்கும். ஆனல் போதுமான வெளிச்சமும் கம்பளங்களால் நெய்த போர்வைகளும் தேவை. தூக்கத்திற்கு வெப்பம் வேண்டும். ஆனல் படுக்கை கனமாக விருந்தால் நல்ல தூக்கம் வராது. படுக்கையில் அதிகப்படியான கம்பளம் முதலியவை கூடாது. இருட்டும் நிசப்தமும் தூக்கத்திற்கு அனுகுணங்கள். விளக்கெரியும் அறையில் அநேகர் தூங்கமாட்டார்கள். ஒய்வும், தூக்கமும் நிசப்தமான இருட்டறையில் தான் கிடைக்கும்.

ஜீரணமும் மல ஜல விஸர்ஜனமும்.

நல்ல ஜீரணமும், இரைப்பை குடல் இவைகளில் கோளாறுகள் இன்றி இருத்தலும் தூக்கத்திற்கு அனுகூலமாகும். இரவில் சுவல்பமான ஆகாரம் சாப்பிட்டுப் படுத்தால் நல்ல தூக்கம் வரும் என்பது அனுபோகம். கடைசிஆகாரத்தை சாயங்காலம் 7 மணிக்கு எடுத்துக்கொண்டால், இரப்பையின் ஜீரணம் முடிவாகிவிடும்.

மலச்சிக்கல் இருந்தால் அது விழித்திருக்கச்செய்யும். தவிர அது ஆரோக்கியத்திற்குக் கெடுதலை விளைவிக்கும்.

படுக்கப்போகுமுன், ஒரு பையிண்ட் ஜலத்தில் ஒருதேக்கரண்டி உப்புச்சேர்த்துக்கலக்கி ஒரு எனிமா எடுத்துக்கொண்டு குடலை சுத்தம் செய்வது நலம். கோலனை (அதாவது பெருங்குடலை) அசட்டை செய்தால் அதுசில நோய்களுக்கெல்லாம் குப்பைத்தொட்டிபோலாகிவிடும். இந்த விஷங்கள் யாவும் இரத்தத்தில் உறியப்பெற்று, இரத்தம் விஷமாகிவிடும். இந்த விஷமே தேகத்தில் அநேக வலிகளுக்கும் அமைதியின்மைக்கும் காரணமாகும். எத்தனை வேளை நாம் சாப்பிடுகிறோமோ, அத்தனைவேளை குடல்களையும் சுத்தஞ்செய்யவேண்டும். மலச்சிக்களினல் உண்டாகும் கோளாறுகளைப்பற்றி, ஜனங்களுக்கு ஒன்றும் தெரிவதில்லை.

வியாயாமமும் களைப்பும்.

களைப்பின்றி, வியாயாமம் செய்தால், தூக்கம் வரும். நடக்குதல், ஓடம்விடுதல் நீந்துதல் முதலியவற்றல் தினம் கைகால்களுக்கு வியாயாமம் கொடுத்தால், தூக்கத்திற்கு உதவியாக இருக்கும். சதா வீட்டிலேயே உட்கார்ந்து காலம் கழிப்பவர்கள், தூக்கமின்மையால் வருந்துவார்கள். வியர்வையை விட உழைப்பதே ஒரு டானிக். அதனல் நல்ல தூக்கம் வரும். சதைக்கு வேலையிருந்தாலும் மூளைக்கு வேலை இருந்தாலும், தூக்

கம் உண்டாகும். வேலைசெய்யாமல் சோம்பேறியாகவிருந்தால் அது தூக்கமின்மை ஏற்படுவதற்குக் காரணமாகும்.

சந்தடி.

வீட்டுக்குள் சந்தடி, வீட்டிற்கு வெளியே சந்தடி ஆகிய இவ்விரண்டு வகுப்புகளில், முன்சொல்லியதைச்சகிக்கமுடியாது. அதைச் செவ்வையாய் அடக்கவேண்டும். வெளியே வண்டி ஓடுதல் முதலியவற்றால் உண்டாகும் சந்தடியை அடக்கமுடியாது. ஆன்துபற்றி அதைக் கவனிக்காமல் விட்டுவிட வேண்டும். எப்படி கடியாரத்தின் 'டிக், டிக்' என்னும் சப்தத்தை நாம் கவனிப்பதில்லையோ, அப்படியே அந்த சப்தங்களையும் அசட்டை செய்யவேண்டும். முதலில் கொஞ்சம் சகிப்பது கஷ்டமாகவிருக்கும். வர வர அது பழக்கத்திற்கு வந்து விடும்.

வீட்டிற்குள் இருக்கும் சந்தடியை அடக்குவது சுலபம். ஆனதுபற்றி, இரவில் நிசப்தமாய் இருக்க வேண்டியதற்குத் தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். வெளிச் சந்தடியைக் காட்டிலும் வீட்டிற்குள் இருக்கும் சந்தடிதான் அதிக ஆயாஸத்தைக் கொடுக்கக்கூடியதாகும்.

மனோநிம்மதி.

மனதின் நிலைக்கும் தூக்கத்திற்கும் சம்பந்தம் உண்டு. மனோவேஷ்டை இருக்கும் பக்ஷத்தில், எவ்வளவு களைப்பாயிருந்தாலும், சுற்றுப்பக்கம் எவ்வளவு அனுகூலமாயிருந்தாலும், தூக்கம் வரவேவராது. பயம், கவலை இவைகள் இருந்தால், தூக்கம் வருவது கடினம். மனம் ஒரு நிலையிலில்லாது அலைந்து கொண்டிருக்கும்போது, தூங்க எத்தனிப்பது வியர்த்தமாகும்.

தொழிலைப்பற்றிய கவலை, ஆபீஸ் வேலை இவைகளை அங்கேயே விட்டுவிடவேண்டும். வீட்டிற்குக் கொண்டுவரக்கூடாது. நிம்மதியாய் சாயங்கால வேளையில் காலத்தைக் கழிக்கும்பக்ஷத்தில், தூக்கத்திற்கு அனுகூலமாயிருக்கும்.

கான்ஸ்டாண்டி நோபிளின் வெற்றி.

(மலர் 3, இதழ் 12, 515-ம்பக்கத் தொடர்.)

கைஸரானவன் சுல்த்தான் அவர்களை எவ்வளவோ சமாதானஞ் செய்து பார்த்தும், பலவாறான தந்திரோபாயங்கள் புரிந்து பார்த்தும் கடைசியாக யாதொன்றும்பலியாதென்பதைத் தெரிந்துகொண்டு புராதனமுடைய தமது ராஜாங்கத்தையும், தமது மூதாதைகளின் மார்க்கத்தையும், சேனைகளின் உயிர்களையும் காப்பாற்றவேண்டுமென்னும் நோக்கங்கொண்டு தம் உயிரை இழந்துவிடுவதற்கும் துணிந்து, "தாங்கள் என்மீது கிருபைபுரிந்து எனது முந்திய குற்றங்க ளனைத்தையும் மன்னித்து விடும்படியான ஆற்றலை ஆண்டவன் தங்களுக்களிப்பானாகில், நான் சந்தோஷங் கொண்டாடவதுடன் தங்கள் ராஜாங்கம் அபிவிர்த்தியடைவதற்காகவும் பிரார்த்தனை புரிவேன் இல்லாவிடில் என் உயிர்போகும்வரை எதிர்த்து யுத்தம் புரிவதற்கு ஆயுத்தமாக யிருக்கின்றேன்" என சுல்த்தான் அவர்களுக்கு இறுதியாக ஒரு செய்தி அனுப்பிவைத்தான். அதற்கு சுல்த்தான் முஹம்மத்தானீ அவர்கள், உம்முடைய ஆசனத்தின்மீது நான் அமரவேண்டும்; அல்லது கான்ஸ்டாண்டி நோபிளின் மதிலிற்குத்தாளால் என் சமாதி ஏற்பட்டுவிடவேண்டும். இவ் விரண்டைத் தவிர்த்து வேறு யாதொன்றும் செய்து கொள்ள முடியாதென முடிவாகத் தெரிவித்துவிட்டார்கள். இதனால் யுத்தம் புரிய வேண்டுமென்னும் சந்தர்ப்பம் ஏற்பட்டு இரு சாரார்களும் அதற்குள்ள முஸ்திப்புகளை மும்பரமாகத் தயாரிப்பதி லீடுபட்டனர். சுல்த்தான் அவர்களோவெனில், யுத்தத்திற்குத் தக்க காலத்தை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் கைஸ

ரானவன் சகல கிறிஸ்தவ இராஜர்களுக்கும் அறிக்கை மூலம் தெரிவித்து, அனியாயக்காரர்களான துருக்கியர்கள், கிறிஸ்தவமதத்தின் பெருமையையும் மகிமையையும் கெடுத்து விடாதவாறு காப்பாற்றுவதற்காக வந்து உதவிபுரியும்படி அழைத்திருந்தான். அவ்வழைப்புக் கிணங்க உலகின்கண் ணுள்ள மகுடாதிபதிகளான பற்பலஇராஜர்களும்பல வகையிலும் கைஸருக்கு உதவிசெய்ய முன் வந்தார்கள். இதற்கிடையில் ஐரோப்பாவிலுள்ள பற்பல இராஜர்களினுடைய பெரும் பெரும் யுத்தக்கப்பல்களும், பாஸ்பரஸ் ஜல சந்தியில் துருக்கியர்களை எதிர்பார்த்துக் கொண்டு நின்றது.

இஸ்லாமிய வீரர்களின் புறப்பாடு.

சுல்த்தானவர்கள், யுத்தத்திற்காக வேண்டிய சகல முஸ்தீப்புகளையும் தயார் செய்து கொண்டு மிக்க வேகமாக வீசும்படியான சூராவளிக் காற்றுக்கொப்பத் தங்கள் முழுப் பலத்தையும் உபயோகித்துக்கொண்டு கெம்பீரத்துடன் குஸ்தந்தனியாவைத் தாக்குவதற்காக முற்பட்டு வந்தார்கள்.

வீரர்களுக்கு சுல்த்தானின் உபதேசம்.

சுல்த்தான் அவர்கள் வீரர்களை நோக்கி, (1) எதிரிகளில் ஆயுதபாணிகளை அணிந்து கொண்டு உங்களை எதிர்க்கவருபவர்களுடன் நீங்கள் யுத்தம் புரியவேண்டும். உங்களை எதிர்க்காதவர்களை யாதொன்றும் செய்துவிடக் கூடாது. (2) விருத்தாபியர், பெண்டிர், சிறுர் முதலிய சக்தி அற்றோர்கள்மீது யாதொரு அநீதியும் புரியலாகாது. (3) கிறிஸ்தவர்களின் வணக்க ஸ்தலங்களுக்கு யாதொரு பங்கமும் விளைவிக்கக் கூடாது. (4) சாதாரண குடி மக்களுக்கு எவ்வகையிலும் தொந்திரை இழைக்கக் கூடாது. (5) உங்களை எதிர்ப்பவர்களை துண்டமாக்கி விடுவதில் எவ்வகையிலும் பின்னடையக் கூடாது. என உபதேசஞ் செய்தார்கள். ஆனுல் ஐரோப்பிய சரித்திராசிரியர்கள் இதனைத் திரித்து துருக்கியர்கள்மீது பலவாறான அபாண்டப் புளுகுகளைப் பரத்தி வந்திருக்கின்றார்கள். அச்சரித்திராசிரியர்களை நோக்கி, இந்நவநாகரீக காலத்தில் தராபுலஸ், முராகஷ், ரஷியா முதலிய இடங்களில் அனுஷ்டிக்கப்பட்டுவந்ததுதானு நாகரீகம்? அல்லது சமர்னுவில் துருக்கியர் மீது புரியப்பட்டுவந்ததுதானு நாகரீகம்? எனக் கேள்க்கவேண்டியிருக்கின்றது. துருக்கியர்கள் தங்கள் சுத்தவீரியத் தனத்தோடு கான்ஸ்டாண்டிநோபிளை நோக்கிச் செல்லுங் கால், வழியிலுள்ள சகல இடங்களையும் கைப்பற்றிக்கொண்டே முன்னேறிச் சென்றார்கள். இதற்கிடையில் எதிரிகளால் எவ்வாறான எதிர்ப்புகளும் புரிவதற்கு முடியாதிருந்தது. இவ்வாறேகான்ஸ்டாண்டிநோபிளுக்கு ஐந்து மைலுக்குச் சமீபம் வந்து சேர்ந்தார்கள், அந்த இடத்தில் சுல்த்தான் அவர்கள் தங்கி, தங்கள் பட்டாளங்களை சட்ட ஒழுங்குப்படி சீர்படுத்தி வரிசையாக்கி வைத்து முன்னேக்கிச் செல்லும்படி செய்தார்கள். அவ்வாறே சென்று சைன்ட் ரூமஸ் என்னும் வாசற்படிக்குச் சமீபமாகத் தங்கள் கூடாரங்களை அடித்து இராஜ கொடியை நாட்டிவிட்டார்கள். அதுபொழுது சுல்த்தான் அவர்கள், இனி என்ன செய்யவேண்டுமென்னும் சிந்தனையில் சற்றேனும் இடைவிடாது தமது முழுகவனத்தையும் செலுத்திக்கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் கான்ஸ்டாண்டிநோபிளின் படத்தைத் தங்கள் முன் வைத்துக்கொண்டு இன்ஜினீர்கள், நிபுணத்துவம் வாய்ந்த பராக்கிரமசாலிகள் முதலியவர்களுடன் கலந்தாலோசித்து உள்ளால் எவ்வாறு செல்வது; பீரங்கிகளை எவ்விடத்தில் வைப்பது; எவ்விடத்தில் சுரங்கங்கள் தோன்றுவது முதலியவைகளை ஆலோசித்துக்கொண்டு அதே சிந்தனையில் அநேக இரவுகளைக் கழித்தார்கள். இதுவன்றி சுல்த்தான் அவர்கள் இரவில் உடைமாற்றிக் கொண்டு தங்கள் சிப்பாய்கள் தங்கியிருக்கு மிடங்களுக் கெல்லாம் சென்று அவர்களது நிலைமை எவ்வாறிருக்கின்றது; எவ்வாறான ஊக்க முடையவர்களாக யிருக்கின்றார்கள் என்பதை அறிந்து வருவார்கள். இதுவன்றி, உலமாக்கள் பட்டாளத்திற்கு மத்தியிலிருந்துகொண்டு ஆண்டவனுக்காக யுத்தம் புரியவேண்டியதின் வரிசையைப்பற்றியும், அதில் தங்கள் இன்னுயிர்களை தியாகஞ்செய்வதால் கிடைக்கக்கூடிய அளவற்ற பாக்கியங்களைப்பற்றியும் ஒவ்வொரு தினமும் தக்க முறையில் எடுத்துக்கூறி, தியாகஞ் செய்வதின்மீது ஆசை புகட்டிக்கொண்டேயிருப்பார்கள். இந்நிலைமையில் ஒவ்வொரு சிப்பாயினுடைய மனமும்

குர்ஆனின் திரு வசனங்களால் இலங்கிக் கொண்டிருக்கும். எனவே யுத்தம் புரியவும் அதில் தங்களது இன்னுயிர்களை தியாகஞ் செய்யவும் ஒவ்வொரு சுத்த வீரியர்களும் மனந்துணிவோடு முன்வந்துகொண்டேயிருந்தார்கள். சுருங்கக்கூறப்படின், சுல்த்தான் அவர்கள் இரவு முழுதும் இதே கவலையிலீடுபட்டுக் கொண்டிருந்ததால் அவர்களுக்கு இராக்காலங்களில் தூக்கமே ஏற்படுவதில்லை.

சுல்த்தான் அவர்களது சிப்பாய்கள் எவ்வளவு பேர்களிருந்தார்களென்பதில் பலவாறான அபிப்பிராய பேதங்களேற்பட்டிருக்கின்றது. எனவே, ஐரோப்பிய சரித்திராசிரியர்களோவெனில், சொற்பத் தொகையினரான முஸ்லிம்களின் கையினால் ஐரோப்பிய தேசத்தின் வல்லரசுகளெல்லாம் தோல்வி அடைந்துவிட்டார்களெனக் கூறுவது வெட்கமான செய்தியாகுமென்பதைக் கருதி, சிப்பாய்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கூறியிருக்கின்றார்கள். ஆனால் இஸ்லாமிய சரித்திராசிரியர்களும், உண்மையைக் கூற விருப்பங்கொண்டிருந்த ஐரோப்பியமேதாவிகளும் சுல்த்தான் அவர்களது பட்டாளமானது, 60 ஆயிரத்திற்கு அதிகமிருக்கவில்லை எனக் கூறியிருக்கின்றார்கள்.

எதிரிகளின் கூட்டத்தையோ, மட்டுப்படுத்திக் கூறமுடியாது. அதாவது சகல கிறிஸ்தவர்களின் தலைவரான போப் என்பார், மார்க்கத்தைக் காப்பாற்றுவதற்காக யுத்தம்புரிய யாவரும் முன்வாருங்களென அழைத்தவுடன், ஐரோப்பாவிலுள்ள கிறிஸ்தவர்களிலனேகர் கூட்டங் கூட்டமாகத் திரண்டு குஸ்தந்தனியாவுக்கு வந்து சேர்ந்துவிட்டார்கள். இதுவன்றி துருக்கியர்களின் கடல் சாதனங்களைவிட எதிரிகளின் சாதனங்களானது தக்கனவாகவும் எண்ணிக்கையில் அதிகமானதாகவுமிருந்தது. ஆனால் கைஸருடைய நிலைமைமட்டில் பரிதபிக்கத் தக்கதாகயிருந்தது. அவன் தானே இந்நிலைமையை வருத்திக்கொண்டான். அவமான மடைந்து விடும்படி நேரிடுமென்னும் பயமே அவனைப் பீடித்து ஆட்டிக் கொண்டிருந்தது. அதனால் பலவாறான பயங்கரத் தோற்றங்கள் அவன்கண்முன் வெளியாய்க்கொண்டிருந்தது. எனவே, அவன் தன் குடும்பத்தாரின் உயிர்களின்மீதும், மானத்தின்மீதும் அதிகக் கவலைகொண்டு அதிலேயே தமது முழு கவனத்தையும் செலுத்தி ஒருக்கால் அவர்கள் மானபங்கம் செய்யப்படுவார்களோவென பயந்துகொண்டிருந்தான். இதற்கெல்லாம் இஸ்லாம்மதம் தக்க உரைவிடமாகுமென்பது அவனது மனதிற்குப் புலப்படாது போனமைதான் ஆச்சரியப்படத்தக்கதாகும். இந்நிலைமையில் கைஸரானவன் கோட்டை மதில்களை உறுதி படுத்துவதிலும் தமது பட்டாளங்களுக்கு ஊக்க மூட்டுவதிலும் இரவுபகலாக ஈடுபட்டு வந்தான். இரவுபகல் முழுதும் ஒவ்வொரு வேலைக்கும் தாமே நேரிற்சென்று கவனித்து வந்தான். சுருங்கக் கூறின், கைஸர் ஒருவித பயித்தியம் பிடித்தவனேபோன்று அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தான் என்று கூறுவது மிகை யாகாது.

இதுவன்றி குஸ்தந்தனியாவின் அமைப்பைப்பார்க்கும் எவரும் இதனை உலகின்கண்ணுள்ள எந்த வல்லரசுகளாலும் அசைக்க முடியாதென திட்டமாய்க் கூற முன்வர முடியும். பட்டணத்தின் நான்குபக்கங்களிலுமுள்ள மதில் சுவர்களின் கனம் ஆறு மைல்களிலிருந்தது. அதற்குப் பக்கத்தில் மிக ஆழமான அகிழ் வெட்டப்பட்டிருந்தது. இது வன்றி அக்கோட்டைக்கு உறுதியான தலைவாசல்களும் போடப்பட்டிருந்தது. மதில் சுவற்றின்மீது ரூம் தேய சிப்பாய்கள் மிகஊக்கத்தோடு யுத்தத்திற்குள்ள ஆயுத்தமாகவே யிருந்துகொண்டு ஒவ்வொரு நிமிஷமும் யுத்தத்தையே எதிர்பார்த்தவர்களாகக் காவல் புணர்ந்துகொண்டிருந்தார்கள். தவிர, ஐரோப்பிய வல்லரசுகளெல்லாம் தங்கள் கியாதிவாய்ந்த அனுபவசாலிகளான படைத் தலைவர்களை பாஸ்பரஸ் ஜலசந்திக்கு அனுப்பிவைத்து, துருக்கியர்களை நோக்கிகொண்டிருக்கும்படி செய்திருந்தார்கள்.

எதிரிகள் இவ்வாறான முன்னேற்பாடுகள் செய்துகொண் டிருந்ததால், துருக்கியர்களுக்கு எவ்வாறான கஷ்ட சங்கடங்க ளேற்பட்டிருக்கு மென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். கரையில் யுத்தம் புரிவது கொண்டு முஸ்லிம்களுக்கு எவ்வித அனுகூலங்களும் ஏற்படாது, பிரதிகூலமே உண்டாகிக் கொண்டிருந்தது. ஆரம்பமாக மதில் சுவர் வரை முஸ்லிம்கள் வருவதே பெரும் கஷ்டமாகயிருந்தது. எனவே அங்குவர முற்படுங்

காலை காவல் புரிந்துகொண்டிருந்த ரூம்தேய சிப்பாய்களின் பீரங்கிகளுக்கு முஸ்லிம்கள் இறையாகவேண்டியிருந்தது. ஒருக்கால் கஷ்டத்துடன் சமீபமாக வந்துவிட்டபோதிலும் ஆழிய அகிழ்களை நீந்திக்கொண்டு மதிலண்டை வருவது முடியாத காரியமாக யிருந்தது:. தவிர, மதில் சுவருக்குத் தாளாதுள்ள பூமியானது கெட்டிப் படுத்தப்பட்டிருந்ததால், சுரங்கம் தோண்டிக்கொண்டு உள்ளாதுசெல்வதற்கும் ஹேதுவில்லாதிருந்தது. இதைத் தவிர்த்து கடல்மார்க்கமாகிலும் சென்று காரியத்தை சாதித்து விடலாமென்னும் நம்பிக்கை சுல்த்தான் அவர்களுக்கு அறவே கிடையாது. ஏனெனில், முதலாவது சுல்த்தான் அவர்களிடமுள்ள கப்பலானது மிகச் சிறியதாக இருந்தது; விரோதிகளிடமுள்ள கப்பல்களோ இதைவிட பதின் மடங்கு பெரிதாகவும் அதிகமானதாகவுமிருந்தது. இதனைப் பார்த்து எவரும் முஸ்லிம்கள் வெற்றி பெறுவரென்று கூறுவதற்கு ஹேதுவில்லாதிருந்தது. கடைசியாக எதிர்பாராதவிதமாய் ஏக வல்லமை பொருந்திய மகா சக்திவாய்ந்த அல்லாஹ் ஜல்லஷானுஹு வத-ஆலின் கிருபையால் அங்கு ஏற்பட்டிருந்த பலவாறான கஷ்ட சங்கடங்களையும் முஸ்லிம்கள் சகித்துக்கொண்டு கான்ஸ்டாண்டி நோபிளை ஜெயித்து ஜெயக்கொடி நாட்டி விட்டார்கள். (அல்ஹம்துலில்லாஹ்) அல்லாஹ்த ஆலா முஸ்லிம்களுக்கு ஜெயத்தை அளித்து இஸ்லாம் ஒங்கிவளர உதவி செய்ததற்காக நாம் அவனைப் பாராட்டுகின்றோம்.

யுத்த நிகழ்ச்சிகள்.

முஸ்லிம்களுக்கு அளவற்ற கஷ்ட சங்கடங்களேற்பட்டிருந்தும், சுல்த்தான் அவர்களும் இஸ்லாமிய சேனைகளும் தங்கள் தைரியத்தைக் கைவிட்டு விட்டார்களில்லை. இதேநிலைமையில் ஒரு மாத காலம் சென்றபின் பலவாறு யோசித்தும் ஒன்றும் கைகூடி வராத்ததால், வீரர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து தரை மார்க்கமாக யுத்தம் புரிவதற்கு அனுமதியளிக்கப்பட்டது. இவ்வனுமதியைப் பெற்றவுடன்கியாதிவாய்ந்த சுத்தவீரிய பராக்கிரமசாலிகளான துருக்கியர்கள் யாவரும் முன் வந்து, மலைகளை இடித்துத்தகர்க்கக்கூடிய தங்கள்பீரங்களை உபயோகிக்க முற்பட்டார்கள். எனவே பீரங்கிகளின் குண்டுகளானது மதில் சுவர்களை உடைத்துத் தகர்த்தெரிய ஆரம்பித்தது. பின்னும் பின்னும் மிதமான குண்டுகளை உபயோகப்படுத்தியதால், மதில் சுவர்கள் அபாய நிலைமைக்கு வந்துவிட்டது. ஆனால் அதனை காவல் புரிந்துகொண்டிருந்த ரூம் தேய சிப்பாய்கள் உடனுக்குடன் பழுது பார்த்து சீர்படுத்திக்கொண்டும், தங்கள் சிப்பாய்களின் பிணங்களினால் அகிழ்களை நிறப்பிக்கொண்டுமிருந்தார்கள். இந்நிலைமையிலும் ரூமிகள் தங்கள் இன்னுயிர்களை தியாகஞ் செய்ய முன்வந்தது போற்றக் தக்கதேயாகும். முஸ்லிம்களின் பீரங்கிகளின் புகையானது வானத்திற்கும் பூமிக்கு மிடையிலுள்ள வெட்டவெளியை எல்லாம் இருள்மயமாகச் செய்துவிட்டது.

இவ்வாறு பாதிப்பொழுது செல்படியாகவே, பீரங்கிப்பிரயோகம் நிறுத்தப்பட்டது. உடனே இஸ்லாமிய வீரர்கள் தங்கள் வாளாயுதங்களை முன்னால் நீட்டியவர்களாக அதிவிறைவில் மதிலின்பக்கல் செல்வதற்கு முற்பட்டு, அகிழ்வரை போய்ச்சேர்ந்துவிட்டார்கள். இதனைக்கண்ட கிறிஸ்தவப் படையிலுள்ள தைரியம்வாய்ந்த வீரர்கள் அகிழில் இறங்கிவந்து துருக்கியர்களை எதிர்த்துமுறியடிக்க முற்பட்டார்கள். இவ்வாறு சற்று நேரம் வாள்வீச்சு ஏற்பட்டபின் அகிழானது துருக்கியர்களுடையவும் ரூமியர்களுடையவும் இரத்தம், சவம் முதலியவைகளைக் கொண்டு நிறப்பப்படவே ரூம் பட்டாளங்கள் திரும்பிச்சென்று மதிலின்மீது ஏறி தங்கள் மீது ஏற்படும் தாக்குதல்களைத் தடுத்துக் கொண்டிருந்தார்கள். இச் சம்பவம் நடந்து கொண் டிருக்கும் போதே இராக்காலமாய் விட்டதால், யுத்தம் நிறுத்தப்பட்டு விடியற்காலமாவதை எதிர்பார்க்கப் பட்டது. துருக்கியர்களோவெனில், மறுநாள் யுத்தம் முடிந்துவிடும்; கான்ஸ்டாண்டிநோபிள் தங்கள் கைவசமாய் விடும் என்று திடமான உறுதிகொண்டிருந்தார்கள். அதிகாலையில் சுல்த்தான் அவர்களுக்கும் இஸ்லாமிய வீரர்களுக்கும் ஏற்பட்ட ஆச்சரியத்துக்கோர் அளவுசொல்ல முடியாது. பிணம் கல் முதலியவைகளைக்கொண்டு நிறப்பப்பட்டிருந்த அகிழ், துப்பரவாக்கப்பட்டதாகவும் பீரங்கிகளின் தாக்குதல்களால் சின்னபின்னப் படுத்தப்பட்டிருந்த மதில் சுவர்களெல்லாம் இர

விலேயே ஒழுங்குபடுத்தப்பட்டதாகவு மிருப்பதைப் பார்த்து பெரும் ஆச்சரியமடைந்தார்கள்.

முடிவாக அதிகாலையில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு துருக்கியர்களும் ரூமியர்களும் கைகலந்துகொண்டார்கள். இந்நிலைமையில் சூரியன் அஸ்தமிக்கவே, யுத்தம் நிறுத்தப்பட்டது. தங்கள் சவங்களைக்கொண்டு அகிழை நிரப்பியதைத் தவிர வேறு யாதொன்றும் துருக்கியர்களுக்குக் கிட்டவில்லை. மறுநாள் காலையிலும்முதல்நாள் பார்த்ததுபோல்தான் பல ஆச்சரியத் தோற்றங்களைக் கண்டார்கள். அதாவது மதில், கட்டிடம் முதலியவைகளுக்கு துருக்கியர்களால் விளைவிக்கப்பட்டிருந்த சேதங்கள் யாவற்றும் ஒழுங்கு படுத்தப்பட்டிருப்பதைக் கண்டார்கள். சுல்த்தான் அவர்கள், தங்களுக்கு அளவற்ற கஷ்டங்களும் உயிர் தியாகங்களும் ஏற்பட்டிருந்தும், காரியம் கைகூடிவராமலிருப் பதைக் கண்டு அளவற்ற கவலை பூண்டவர்களாக ஆழ்ந்த சிந்தனை புரிந்துகொண் டிருந்தார்கள்.

(தொடரும்.)

காதியான் கம்பனியின் புதிய தந்திரம்

எம்பெருமானுர் (ஸல்.) அவர்களது பிறந்த தினத்தைக் கொண்டாடும் தோரணையில் காதியானிப் பிரசாரமா?

மானிடர்களுக்கிடையே பித்ஞ பசாதென்னும் தீயை மூட்டிவிட்டுத் தாம் பிரயோசனமடைந்துகொள்வது ஆரம்ப முதலே காதியான் கம்பனியின் தொழிலாக யிருந்து வருகிறது. எனவே, அக்கம்பனியின் சரித்திரங்களானது நமது இவ்வார்த்தைக்கு முழுதும் ஆதரவளிக்கக்கூடியதாக யிருக்கிறதென்பது வெள்ளிடை. இக்கம்பனியானது ஆரம்பத்தில் ஆரியர்களுடனும் கிறிஸ்தவர்களுடனும் தர்க்கம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருப்பதாய்பிரகடனப்படுத்தப்பட்டது. இதற்காகவென்றே, "பராஹீன அஹ்மதிய்யா" வென்னும் நூலும் வெளியிடப்பட்டிருக்கிறதென அறிக்கை வெளியிடப்பட்டு இஸ்லாமியப் பிரசாரத்திற்கென்று முஸ்லிம் மன்னர்களிடம் நன்கொடை கோரப்பட்டது. பராஹீன அஹ்மதிய்யா வென்னும் நூலின் கிரயமும் மிதமிஞ்சியதாக ஏற்படுத்தப்பட்டது. இதற்கிடையில் மிர்ஜா குலாம் அஹ்மத் தமக்கு (இல்ஹாம்) ஞான வெளிப்பாடு ஏற்படுகிறதென்னும் பிரசாரத்தையும் கைவிடவில்லையாயினும், தமதுஉள்ளக்கடக்கை அதுபொழுது வெளியிடாது மறைத்தே வைத்திருந்தார். எதுவரை மறைத்து வைத்திருந்தாரெனின், ஈஸா (அலை) அவர்கள் வானுலகில் உயிருடனிருக்கின்றுர்கள் எனவும் கூறிக்கொண்டிருந்தார். இவ்வாறு அவர் கூறிக்கொண்டிருந்ததானது, முஸ்லிம்களிடமிருந்து ஐசுவரியங்களைச் சம்பாத்தியஞ்செய்துவிட வேண்டுமென்பதற்காகக் கையாண்ட முறை என பிந்திய நிகழ்ச்சிகளிலிருந்து நன்கு புலனுகின்றது. அதன்பிறகும் பன்னிரண்டு வருஷ காலம் வரை ஈஸா (அலை) உயிருடன்தா னிருக்கின்ருர்களென கூறிக்கொண்டிருந்தார். (இஃஜாஜ அஹ்மதி ப. 7). ஆரியர்களிடமும் கிறிஸ்தவர்களிடமும் தர்க்கஞ்செய்ய முற்பட்டு இஸ்லாமியத் தொண்டாற்றி வருவதாகப் பிரகடனப்படுத்தியதினுல் தம் பெயர் பிரஸ்தாபத்திற்கு வரவே, தாம் மஸீஹாகவும்மஹ்தியாகவுமிருப்பதாகக் கூறத் துணிந்தார். இதனைக் கண்டு முஸ்லிம்கள் தம்மீது வெறுப்புக்கொள்ளக்கூடுமென்றெண்ணி முஸ்லிம்களை திருப்தி செய்வதற்காக, எம்பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள்மீது பலவாருன புகழ்பாக்களைப் பாடியதுடன், ஏகத்துவத் தூதர் (ஸல்.) அவர்களுக்குப் பின் நபித்துவத்தின் யாவல்கள் யாவும் அடைபட்டுப் போய்விட்டது; அவர்களுக்குப்பின் தாம் நபியென்று கூறுபவன் காபிராகயிருக்குமென்று பஹிரங்க அறிக்கை வெளியிட்டார். இவ்வறிக்கையை வெளியிட்ட சிறிது காலத்திற்கெல்

லாம் மிர்ஜா தாமே நபி என்று கூற முற்பட்டுவிட்டார்.

இக்காதியான் கம்பனிதான், சத்தியார்த்தப் பிரகாசத்தில், முஸ்லிம்களுக்கு விரோதமாய் 13-ம் அத்தியாயத்தை சேர்க்கும்படி தூண்டிற்று. இக்கம்பனிதான் முஸ்லிம்களைத் தாஷித்து கிறிஸ்தவர்களைக் கொண்டு பல வாறான பிரசுரங்களை வெளியாக்கும்படி செய்தது. இவ்வாறு செய்ததற்குக் காரணம், ஆரியர்களுடனும் கிறிஸ்தவர்களுடனும் தாங்கள் தர்க்கஞ்செய்து அவர்களால் முஸ்லிம்கள்மீது கூறப்படும் அபவாதங்களுக்குத் தாங்கள் வாயாப்புக்கொடுக்க முற்பட்டு வருவதுபோல் பாவனை காண்பித்து முஸ்லிம்களிடமிருந்து பணந்திரட்ட வேண்டுமென்பதேயாம்.

காதியான் கம்பனி ஏற்படுவதற்கு முன் ஹிந்துஸ்தானத்தின்கண் வதிந்துள்ள பல சமுகத்தினர்களும், பற்பல பிரிவினர்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தார்களென்பதை யாராலும் மறுக்க முடியுமா? இக்கம்பனி ஏற்பட்ட பின்புதான் பல சமுகத்தாரிடையேயும் வீண் மனஸ்தாபங்களும் பலவாறான சச்சரவுகளும் ஏற்பட்டதென்பது நன்கு புலனாகும். எனவே, இக்கோஷ்டியினர் பணந்திரட்டுவதற்காக இவ்வாறான தந்திரோபாயமான முறைகளை எல்லாம் அனுஷ்டித்து வருவதைக் கண்ட, இதர சமுகத்தினரிலுள்ள துர்க்குணம் படைத்தவர்கள், தாங்களும் அம்முறையைக் கையாள ஆரம்பித்துமென் மேலும் சமுகங்களுக்கிடையே பிளவை அதிகப்படுத்திக்கொண்டே சென்று, தங்கள் சட்டைப் பையை நிறப்ப முற்பட்டனர். தவிர இக் கோஷ்டியினர், "எவர்கள் வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹாகிய மிர்ஸாவிடம் அறிதிமானஞ் செய்யவில்லையோ, அன்னோர் காபிர்களாயிருக்கும்; அவர்கள் இஸ்லாமிய பந்தத்திலிருந்து நீங்கியவர்களுமாகும்" (ஆயினயே ஸதாகத் ப-25) "முஸ்லிம்களுக்குப் பின்னல் தொழுவது கூடாது" (அன்வார கிலாபத் ப-90) "அஹ்மதியல்லாத குழந்தைகளின் ஜனஸாவைத் தொழ வைக்கக் கூடாது" (அன்வார கிலாபத் ப-93) என்றெல்லாம் தைரியமாகக் கூற முற்பட்டுவிட்டனர். இதுதான் இவர்கள் இஸ்லாத்திற்காற்றும் பணிபோலும். இது முஸ்லிம்களுக்கிடையே பெரும் பித்ன பசாதை உண்டுபண்ணக் கூடிய செயல்களல்லவா? "லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுற் றஸூலுல்லாஹ்" என்று கூறுபவர்களை இஸ்லாத்தைவிட்டு புறம்பானவர்களென்றும்; அவர்களுடன் சம்மந்தம் வைத்துக்கொள்வது கூடாதென்றும்; அவர்களது பெண்களை விவாகஞ் செய்து கொள்வது கூடாதென்றும் கூறுவதுதானு இஸ்லாமியப் பிரசாரம்? தவிர எம்பிரான் (ஸல்.) அவர்களை நபி என ஒப்புக்கொள்பவர்களை காபிர்களென்றும், அவர்கள் நரகவாதிகளென்றும் பகர்வதுதானு ரசூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள்மீது அன்புகொண்டிருப்பதற்கு அடையாளம்? என அன்னோரைக் கேட்கின்றோம்.

இவை யாவும் ஒருபக்கல் கிடக்க, இக்கம்பனியானது இதுகாலை ஒரு தந்திரோபாயமான புதிய முறையைக் கைகொண்டு வீரத் பிரசாரஞ் செய்யப் போவதாய்ப் பாவனைகாட்டி ஆங்காங்கு சபை—கூட்டங்கள் நடத்த முயற்சிசெய்துவருகின்றது. இது இஸ்லாத்தின் மீதும் அதன் ஸ்தாபகர் அவர்கள் மீதும் கொண்டுள்ள அன்பினலா? இல்லை இல்லை ஒருக்காலுமில்லை. வேறு எதற்காக? தங்கள் வியாபாரத்தை விஸ்தீரணப்படுத்தித் தங்களைப் பின்பற்றி நடப்பவர்களிடம் பணங்களைப் பறிப்பதற்கேயாம்.

தவிர இக்கோஷ்டியினர் ஐரோப்பாவில் "சுவர்க்கத்தின் சமாதி" என்னும் பெயரால் இஸ்லாமியப் பிரசாரஞ் செய்து வருவதாகப் பாவனைக் காட்டித் திரட்டும் பணங்களைக் கொண்டு, ஸிம்லாப் பிரயாணத்தில் அபரிமிதமான சுவண்டிகளை அனுபவிப்பதற்கும், பூமிகளை கிரயத்திற்கு வாங்கவும் பணம் போதாமையால், முஸ்லிம்களிட மிருந்து ஐசுவரியங்களைத் திரட்டுவதற்காக இப் புதிய முறையை அனுஷ்டிக்க முற்பட்டிருக்கின்றனர்.

ஆனல் உண்மையாகவே இக்கோஷ்டியார், வீரத் பிரசாரஞ் செய்ய முற்படுவார்களாயின், இன்னோர் முஸ்லிம்களைக் காபிர்களென்றும் இஸ்லாத்தைவிட்டு புறம்பானவர்களென்றும் கூறிக்கொண்டிருப்பதை ஏன் வாபஸ் வாங்கிக் கொண்டதாகப் பகிரங்க அறிக்கை வெளியிட்டிருக்கக் கூடாது? இவ்வாறுசெய்யாது இவர்கள்

வீரத் பிரசாரம் புரிவதாகப் பாசாங்கு செய்துவருவது பணத்தைத் திரட்டுவதற்காகவும், முஸ்லிம்களிடையே தங்கள் பெயர் கெட்டுப்போ யிருப்பதை நிவர்த்தியாக்குவதற்காகவும் அனுஷ்டிக்கும் சூழ்ச்சிகளே யன்றி வேறில்லை என்பது திண்ணம்.

இக் கம்பனியார் எம்பிரான் (ஸல்.) அவர்கள்மீது பிரீதிகொண்டு,வீரத்பிரசாரஞ் செய்ய முற்பட்டிருப்பதாகக்க கூறும் கூற்று ஆதாரமற்றதாக யிருக்கு மென்பற்கு, இக்கம்பனியார் எம்பெருமானர் (ஸல்.) அவர்கள்தான் கடைசி நபியாக யிருக்கும் என்று சொல்பவர்களைக் காபிர்களென்று கூறுவதே போதிய சான்ருக யிருந்தபோதிலும், இக் கோஷ்டியார்களின் கூற்றுக்களினின்று வேறு இரண்டொரு விஷயங்களை ஈங்கு குறிப்பிடுவாம். அதாவது:—

கிறிஸ்தவர்கள் 'உம்மஹாத்துல்மூமினின்' (மூமின்களின் தாய்மார்கள்) என்னும்பெயருடைய நூலொன்றை இயற்றியிருந்தார்கள். அதில் எவ்விஷயத்தைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்குமென்பதை, அதன் பெயரைக் கொண்டே நேயர்கள் தெரிந்துக்கொள்ளலாம். எனவே முஸ்லிம்கள் இவ்வாபாசம் நிறைந்த நூலைக்கண்டு சகியாதவர்களாய், லாகூர் அஞ்சுமன் ஹிமாயத்துல் இஸ்லாம் மூலம், பஞ்சாப் கவர்னருக்கு மனுச்செய்து அதனைப் பறிமுதல் செய்துவிடும்படி கோரிக்கொண்டார்கள்.

அம்மனுவில், முஸ்லிம்கள் தங்கள் உயிர், ஐசுவரியம் முதலியயாவற்றைப் பார்க்கினும் மேலாகக் கருதியிருப்பவைகளுக்குப் பங்கம் நேரிட ஒருக்காலும் சம்மதிக்கமாட்டார்களெனக் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனல் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானீ என்பாரோ, முஸ்லிம்கள் செய்துகொண்ட விண்ணப்பத்தை முற்றிலுமறுத்து, பஞ்சாப் கவர்னருக்கு ஒருவிண்ணப்பம் அனுப்பினர். அதில் குறிப்பிட்டிருந்ததாவது :-" ஒவ்வொருமதத்தினரும் அவரவர்களுக்குத் தோன்றியவைகளை வெளியிட சுதந்திரம் பெற்றிருக்கின்ருர்கள் ; லாகூர் அஞ்சுமன் ஹிமாயத்துல் இஸ்லாமானது எங்களிடம் கலந்தாலோசியாது சில தீவிர வாதிகளின் முயற்சியின்பேரில் இவ்வாறு செய்துவிட்டது. ஆகவே, இதற்காகக் கிறிஸ்தவ சகோதரர்களின் சுதந்திரத்தில் கவர்ன்மெண்டார் தலையிட நாங்கள் விரும்பவில்லை. "உம்மஹாத்துல் மூமீனின்" என்ற நூலை இயற்றியவர் அதில் உபயோகித்திருக்கும் வார்த்தைகளை எல்லாம் நாங்கள் ஏற்றுக்கொள்கிருேம் என்பதாகமேன்மை தங்கிய கவர்ன்மெண்டாரிடம்நாங்கள் உறுதிகூறுகின்ருேம்" (ஒப்பம், மிர்ஸா குலாம் அஹ்மத் காதியான் 4. 5. 1894) என்பதே.

இவ்வாருன கொள்கைகளை யுடையோர்கள், ரசூலுல்லாஹ் (ஸல்.) அவர்களினது மகுத்துவம் பொருந்திய வீரத்தைப் பிரசாரஞ் செய்வது எதற்காக வென்பதை முஸ்லிம் சோதிரர்களாகிய தாங்களே தெரிந்து கொள்வீர்களாக. இதனை வெளியாக்கிக் காண்பிப்பது கொண்டு நம்முடைய கருத்தானது,பொதுஜனங்களைத்தந்திரமாக ஏமாற்றுவதற்காக, இக்கோஷ்டியினர் அனுஷ்டித்து வரும் இப்புதிய முறையில் நம் நண்பர்கள் சிக்காமலிருக்க வேண்டுமென்பதைத் தெரியப்படுத்துவதும், ஒந்தியின் நிறம் நேரத்திற்கு நேரம் மாறிவருவதுபோல், இக்கோஷ்டியினரும் சமயத்திற்குத் தக்க வேடம்போடுவார்களென்பதைப் பொதுஜனங்களுக்கு அறியப்படுத்துவதுமேயாம்.

முஸ்லிம் சகோதரர்காள் !

இக்கூட்டத்தினர் முஸ்லிம்களிடையேயும் இதர சமூகத்தாரிடையேயும் பலவாருன பித்னபஸாதுகளைக் கிளப்ப வேண்டுமென்றும், இன்னும் பலவாருன கெட்ட எண்ணங்களை மறைமுகமாக மனதில் வைத்துக் கொண்டும் இப்பிரசாரத்தி லீடுபட்டிருக்கின்ருர்களென்பதில் யாரேனுஞ் சந்தேகங்கொள்ளமுடியுமா ? தவிர தற்காலேயுள்ள காதியான் கலீபாவானவர் "இது பொழுது காலம் மாறுதலடைந்திருக்கின்றது பாருங்கள் ; ஏற்கனவே வந்த மஸீஹைப் பகைவர்கள் சிலுவையிலறைந்து விட்டார்கள். ஆனல் சமீபத்தில் தோன்றிய மஸீஹோ தம்முடைய விரோதிகளை மரணமென்னும்கிடங்கில் தள்ள வந்தார்" என எழுதியிருக்கின்ருர். ஆகவே நம் முஸ்லிம் சகோதரர்கள் யாவரும் ஒன்று கூடி இஸ்லாத்தினுடையவும், முஸ்லிம் சமூகத்தினருடையவும் விரோதிகளான காதியான் கூட்டத்தினர்களின் பித்னு பஸாதுடையசூழ்ச்சியான தந்திரங்கள் வெளியில்

வந்து தலைகாட்டாமல் அதன் வாசற்படியை அடைத்து விடுவதும், முஸ்லிம்கள் வழிகேடடைய அவ்வலையில் சிக்கிக்கொள்ளாமல் காப்பாற்றவேண்டியதும் நம்மவர்களின் கடமையாகுமென்பதை நன்குணர்ந்து அதன்படியொழுக முற்படுவது அத்தியாவசியமாகும்.

தா. இ. ஹாபிஸின் தவறான பத்வா.

(M. V. அப்துல்ஜப்பார் சாஹிப் வரைவது.)

நேயன்மீர் !

ஹாபிஸ் என்பார், தா. இ. வில் "மார்க்க வினாவிடை" என்னும் தலையங்கத்தின் கீழ் பலவாறான மார்க்க முரணான விஷயங்களைத் தம் பேனாமுனை சென்றவாறெல்லாம் எழுதி உளரிக்கொட்டி வருகிறாரென்பது நேயர்களறிந்தவையே. அதனைக்கண்டு பொதுமக்கள் ஏமாந்துபோகாமலிருக்கும் பொருட்டு, அவர் மார்க்கமுரணாக அளித்திருக்கும் விடைகளின் கூற்றுக்களைப் பொது ஜனங்கள்பால் எடுத்துக்காண்பித்து, அதனைத் தக்கமுறையில் கண்டித்து பற்பல கட்டுரைகள்வெளியிட்டுவந்திருக்கின்றேன் என்பதை முஸ்லிம் உலகம் நன்கறிந்தேயிருக்கின்றது.

சன்மார்க்க சட்டதிட்டங்களை நன்குணராமல் ஹாபிஸ் என்பார், மேலும்மேலும் தமது விகடவினோத விடையில் தவறிழைத்துக் கொண்டே வருவதால், அதன் உண்மையைப் பொது ஜனங்கள்பால் எடுத்துக்காண்பிக்கக் கடமைப்பட்டுளேன். எனவே, அவர் 2-12-32-ல் வெளியான தா. இ. வில் ஜகாத் விஷயமாக அளித்திருக்கும் பத்வாவை வினாவுள்பட நேயர்களின் பார்வைக்கு அப்படியே தருகின்றேன். அதாவது:—

வினா:— (1) ஜகாத் பொருளைத்திரட்டி ஒரு சொத்து வாங்கி அதன் வருவாயைக் கொண்டு ஏழை முஸ்லிம் மாணவர்களுக்குக் கல்வி விஷயமாய் (ஸ்காலர்ஷிப்) செலவு செய்யலாமா? மேற்படி சொத்தின் வருவாயைக்கொண்டு ஜாதிமத பேதமின்றி வைத்தியவசதி கல்விவசதி செய்துகொடுக்கலாமா?

(2) ஜகாத்துப் பொருளைக்கொண்டு சொத்து வாங்குவது கூடாத காரியமெனின், ஜகாத்துப்பொருளை ஜாதிமத பேதமின்றிச்சர்வமக்களுக்கும் பொதுவான தர்ம கைங்கரியங்களுக்காகச் செலவு செய்யலாமா? அஃதாவது, தா. இ. 9-9-32-ல் இஸ்லாத்திலும் விவேகமற்ற தருமமா? என்ற வியாசத்தில் கண்டபடி செய்யலாமா?

விடை: (1) ஜகாத் பொருளைக்கொண்டு சொத்தேதேனும் வாங்கி அதன் வருவாயை எதிர்ப்பார்ப்பதைக் காட்டினும், கையில் பிரத்தியட்சமாகயிருக்கும்பொருளை நன்மையான முறையில்—ஏழைகளுக்குப் பிரயோசனம் தரத்தக்க வகையில் செலவு செய்வதே மேன்மையாகும். ஆதரவற்ற அனாதைகளும் அகதிகளுமான ஏழை மாணாக்கர்களுக்கு ஸ்காலர்ஷிப் (உபகாரச் சம்பளம்) கொடுப்பதும் நன்மையான காரியமேயாகும். ஜகாத்துப் பொருளைக்கொண்டு வைத்தியசாலையும் நிர்மாணம் பண்ணலாம்.

(2) ஜகாத்துப்பொருளை ஜாதிமத பேதமின்றிச் சர்வ மக்களுக்கும் செலவு செய்வதைக்காட்டினும் முஸ்லிம் மக்கள் பிரயோசனம்பெறக்கூடிய முறையில் செலவு செய்வதே மிகவும் நன்மையாகும். இதைத்தான் எமது குர்ஆன் வற்புறுத்திக்கொண்டிருக்கிறது.

ஜகாத் விஷயமாய் ஹாபிஸ் அளித்திருக்கும் விடையை கவனிக்கப்புகுமுன், அது விஷயமாய் நம் சன்மார்க்கத்தில் யாது கட்டளையிடப்பட்டிருக்கிறதென்னும் விபரங்களை முதலாவதாக கவனிப்போம். அதாவது, ஜகாத் பொருள்களை, திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்கும் 6 கூட்டத்தினருக்குக் கொடுக்க வேண்டும்; அதனை அக்கூட்டத்தைச் சார்ந்தவரின் கைவசப்படுத்திவிடவேண்டும்; பொது பண்டுகளிற் சேர்த்துப் பொதுவாய்ச் செலவிடக்கூடாது; குப்பார்களுக்குக் கொடுக்கக் கூடாது. என்பனபோன்ற அநேக விபரங்கள், குர்ஆன் ஹதீதுகளுடைய தக்க அத்தாக்ஷிகளைக்கொண்டு ஹிதாயா, விகா

யா, றத்துல் முஹ்தார்போலொற்ற பிரபல்ய மான மார்க்கக் கிரந்தங்களில் விபரிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நிலைமையில் ஹாபிஸோ, ஜகாத் பொருளைக்கொண்டு சொத்தேனும் வாங்கி அதன் வருவாயை எதிர்பார்ப்பதைக் காட்டிலும், பிரயோசனந் தரத்தக்க முறையில் ஏழைகளுக்குச் செலவு செய்துவிடுவதே மேலாகயிருக்கும் என வரைந்திருக்கின்றார். இதனால் ஜகாத் பொருளைக்கொண்டு சொத்துகள் வாங்கி அதன் வருவாயை ஏழைகளுக்குக் கொடுத்து வருவது ஆகுமென்று ஏற்படுகிறதல்லவா? இஃது கூடாத காரியமேயாகும். ஏனெனில் எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் ஜகாத் பொருள்களையே ஏழைகளுக்குக் கொடுத்துவிடும்படி கட்டளை பிறப்பித்திருக்கின்றார்கள். இந்த ஹதீது "மஆத் (ரலி) அவர்களைத் தொட்டும் புகாரி, முஸ்லிம் முதலிய சகல ஹதீது கிரந்தங்களிலும் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஆகவே, அனாதையும் அகதிகளுமான ஏழை முஸ்லிம் மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் (உபகாரச் சம்பளம்) கொடுக்கலாம்; ஹிந்துப் பிள்ளைகளுக்கு ஜகாத் பொருளிலிருந்து ஸ்காலர்ஷிப் கொடுக்கக்கூடாது என்பதை நன்கு தெரிந்துகொள்கின்றோம். இதனை ஹாபிஸ் நன்கு தெரிந்துகொள்ளாது உளறிக்கொட்டியிருப்பது அவரின் அறியாமையேயாகும். அவர் எதற்காகத் தமக்குத் தெரியாத விஷயங்களிலெல்லாம் தலையிட்டு மார்க்க முரணானவிடைகள் அளிக்கமுற்பட்டிருக்கிறாரென்பதுதான் நமக்குப் புலனாகவில்லை.

மேலும் ஜகாத் பணத்தைக்கொண்டு வைத்திய வசதிகள் செய்து மதபேதமின்றி யாவருக்கும் பிரயோசனமாகும்படி செய்யலாமென்று ஹாபிஸ் குறிப்பிடுகின்றார். இதுவும் அவருடைய அறியாமையேயாகும். ஏனெனில் அப்பணத்தைக்கொண்டு வைத்திய சாலைகள் நிர்மாணிக்கப்படுமாகில், அதிலிருந்து டாக்டர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டிய தேற்படும். இதுவும் ஜகாத்தின் நிபந்தனைக்கு முற்றும் முரணானதாகும். தவிர அந்தப் பணத்தைக் குப்பார்களுக்கும் செலவிடும்படி நேரிடும். இதுவும் சன்மார்க்கத்திற்கு விரோதமான காரியமாகும் என்பது வெள்ளிடை.

எனவே ஜகாத் பணத்தைச் செலவிடும் விஷயமாய் திருக்குர்ஆன் அநேக விபரங்களை அறிவித்திருக்கின்றது; எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களும் அநேக விபரங்களை விளக்கியிருக்கின்றார்கள். இவைகளை ஆதாரமாகக்கொண்டு இமாம்களான மகான்களும் ஜகாத்திற்கும், இதர சதகா (தருமங்) களுக்கு மிடையிலுள்ள வித்தியாசங்களையும் அவைகளுக்குள்ள சட்ட திட்டங்களையும் நன்கு விபரித்துள்ளார்கள். இவைகளை எல்லாம் ஹாபிஸ் என்பார் ஒரு பக்கல் ஒதுக்கி வைத்துவிட்டு, ஆதாரமும் அர்த்தமுமில்லாமல் தம்மிஷ்டப்படி மார்க்கக் கட்டளைகளை நிர்மாணிக்க முற்பட்டிருக்கின்றார். எனவே முஸ்லிம் நேயர்கள் இவைகளைப்பொருட்படுத்தாமல் குர்ஆனும், ஹதீதுகளும், மகான்களான இமாம்களின் சொற்களும் எதனைக் கூறிக்கொண்டிருக்கின்றதோ அவைகளைப் பின்பற்றி நடந்து ஜெயம் பெறுவார்களாக.

செய்தித் திரள்.

அறங்குடி.

சன்மார்க்க சாரண கமிட்டி.

மகுடத்தில் கண்ட கமிட்டியார் "றமலானின் மகிமை" என்னும் பெயருள்ள பிரசுரமொன்று வெளியிட்டிருக்கின்றார்கள். அதில் பரிசுத்த றமலான் மாதத்தின் நோன்பு நம்மீது கடமையாக்கப்பட்ட வருஷமும், றமலான் மாதத்தின் சிறப்பும், நோன்பு நோற்கும் விதமும், நோன்பு நோற்பதுகொண்டு மானிடர்களின் பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டுப் போகிறதென்பதும், நோன்பின் சட்டதிட்டங்களிற் சிலவும் குறிப்பிட்டிருக்கின்றது. இது சாதாரண மக்களுக்குப் பிரயோசன மளிக்குமென்று கருதுகின்றோம்.

பினங்

முஸ்லிம் மர்ச்சண்ட் சோசைட்டியில் மிஃருஜ் தின வைபவம்

பினங் முஸ்லிம் மர்ச்சண்ட் சொசைட்டியின் ஆதரணையில், 25-11-32 சனிக்கிழமை இரவு மிஃருஜ் வைபவக் கொண்டாட்டம் நடைபெற்றது. சொசைட்டியில் அன்றிரவு யாவரும் விருந்துண்டபின் 9 மணிக்கு ஜனுப் ஹாஜீ எஸ். அமீன் சாஹிப் ஜே. பி. அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் மகாநாடு ஆரம்பமாயிற்று. ஜனுப் அல்ஹாஜ் கூ. அ. அப்துல்மஜீது சாஹிப் அவர்கள் தக்கதோர் சொற் பெருக்காற்றினுர்கள். அதில் முன்னுள்ள நபிமார்கள் ஒவ்வொருவர்களின் குணுதிசயங்களையும் அவர்கள் செய்த தியாகங்களையும் முக்கியமாய் ஹஸ்ரத் மூஸா, இப்ருஹீம், இஸ்மாயில் (அலைஹிம்) போன்ற மேன்மை மிக்க நபிமார்களின் சரித்திரங்களையும் இனியநடையில் விளக்கிக்காட்டியும், எம்பெருமானுர் (ஸல்) அவர்களது மிஃருஜானது ஸ்தூல சரீரத்துடன்தான் நடைபெற்றன என்பதற்குள்ள தக்க அத்தாக்ஷிகளையும்எடுத்துரைத்து,நமதுஐந்து பர்ஜுகளிலொன்றுகிய தொழுகை, 50 வேளையிலிருந்து ஐந்து வேளைக்கு இரஞ்சிக் கேட்டு வாங்கிவந்தது சொற்பனத்தின் மூலம் எவ்வாறு நிகழ்வுறுதல் முடியும்? என்றும் நன்கெடுத்துக் காட்டி சபையோர்களின் மனங்களையெல்லாம் கவரச் செய்துவிட்டார்கள். பின்னர் ஜனுப் ஹாஜீ அமீன் சாஹிப் ஜெ. பி. அவர்களால் யாவருக்கும் வந்தனமளிக்கப்பெற்று தேனீர் வழங்கிய பின் சபை இனிது முடிவுபெற்றது.

நாகை

தீனிய்யா நஜ்மு

நாகப்பட்டணத்தின்கண் நிறுவப்பட்டிருக்கும் "ஜமாஅத்துல் முஸ்லிமீன் தீனிய்யா நஜ்மின்" ஒன்பதாவது வருட ரிப்போர்ட்டு வரப்பெற்ருேம். அதில் காரியதரிசி அவர்கள் சங்கம் பிற்போக்கடைந்திருக்கிற தென்னும் முறைப்பாட்டை வெளி யிட்டிருப்பதைப் பார்த்து விசனிக்கின்ருேம். ஆனுல் இச்சங்கம் ஏற்பட்டு இதுநாள் வரை நல்ல முறையில் தக்க தொண்டாற்றி வந்திருக்கின்றது. ஏதோமெம்பர்களிலுள்ள முக்கியஸ்தர்களின் ஊக்கக் குறைவினுல் அசம்பாவிதமாய் இவ்வாறு ஏற்பட்டிருக்கலாமென்று கருதுகின்ருேம். ஆனுல் இவ்வாறு க்ஷீணதிசைஅடைந்ததற்கு, ஒவ்வொரு மெம்பர்களிடமும் ஏராளமாகசந்தாவசூலாகாமல் பாக்கியாயிருப்பதே காரணமெனத்தெரிகிறது. ஆதலின் நிர்வாகிகள் தங்களுக்குள் ஏதாகிலும் மனஸ்தாபங்கள் ஏற்பட்டிருப்பின், அவைகளை அகற்றிவிட்டு ஊக்கத்தோடு முன்போல் உழைக்க முற்பட்டு தங்கள்மீது பாக்கியாயுள்ள சந்தாக்களை செலுத்திவிடின், கூடியசீக்கிரம் நஜ்மு தன் பழைய நிலைமைக்கு வந்துவிடுமென்பது திண்ணம். அதையே நாம் எதிர்பார்க்கின்ருேம்.

வடகரை

அன்வாருல் இஸ்லாம்

இச்சங்கத்தார் "துஹ்பத்துல் இஹ்வான் பீ-பயானிசௌமிரமலான்" என்னும் விளம்பரமொன்று விடுத்திருக்கின்ருர்கள். இதில் அல்லாஹ்த ஆலாவால் நம்மீது கடமையாக்கப்பட்டிருக்கும் ஐந்துபர்ஜுகளிலொன்றுகிய நோன்பின் மகுத்துவத்தையும், அதன் பிரயோசனங்களையும், அதன் முழு விபரங்களையும், தராவீஹ்தொழுகை, இஃதிகாபிருப்பது, பித்ராக் கொடுப்பது, பெருநாள் தொழுகைகளின்விபரங்களையும்நோன்பு திறக்கும்நேரம் சஹரின் முடிவு முதலியவைகளையும் தக்க முறையில் குறிப்பிட்டிருக்கின்ருர்கள். இது ஒவ்வொருவரிடமு மிருக்குமாயின், தக்க பிரயோசனமளிக்குமென்று நம்புகிருேம். இது வேண்டுவோர் மாயவரம் தாலுக்கா வடகரை அன்வாருல் இஸ்லாம் சங்கப் பிரஸிடெண்டு ஜனுப் மௌலவீ முஹம்மது அபூபக்ர் சாஹிப் அவர்களுக்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

"ஹிபாஜத்துல் இஸ்லாம்"

(மூன்ரும் வால்யூம்)

நமது மாசிகையின் மூன்ரும் வால்யூம் பைண்டு செய்யப்பட்டு வருகிறது சொற்பப் பிரதிகளே தயாராகுமாதலால், ஆடர்களைப் பதிவுசெய்து கொள்ளும்படி கோருகிருேம். இது கைவசமிருப்பது, மார்க்க சட்டதிட்டங்களுடைய அரும்பெரும் நூல் கைவசமிருப்பது போலாகுமென்பது வெள்ளிடை. **காலிகோ பைண்டு** ரூ. 3—8—0, தபார்சிலவு வேறு.

மிர்ஸாவும், தா். இ. ஹாபிஸும்.

(அபுல்ஹஸன் மத்ராஸி வரைவது.)

அன்புற்ற அருமை சோதரீர்!

ஹிந்துஸ்தானத்தில் தோன்றித் தம்மை நபி என்று தாவாச் செய்து சென்ற மிர்ஸா குலாம் அஹ்மதை இதுகாலை நந்தமி மூலகு நன்கறிந்தே யிருக்கிறது. அவர் செய்த தாவாக்களும், முன்னறிக்கைகளும் பொய்யாகவே முடிந்திருப்பதால், அவர் பொய்யரெனத் தீர்மானிக்கப்பட்டுப்போ யிற்று. அவர் எம்பிரான் நபிகள் திலகம் காத்த முந்நபிய்யின் (ஸல்) அவர்களுக் குக் கெதிரிடையாக புதியதோர்மார்க்கத்தை ஸ்தாபிப்பதற்காக வேண்டி அளவுகடந்தபிர யாசை எடுத்தார். அது அவரால் முடி யாதுபோய்விட்டது. அப்போலியை இன்னும் ஒரு சிலர் நபி என்றும், முஜத்திதென்றும், மஹ்தியென்றும், இன்னும் என்னென்னவோ வென்றும் ஒப்புக்கொண்டும் இயம்பியும் திரி கின்றனர். ஆனால் அகில உலகமுஸ்லிம்களும் உலமாக்களும் இவ்வேஷதாரியின் கூற்றுக் களையும், கொள்கைகளையும் உதறித் தள்ளி அதனைத் தக்க முறையில் கண்டித்திருக்கின் றார்கள் என்பது வெளிப்படை

அவர் தம்மை நபி என்று தாவாச் செய்ய முற்பட்டு அக்கொள்கைமீதே ஸ்திரமாக யிருந்து, அதுவிஷயமாய்ப் பற்பல நூற்களை யும் இயற்றித் தன் உம்மத்துகளென்று ஒரு சிலரையும் சேர்த்துக்கொண்டார். எனவே, சுயநலத்தைக் கருதிய சிறியதோர் கோஷ்டி யினர், அவரைப் பின்பற்றி நடக்க முற்பட் டனர். இதுவன்றிமிர்ஸா தம்மைப் பின்பற்றா தவர்களை காபிர்களென்றும் தீர்மானித்துத் தம்மைநபியென்றுஒப்புக் கொள்ளாதவர்கள் பின்னின்று தம் உம்மத்துகள் தொழக் கூடா தென்றும் ஆக்ஞாபித்தார்.

தவிர அவர் தன்னை, எம்பெருமானார் அப் லஹுற்றசூல் சற்குணசீலர் (ஸல்.) அவர்களை விட மேலானவரென்று "மக்தூபாத்த அஹ்மதி"யில் வரைந்தார். இன்னும் ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர்களை விபசாரி என்று சற்றும் மனமஞ்சாது வரைய முற்பட்டார். இவ்வாறு அவர் பிதற்றியுள்ள பொய்க்கூற்று களும், அபாண்டப் புளுகுகளும் மட்டிடமுடி யானதன வாகும். இக் காரணங்களைக் கொண்டே அவர் காபிர், முர்தத்து ஆய் விட்டாரென்றும், அவரை யாரும் பின்பற் றக்கூடாதென்றும், அவ்வாறு பின்பற்றிய வர்களும் அவருடைய கொள்கையை சரி கண்டவர்களும் முர்த்தாய் விட்டார்களென் றும் தக்க அத்தாக்ஷிகளோடு மார்க்கத்தீர்ப் பளிக்கப்பட்டுப்போ யிருக்கிறது. இற்றைக் கும் உலகின்கண் வதிந்துள்ள பெரும்பா லான முஸ்லிம்கள் (சுயநலத்தை விரும்பிய வர்களல்ல, தீய பிரசாரத்தை மானிடர்க ளிடையே பரத்தமுற்பட்டவர்களல்ல)இதன் மீதே ஒத்தோர்மித்திருக்கின்றார்கள்.

இந் நிலைமையில் இவ் வழிகேடனைக் குறித்து தா. இ. ஹாபிஸ் என்பார் 16-12-32 தா. இ. வில் விடுத்திருக்கும் மார்க்கத் தீர்ப்பை இத னடியில் தருகின்றேன்.

II

வினா:—(1) வாக்களிக்கப்பட்ட இப்னு மர்யம் ஈஸா காதியானியில் அவதரித்த மிர்ஸா என்றும், இல்லை நாலாம் வானத் தில் இருக்கிறாரென்றும் ஒப்புக்கொள் ளும் இருவருள் ஒருவரைப் பின்பற்றியோ இரண்டையும் ஒப்புக்கொள்ளாமலோ ஒரு முஸ்லிம் தொழுதால் தொழுகை கூடுமோ? கூடாதா?

(2) வாக்களிக்கப்பட்ட இப்னுமர்யம்ஈஸா வானத்தில் இருக்கிறாரா? இல்லை, நம்மைப் போன்று கர்ப்பத்திலிருந்து இவ் வுலகத் திற்கு வருவாரா? உங்கள் கொள்கை என்ன?

(3) மிர்ஸா குலாம் அஹ்மது சத்திய முஸ் லிமா? அல்லது சுவாமி தயானந்தரைப் போன்றவரா? உங்கள் சொந்த அபிப்பிரா யம் என்ன? ஆராய்ந்து சத்தியத்தைச் சொல்லுங்கள்..........................

விடை:—(1) தொழுகை கூடும். இல்லையேல் வானுலகம் சென்று பார்த்துக் கொள்க.

(2) நான்காம் வானமென்னு மிடத்திற்கு நாம் போகவில்லை யாகையால், அந்த ஈஸா (அலை) அவர்கள் விஷயத்தில் நாம் ஒன்றும் தீர்ப்புக் கூற முடியாமலிருப்பதுபற்றி வருந்துகின்றோம்.

(3) அவரும் ஒரு முஸ்லிம் தான். ஸ்வாமி தயானந்தர், பண்டிட் லோகராம், ஸ்வாமி சிரத்தானந்தரைப்போல் காபிரானவரல்லர்...............

சோதிரர்காள்! மேலே கூறப்பட்டிருக்கும் வினாவையும் விடையையும் நன்றாய் கவனித்திருப்பீர்கள். மிர்ஸா ஓர் சத்திய முஸ்லிமென்றும், அவரைப் பின்பற்றியவர்கள் பின்னின்றுதொழலாமென்றும் ஹாபிஸ் தீர்ப்புக் கூறியிருக்கின்றார். மிர்ஸாவோ தம்மை நபி என்று தாவாச்செய்து அதனைப்பற்பல புத்தகங்களிலும் வரைந்து சென்றிருக்கிறார். ஹாபிஸின் குருநாதராகிய பா. தா. வும் தமது பல வெளியீடுகளிலும் குறிப்பாய் தமது பத்தாம் ஆண்டு பூர்த்தி விழாமலரிலும் மிர்ஸாவின் படைத்தை வரைந்து "இக்கால நபியென்றும் மஸீஹென்றும் வாதாடிச்சென்ற மிர்ஸா குலாம் அஹமத்காதியானி" என்று வரைந்து, மிர்ஸா நபிப்பட்டத்தைக் கொண்டு வாதாடிச் சென்றார் எனக் குறிப்பிட்டிருக்கின்றார். இவருடைய கூற்றுப்பிரகாரமும் மிர்ஸா நபிப் பட்டத்தைக்கொண்டு வாதாடிச் சென்றவரென்று ஏற்பட்டுவிடுகிறது. எம்பெருமானார் (ஸல்.) அவர்களுக்குப் பின் நபிப் பட்டத்தைக் கொண்டு வாதாடுபவன் காபிரென்பதில் சந்தேகமுளதோ? எம்பெருமானார் காத்தமுந் நபிய்யீன் (ஸல்.) அவர்கள் இறுதியானநபியாக யிருக்குமென்று அல்லாஹ்தஆலா குர்ஆன் ஷரீபில் பஹிரங்கமாக அறிவித்திருக்கின்றான். எனவே, ஏகத்துவத் தூதர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்குப் பின் நுபுவ்வத்தைக்கொண்டு வாதாடுபவன் குர்ஆனை இன்கார் செய்தவனாவான். குர்ஆனை மறுப்பவன் காபிராய் விடுவான் என்பதில் எவ்வித சந்தேகங் கொள்ளவும் இடமில்லை. இதனால்தான் நபிப் பட்டத்தை தாவாச்செய்த "முஸைலமத் துல்கத்தாப்" என்பவனை, எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் மூர்த்தத்தென தீர்மானஞ் செய்தார்கள். தவிர இவனையும் "அஸ்வதுல் அன்ஸி" முதலானவர்களையும் கொன்றுவிடும்படி குலபாயெராஷிதீன்கள் தீர்மானித்திருக்கின்றார்கள். இக்காலை காதியானிக் கொள்கையைப் பிரசாஞ்செய்து வந்ததால் காபூலில் நிஅமத்துல்லா கான் கெல்லெறிந்து கொல்லப்பட்டான்.

இந்நிலைமையில் மிர்ஸா காபிரல்ல; முஸ்லிம் தான் என்று கூறுவது அறிவீனமேயன்றி வேறில்லை என்பது திண்ணம். எனவே மிர்ஸாதம் பல கூற்றுக்களைக்கொண்டு காபிராய் விட்டானென்பதை இன்னும் பற்பலஆதாரங்களைக்கொண்டு நிரூபிக்கத் தயாராயிருக்கிறேன். இதற்காக நாங்கள் "ஸேலஞ்" செய்கிறோம். மூலையில்உட்கார்ந்துகொண்டுஆதாரமற்ற விடைகளை வெளியிட்டு விடுவது ஆண்மைத்தனமன்று. வெளியில்வரட்டும். மிர்ஸாவென்னும் புழுகன் முஸ்லிமாகயிருக்க முடியுமா? வென்பதை நிரூபிக்கட்டும். இதனை ஹாபிஸ் ஒப்புக்கொள்வாரானால் ஒருபொது இடத்தில் கூடி விவாதிப்போம். பொது முஸ்லிம்கள் இவருடைய அநாமதேய—ஆதாரமற்ற விடைகளின் தன்மைகளை அப்பொழுது நன்கு தெரிந்துகொள்வர்.

ஆகவே நேயர்கள் இவ்வாறான மார்க்க முரணான—சன்மார்க்கத்திற்கு முற்ற முற்ற விரோதமான விடைகளை நம்பி தங்கள் ஈமானைக் கெடுத்துக்கொள்ளாமல் தக்க முறையில் நடந்துகொள்வார்களாக. ஆண்டவன் எல்லோரும் நேரான வழியிற் செல்ல உதவி புரிவானாக.

முக்கிய அறிவிப்பு.

இஷாஅத்துல் ஹஸனத் பீதர்ஜுமதில் பாக்கியாத்துல் ஸாலிஹாத் என்னும் அரும் நூல் வேலூர் அரபிக்காலாசாலையின் பிரதம ஆசிரியராகயிருந்த மௌலானா மௌலவீ அல்ஹாஜ் அப்துல்காதிர்பாதுஷா சாஹிப் அவர்களால் இயற்றப்பெற்ற "பாக்கியாத் துஸ்ஸாலிஹாத் என்னும் மகிமைவாய்ந்த நூலின் மொழிபெயர்ப்பாகும் இதில் அநேகமஸ்அலாக்கள் சிறந்திலங்குவதால் யாவரும் வாங்கிப்பார்ப்பது அத்தியா அவசியமாகும் 270 பக்கங்கொண்ட புக் 1க்கு கிரயம் ரூ. 1—8—0.

இது கிடைக்குமிடம் மத்ரஸாபாக்கியாத்துஸ் ஸாலிஹாத் வேலூர்.

மலாய்நாடு, மெஸர்ஸ் K.A. பகீர் முஹம்மது & Co., 27, ரம்பாஸ்டீட் கிள்ளான் F.M.S.

ரமலான் மாதச் சிறப்பு

ரமலான் மாதம் எத்தகைய (மகத்துவம் பொருந்திய) தென்றால், அதிற்றான் திரு குர்ஆன் (என்னும் வேதம்) அருளப்பெற்றது. அஃது மானிட வர்க்கத்திற்கு நேர்வழிகாட்டி யாகவும், அந்நேர்வழிக்கு (தெளிவான) அத்தாக்ஷிகளாகவு மிருப்பதுடன் பகுத்தறிவையு மளிக்கக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே உங்களிலெவன் அம்மாதத்தை யடைகின்றானோ, அவன் அதில் நோன்பு நோர்க்கவும். மேலும் எவனேனும் வியாதியஸ்தனாக ஆய் விட்டால், அல்லது யாத்திரையில் இருந்தால் அவன் (நோன்பு நிறைவேற்ற வேண்டிய) தவணையானது (அத்தங்கடம் நீங்கிய) இதர நாட்களிலாகும். உங்களுக்கு ஆண்டவன் இலேசையே நாடுகின்றான். மேலுமவன் உங்கட்கு கஷ்டத்தை நாடவில்லை. ஆகையால் நீங்கள் நோன்பு நோர்க்க வேண்டிய நாளின் எண்ணிக்கைகளைப் பூர்த்திச்செய்து வைப்பீர்க ளென்பதற்காகவும், உங்கட்கு இறைவன் நேர்வழி காட்டியதற்கு அவ் வாண்டவனை பெருமையாக்கி வைப்பீர்க ளென்பதற்காகவும், இன்னும் நீங்கள் (அவனது நிஃமத்தின்மீது) ஷுக்று செய்வீர்கள் என்பதற்காகவும் (நோன்பை உங்கள்மீது விதியாக்கி வைத்தான்.)— குர்ஆன் 2. 185.

ஆண்டின் பன்னிரு மாதங்களில், சிறப்பும் பெருமையும், மாண்பும் மகிமையும் மிகுந்து சிறந்து விளங்குவது பரிசுத்த ரமலான் மாதமேயாகும். முஸ்லிம்களில் ஆண்பால் பெண்பால் யாவரும் அதிக ஆவலுடன் எதிர்ப்பார்த்திருந்து வரவேற்றுப் புனித முறையில் கொண்டாடுவதும் ரமலான் மாதமே! ரமலான் மாதம் இத்துணை மகிமைக்குத் தகுதியானதாயிருப்பது எதனால்? அது முஸ்லிம் மகாஜனங்கள் ஏககாலத்தில், ஒரேவிதமாய், இறைவனுக்காக வென்று பரலான நோன்பை நிறைவேற்ற ஏற்பட்டிருப்பதனாலேயேயாம்!

இறைவன் தன் திருமறையாகிய குர்ஆன் ஷரீபின் பலவிடங்களிலும் ரமலான் மாதச் சிறப்பைபற்றிச் சிலாகித்துக் கூறியுள்ளான். “ரமலான் மாதமானது மானிடவர்க்கத்தாரனைவர்க்கும் நேர்வழிகாட்டுஞ்சாதனமாகிய குர்ஆன்ஷரீப் இறங்கிய மாத”மென்று இறைவனே அதனைப் புகழ்ந்து கூறியிருப்பதால் அதன்சிறப்பும் மேன்மேலும் சிரேஷ்டமானதெனத்தெரிகிறது.

முற்காலங்களிலுள்ள நபிமார்கள்மீது நோன்பு விதியாக்கப்பட்டிருந்ததெனினும், சமய சந்தர்ப்பத்துக்குத் தக்கபடியும், சோதிப்புக்காகவேண்டியுமிருந்துவந்தனவேயல்லாமல், நம் உம்மத்தே முஹம்மதீ கட்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதைப் போல் ஆண்டுதோறும் ரலமான் மாதமுழுதும் நோன்பு பர்லாக ஏற்படுத்தப்பட்டில்லை. ஆகையால் ரமலான் மாதமும் அதன் நோன்பும் மற்றெல்லா மாதங்களைவிடவும், மற்றெல்லா வர்க்கத்தாரும் அனுஷ்டித்த நோன்புகளை விடவும் மகாசிறப்பும் சீரும் சிரேஷ்டமும் வாய்ந்தனவாக யிருக்கிறதென்பதில் ஐயமில்லை.

மேலும் ரமலான் மாதமானது மானுஷ்ய வர்க்கத்துக்கு கதிமோக்ஷத்தையும், ஈடேற்றத்தையும் அளிக்கும் மாதமாகும். அது மானுஷ்யர்களின்தேகத்தையும், ஆன்மாவையும் பரிசுத்தப்படுத்தும் அரும்பெரும் திங்களுமாகும். எவ்வாறெனின், நாம் வருஷத்தில் 11-மாதங்களும் திருப்தியாய்—ஹலாலானதையெல்லாம் தின்று ஜீரணித்து புஷ்டியும் தழதழப்பும் அடைந்து, அதனால் ஜீவியத்துக்குரிய அளவற்ற சுகபோகங்களை அனுபவிக்கின்றோம். இவ்வருட் பாக்கியங்களை அளித்த கருணாகரனாகிய எல்லாம்வல்ல இறைவனை வணங்கி அவன் அளித்த நிஃமத்துகளுக்கு ஷுக்று (நன்றி)புரிந்து இறைவனின் திருப்தியைப் பெறும் முறையில் நோன்பானது விதியாக்கப் பட்டிருக்கின்றது. மேலும் 11-மாதமும் புசித்துப் பருகி நம் வயிற்றிலுள்ள ஜீரணக்கருவிகட்கும், பொதுவாக தேகத்தின் அங்கங்கட்கும் ஓயாத உழைப்பையளித்து வந்தோம். ஆகையால் வருஷத்தில் ஒரு மாதம் அதாவது சிறப்பு

மிக்க திங்களாகிய ரமலானில் உண்ணுமலும் பருகாமலும் சுகபோகமடையாமலுமிருந்து ஆண்டவனுக்காகவென்று நோன்பை அநுஷ்டிப்போமாளுல், அதனல் ஜீரணக்கருவிகளும் தேக உருப்புகளும் ஒய்வுபெற்று சீர்வுற்று புதிய சக்தியும், சுத்தியும், பலமும்பெற்று ஜீவயம் வளர்வதற்கு இம்மாதம் பெரும் அநுகூலமாகயிருக்கும்.

தவிர, புனிதமும், மாண்பும், மகிமையும், சீரும், சிறப்பும் மிக்க இந்த ரமலான் மாதத்தில், நோன்பு, இப்தார், ஸஹர், தஹஜ்ஜுத், தராவீஹ் போன்ற அளவற்ற பிரயோஜன மளிக்கவல்ல சாதனங்கள் இருப்பதோடல்லாமல், ஒவ்வொருவரும் தம்தம் பக்தி வணக்கத்துக்கேற்பப் பெறும் பிரயோஜனங்களும் அளவற்றனவாகயிருக்கிறது. ஆதலின் ரமலானின் மகிமைகளை முஸ்லிம் சோதரர்கள் நன்குணர்ந்து அம்மாதத்திற் புரியவேண்டிய நல்லனுஷ்டானங்களைப்புரிந்துவருவரேல், இகபரமிரண்டிலும் அன்னேர் சீரும், சிறப்பும், ஜயமும், முக்தியும் பெற்று விளங்குவதோடு, ஆண்டவனின் பேரருளுக்கும் பாத்தியஸ்தர்களாவர்களென்பது திண்ணம். எல்லாம் வல்ல இறைவன் நம்மெல்லோருக்கும் ரமலானின் பரக்கத்தைக் கொண்டு நல்லுதவி புரிவாளுக.

நோன்பின் மகத்துவம்.

முஸ்லிம் சகோதரர்காள்! சீரும் சிறப்பும் மாண்பும் மகிமையும் பொருந்திய பரிசுத்தத் திங்களாகிய ரமலான் மாதத்தில், நோர்க்க வேண்டுமென இறைவனுல் கட்டளையிடப்பட்டுள்ள நோன்பின் மகத்துவமானது அளவிடப் பாலனவாகும். அவற்றை விரித்துக் கூறுவதெனின், இடமும் காலமும் போதா. சுருங்கக் கூறுமிடத்து, நோன்பானது மானுஷ்ய கோடிகளின் ஆன்ம நிலையையும் தேக நிலையையும், அதைச் சார்ந்த குண சுபாவ அம்சங்களையும் பரிசுத்தப் படுத்தி, பரிபக்குவ அந்தஸ்திலாக்கி வைக்கின்றதென்பதிலய்யமில்லை. எனவே அவ்வரும் மாண்பு மிக்க நோன்பின் அந்தரங்க பகிரங்கப் பிரயோசனங்களை ஈண்டு சுருக்கமாய் எடுத்துரைப்போமாக.

சகலசமுகத்தார்மீதும் நோன்பு விதியாயிருந்தது.

(ஈமான்) நன்நம்பிக்கை கொண்டவர்களே! உங்களுக்கு முன்னுண்டாயிருந்த சமுகத்தார்கள்மீது (நோன்பு) விதியாக்கப்பட்டிருந்ததைப்போல் உங்கள்மீதும் விதியாக்கப் பட்டிருக்கின்றது என்று இறைவன் தன் பரிசுத்தக் குர்ஆனில் கூறியுள்ளான். இதனுல் நமக்கு முன்னுண்டாயிருந்த நபிமார்களெல்லோரின் ஷரீஅத்திலும், மக்கள் பகற்காலத்தில் உண்ணுமலும், பருகாமலும், தங்கள் ஹலாலான மனைவிகளுடன் சுகமனுபவிக்காமலுமிருந்து நோன்பை அனுஷ்டித்து வந்தார்களென்பது நன்கு தெரியவருகின்றது. நோன்புடைய இவ்வனுஷ்டானமுறை, பாவா ஆதம் (அலை.) அவர்கள் காலமுதல் ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் காலம்வரை அவ்வண்ணமே இருந்து வந்தது. இறுதியாய், நம்முஸ்லிம்கள்மீதும் நோன்பு பர்லாக்கப்பட்டது.

நோன்பின் (ரூஹ்) உட்பொருள்

சன்மார்க்கப் போதத்தின் சிரேஷ்டத்துவமானது, மானுஷ்ய வாழ்வுக்குள் சத்குண ஒழுக்கம் உண்டாதல் வேண்டுமென்பதும், புகழத்தக்க சத்சுபாவத்தால் அம்மானுஷ்ய வாழ்வு இலங்கவேண்டு மென்பதும், மானிடன் சகல துற்குணங்களையும் வெறுத்து அதைவிட்டு நீங்கவேண்டுமென்பதும், மனே இச்சைகளைத் தன்னுதிக்கத்துக்குள்ளாக்கிக் கொள்ள வேண்டுமென்பதும், மனத்தை யடக்கி சகிப்புத்தன்மை கொள்ளவேண்டுமென்பதும், தீய சேஷ்டைகளைவிட்டும் முற்றும் நீங்கியிருத்தல் வேண்டுமென்பதும், விஷமகாரியங்கள் எதுவும் பிரவர்த்தியாகாமல் வாழ்க்கைத் தூய்மையடைய வேண்டுமென்பதுமாகும். இவ்வித சகலவித இலக்ஷணங்களும் உண்டாகவேண்டுமாயின், இதற்குரிய சிறந்த உபாயம், மானுஷ்யன் தன்னிலமைந்துள்ள விஷம்போன்ற அமானுஷீகத்

தன்மைகளை நீக்கிக்கொள்ளவேண்டும். அவ் விஷம் போன்ற கொடிய நஞ்சைக் களைந் தெறிவதற்குரிய அறிய ஔஷதம் நோன்பே யாகும்.

பொதுவாக, மானுஷீகத் தன்மையில் அமைந்துள்ள அமானுஷீகத் தனத்தின் தூண்டுதலினால்தான் மானிட வாழ்வினுள் சகலவிதமான தீங்குகள் தென்பட்டு விடுகின்றன. ஆகையால் அந்த அமானுஷீகத்தனமான தூண்டுதல்களை அடக்கி ஒடுக்கி விடுவோமாயின், நாம் அநேகத் தீங்குகள், சங்கடங்கள், வழிகேடுகள் முதலிய யாவற்றையும் விட்டும் விடுதலைப் பெற்றவர்களாய் விடுவோம்.

"வயிற்றுக்குள் ரொட்டியைப் போடாவிட்டால் வயிற்றுக் கோளாறுகள் அனைத்தும் தொலைந்து போகிறது" என்னும் பொருள் கொண்ட பழமொழியொன்று பஞ்சாபிய பாஷையிலிருக்கின்றது. நமதுஇஸ்லாமியஷரீஅத்திலுள்ள நோன்பு சம்பந்தமான சட்ட திட்டங்களும், இவ்வாழ்ந்த கருத்தை தக்க முறையில்ருசுப்பிக்கின்றது. எனவே, லோக தயாளனான அல்லாஹ்த ஆலா நோன்பின் வாயிலாய்த் தன் அடியார்களுடைய வாழ்வு, சற்குண நல்லொழுக்கத்துறையில் மிக மேன்பதவி யடையும்படிச் செய்திருக்கின்றான் என்பதில் ஐயமில்லை.

நோன்பினாலாகும் குண ஒழுக்கம்

நோன்பின் மகத்துவத்தால், நோன்பு நோர்ப்பவரின் குண ஒழுக்கமானது மேன்மையடைகிற தென்பது திண்ணம். மனோ இச்சையை அடக்கல், சகிப்புத்தன்மை, அமைதி முதலியனவும் இதனால்உண்டாகின்றன. தீய காரியங்கள், தீய மனத்தூண்டுதலான சேஷ்டைகள் முதலியனவற்றைவிட்டும் நோன்பாளி பரிசுத்தம் பெறுகின்றான். நோன்பு நோர்ப்பவன் இத்தாரணியின் கண் முதற்றரமான அமைதிப்பிரியனாகவும்,சாந்த புருஷனாகவும், தூய்மை யுடையவனாகவும் காணப்படுவான். அவற்றுடன் அவன் தன்மையில் வாழ்க்கை சம்பந்தமான பல சீர் திருத்தங்களும் உண்டாய்விடுகின்றன.

மேலும் முஸ்லிமொருவன் அவ்விதமான சிறந்த குண ஒழுக்க இலக்ஷணங்களைத் தன்னில் அமையப் பெற்றுக்கொள்வானாயின், அவனது நித்தியவாழ்வின் முறையிலுங்கூட எத்தகைய கேடுகளும் உண்டாகமாட்டாது.

நோன்பினால் இராஜீய பலன்.

எந்தச் சமூகத்தினர் சமுதாய வாழ்வுக்குரிய உயரிய அனுஷ்டானத் திட்டங்களை உடையவர்களா யிருக்கின்றனரோ, அன்னோர் இவ்வுலகின்கண் எக்காலும் சீரும் சிறப்பும் பெற்றோங்கும் சமூகத்தினராகவே விளங்குவர். அவர்கள் எவ்விதக் கஷ்ட சிரமங்களையும் சகிப்பதில் சிறிதும் பின்னடையாதவர்களாகவும் விளங்குவர்.

மேலும், கொடிய வெய்யிற்காலமா யிருப்பினுஞ் சரியே, நோன்பு நோர்ப்பவர், தினமும் பன்னிரண்டு, அல்லதுபதின்மூன்றுமணி நேரம் வரை எவ்வித உணவுப்பொருளும் உட்கொள்ளாமல் உண்ணாவிரத மனுஷ்டிக்கும்படியானபயிற்சியை, நோன்பானது அன்னோர்க்குப் புகட்டுகின்றது. நோன்பாளிகள் ஆண்டவனது கட்டளைக்காக எத்தகைய கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் அதனை அனுஷ்டிப்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். இங்ஙனம் முஸ்லிம்கள் புரியும் பிரயாசைகள் இராஜீய சிப்பாய்ஒருவன் புரியும் பிரயாசையைக் காட்டினும் சிறப்பும் தத்துவமுமுடையனவா யிருக்கின்றன. ஆகையால் முஸ்லிமொருவன் இறைவன் பாதையில் சிப்பாயாகக் கிளம்புவானாகில், அவன் (மேனாட்டுச் சிப்பாயைப்போல்) பிஸ்கட், கேக், சோடா, ஐஸ் ஜலம், ரொட்டி முதலியனவற்றை உண்ணாமலும், ஒரு முடக்கு ஜலமும் பருகாமலும் சுமார் 16-அல்லது 24 மணி நேரம் வரையிலுங்கூட பிரயாசைப்புரிவதற்குரிய ஆற்றலும் அனுபவமுடையவனாக இருக்கமுடியும். இவ்வாறு உண்மையான முஸ்லிமொருவன் யுத்தக்களத்தில் ஏற்படும் பிரயாசையையும் கஷ்டத்தையும் சகித்துக் கொள்வது உலகசம்பந்தமான நன்மையை கருதியோ, பிறரின் புகழைக்கருதியோ வன்று. யாவும் அவ்வொரே ஆண்டவனுக்காகவேயாகும். பண்டைப்போது இஸ்லாமிய ஜிஹாதுகள் நிகழ்வுற்றசந்தர்ப்பங்களில் அக்கால முஸ்லிம்கள் மேற்கூறியவாறு நாளெல்லாம் அன்னாகாரமின்றி போர்ப்புரிந்த நிலைமையிலும் ஆண்டவனுக்காக உயிர்களை அர்ப்பணஞ்செய்து முன்னணியில் நின்றார்களே அல்லாமல், சிரமத்தைக்கருதி ஒரு சிறிதும் பின்னடைந்தார்களில்லை!

நோன்பினாலான மறுமைப் பிரயோஜனம்.

யாரேனு மொருவன் ஈமான் உடையவனாகவும், (ஆண்டவனிடம் நற்கூலி பெறுவதின்) புனித எண்ண முடையவனாகவு மிருக்கும் நிலைமையில், ரமலான் மாதத்தின் நோன்பு நோர்ப்பானாகில் அவனுடைய பாபங்களில் முந்தியவை யனைத்தும் மன்னிக்கப்படுகிறது என்று ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது. இறைவனருளால் பாபங்கள் மன்னிக்கப்படுவது மறுமையில் மாபெரும் பிரயோஜனமாகிய ஈடேற்றத்துக்கு அறிகுறியாகும்.

பாபம் மன்னிக்கப்படுவேதின் தத்துவம்.

நோன்பின் காரணத்தால், சகல பாபங்களும் மன்னிக்கப்படும் என்று ஹதீதில் கூறப்பட்டிருப்பதின் ஆழ்ந்த கருத்தும் தத்துவமும் யாதென கவனிப்போமாகில், நோன்பு நோற்பவன் தன் புனிதமான அனுஷ்டானப் பூர்வமாய் "என் இரக்ஷகனே! யான் உன்னுடைய ஆக்ஞைக் குடன்பட்டு உன் திருப்தியைக் கோரி உண்ணல், பருகல், மனோ ஆசைகட்கு உடன்படல் ஆகியவற்றை எல்லாம் விட்டுவிட்டேன்; உன்னுடைய அருளாகிய திருப்தியைப் பெறுவதற்காக வேண்டி யான் யாவற்றையும் அர்ப்பணஞ் செய்ய சித்தமாயிருக்கின்றேன்; ஆகையால் என் பாபங்களை மன்னித்து, புண்ணியமளித் தருள்புரி, என்று பிரார்த்திப்பவனைப்போ லாகின்றான். இவ்வாறே, ரமலான் மாதத்தின் இரவுகளில் தொழுகை நிறைவேற்றுபவன் அனுஷ்டானப் பூர்வமாய், ஆண்டவனை நோக்கி, "ஏ இறைவனே! நீ பரிசுத்த குர்ஆனில் இட்ட ஆக்ஞைகளை யான் ஏற்று நடக்கின்றேன்; நீ குர்ஆனில் விலக்கியுள்ள கெட்ட காரியங்களை விட்டு நீங்கி, உன் முன்னிலையில் தவ்பாச் செய்கின்றேன்; குர்ஆனை ஏற்று நடத்தல் என்னும் விஷயத்தை இதோ யான் என் அனுஷ்டானப் பூர்வமாக நிறைவேற்றி வைப்பதால், "இறைவனே! நீ என்பாவங்களை யெல்லாம் மன்னித்தருள்வதோடு இனியும் யான் என் ஜீவியகாலமனைத்தும் உன் கட்டளையாகிய குர்ஆன் போதனையை வழுவாது பின்பற்றி யொழுகுவதற்கான நற்பாக்கியத்தை யளித்தருள்வாயாக!" என்று பிரார்த்தனைப் புரிவதைப் போலாகின்றது.

இதனால் ஆன்மத்தூய்மையும், இறைவனிடம் அடிபணிந்து கேட்கும் தாழ்மைத் தன்மையும், அதனால் குண ஒழுக்கத்திருத்தமும், தெய்வ பக்தியான வணக்கமும் அபிவிருத்தியாகிற தென்பதில் ஐயமில்லை.

நோன்புக்குரிய நற்கூலி.

ஒவ்வொரு நல்லனுஷ்டானத்துக்காகவும் நற்கூலியாகிய புண்ணியம் உண்டாயிருக்கின்றது. ஆனால் நோன்புக்குரிய நற்கூலியானது அல்லாஹு ஜல்லஷானுஹுவத ஆலாவுடையசொந்த சமூகத்தினின்று அளிக்கப்படும் தனிச்சிரேஷ்டமான நற்கூலியாகும். ஏனெனின் "அன அஜ்ஸீ பிஹீ" அதாவது "நோன்புக்காக வேண்டி யானே சுயமாக நற்கூலியளிப்பேன்" என்று இறைவன் கூறுகின்றான். அங்ஙனம் நோன்புக்காக வேண்டி இறைவன் தானே கூலியளிப்பதாய்க் கூறுவதின் தத்துவம் யாதெனில்:—

நோன்பு நோற்கும் அடியானானவன், தனக்கு அத்தியாவசியமாயிருந்த உண்ணல் பருகல், ஹலாலான மனைவியுடன் உல்லாசம்புரிதல் முதலியவற்றையும் நோன்பு நோர்ப்பதின் வாயிலாய் அவ்வாண்டவனுக்காகவென்றே ஐயமற திரஸ்கரித்து அர்ப்பணஞ் செய்துவிடுகின்றான். ஆகையால் அவ்வடியான் தன் ஜீவியத்தையே ஆண்டவன் சமுகத்தில் தியாகஞ் செய்த அரும்பெரும் தியாகியைப் போலாகின்றான். இவ்வாறு அவன் தன் தியாகத்தினால் இறைவனிடமிருந்து வேண்டுவது யாதெனில், ஆண்டவனது திருப்தியையும், அருளையுமேயாகும். ஆகையால் ஆண்டவனுக்காக வேண்டித் தன்னை தியாகம் புரிந்தவனுக்கு அவ்வாண்டவனே கூலி யளிப்பதாய்க் கூறுகின்றான். ஆண்டவன் சமுகத்தில் பிரிதோர் அனுஷ்டானத் துக்காகவும் அததன் தன்மைக்கும் நிலைமைக்கும் ஏற்ப கூலியளிக்கப்படுகின்றது. அவ்வாறே நோன்பானது சகல அனுஷ்டானங்களிலும் சிலாக்கியமானதாயிருப்பதால், அதன் உயர்தரத் தன்மைக்கேற்ப அதற்குக் கூலியளிக்கப்படும் பொறுப்பும் இறைவனையே சாருகின்றது. ஆகையால் தான் இறைவன் 'நோன்பானது என் திருப்திக்காக நோர்க்கப்படுவதால், அதற்குரிய கூலியை என் திருப்தியினால் யானே அளிக்கின்றேன்" என்று மொழிந்துள்ளான்.

சோதிரர்காள்! நோன்பின் புனிதமும், புண்ணியமும் மகிமையும் அளவற்றனவாகும். எனவே இகத்தில் ஆன்மத் தூய்மையையும், பரத்தில் மோக்ஷ சாதனத்தையும் நல்கும்படியாகிய நோன்பை அதிக விசுவாசத்தோடு நோற்று, ஆண்டவனருளால் இகபர மிரு லோக ஜயமும் பெற்றுய்வீர்களாக!

நோன்பின் விபரம்.

நோன்பு கொள்வதாக நிச்சயித்து அதிகாலையிலிருந்து சூரியஸ்தமனம்வரையில் உண்பது பருகுவது ஜிமாஉ (காம நுகர்ச்சி) செய்வது முதலியவைகளை விடுத்திருப்பதே நோன்பாகும். அந்நோன்புகள், பர்லு, வாஜிபு, நபில், மக்ரூஹ்தஹ்ரீம், மக்ரூஹ்தன்ஸீஹ், என ஐந்து வகைப்படும்.

1. பர்லானநோன்பு இருவகை. ரமலான் மாதத்தின்நோன்பு ஒருவகை. ஷை மாத்தில் தவறிவிட்ட (கலாவான) நோம்பு மற்றொரு வகை. இதனை இன்னகாலத்தில்தான், நிறைவேற்றவேண்டும் என்ற கட்டாயமில்லை. ஆனால் முதல்வகையான ரமலான்மாதத்தின் (அதாவான) நோன்போ, ரமலான் மாதத்திலேயே நிறைவேற்றப்படல் வேண்டும்.

2. வாஜிபான நோன்பு. இதுவும் இரு வகையாகும். குறிப்பிட்ட ஒரு மாதத்தில் அல்லது ஒருதினத்தில் நோன்புநோற்பதாக வேண்டுதல் செய்யப்பட்ட நோன்பு ஒரு வகை. இத்தகைய நோம்புகளை அந்தந்த காலத்திலேயே நிறைவேற்றுதல் வேண்டும். தேதியோ, மாதமோ, எதுவும் குறிப்பிடாமல் நோன்பு நோற்பதாக வேண்டுதல் செய்யப்பட்ட நோன்பு மற்றொரு வகை. இதை ரமலான் மாதமல்லாத எக்காலத்திலும் நிறைவேற்றலாம்.

3. நபில் நோன்பு. இதுவும் இருவகைப்படும் முஹற்றம்மாத்தின் ஆஷுூரா நோன்புகள்போன்ற சுன்னத்தான நோன்புகள் ஒரு வகை. பிரதி மாதந்தோறும் 13, 14, 15-ஆகிய தேதிகளில் நோற்கப்படும் அய்யாமுல் பீள்போன்ற முஸ்தஹப்பான நோன்புகள் மற்றொரு வகை.

4. இரண்டு ஈதுப்பெருநாள்கள், அய்யாமுத்தஷ்ரீக்காகிய துல்ஹஜ்ஜு மாதத்தின் 11, 12, 13 ஆகிய மூன்றுதேதிகளில் நோற்கப்படும் நோன்புகள், மக்ரூஹ்தஹ்ரீமாகும்.

5. முஹற்றம்மாதம் 10-ந்தேதி மாத்திரம் தனியே நோற்கும் நோன்பு மக்ரூஹ் தன்ஸீஹ் ஆகும்.

நோன்பு நோற்கக் கடமைப்பட்டவர்கள்.

சித்தசுவாதீனம் உள்ளவர்களாய், பருவமடைந்தவர்களான ஆண் பெண் ஆகிய இருபாலாரும் நோன்பு நோற்கக் கடமைப்பட்டவர் ஆவர். மாதவிடாய், பேற்றுத்தொடக்கு (ஹைலு, நிபாஸ்) ஆகிய அசந்தர்ப்பங்கொண்ட பெண்கள் அக்காலத்தில் நோன்பு நோற்கக்கூடாது. ஆனால் அக்காலத்தில் விடப்பட்ட நோன்புகளை ரமலான் மாதமல்லாத காலத்தில் நோற்கவேண்டும். பாலர், பித்தர், பிணியாளர், பிரயாணி (முஸாபிர்) நோன்புநோற்கச் சக்திஅற்ற வயோதிகர், ஆகிய இவர்கள் நோன்புநோற்பது கடமையல்ல. ஆனால் மீளாவியாதியஸ்தரும், நோம்பு நோற்கச் சக்தியற்ற வயோதிகரும் ரமலான் மாதத்தின் ஒவ்வொரு நாளிலும் முத்து (பரிகார தர்மம்) கொடுப்பது வாஜிபு. பிரயாணிகள் நோன்பு நோற்பது கடமையில்லையானாலும், அவர்கள் நோன்புநோற்றால் நிறைவேறிவிடும்.

நோன்பின் நிய்யத்து.

(ஹனபிமத்ஹப் பிரகாரம்)

நான் நோன்புவைப்பேன் என தினசரி மனதில் நிர்ணயஞ் செய்துகொள்வதற்கு, நோன்பின் நிய்யத்து என்று பெயர். இவ்வாறு நிய்யத்துச் செய்வது பர்லு. அதைச் சொல்வது சுன்னத்து. ஆதலால் நோன்பு வைக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் விடியற் காலத்தில், அதாவது ஸஹர் நேரத்தில் ஒருவன் சாப்பிடுவானாகில், அதுவே நிய்யத்தாய்விடும். "நான் நாளை நோன்பு வைப்பேன், இன்ஷா அல்லாஹ்" என்று சொல்வானாகில் அதுவும் நோன்பின்

நியத்தாகும். சூரியாஸ்தமன முதல் சூரியன் உச்சியில் வரும்வரை நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்து கொள்ளலாம். ஷரஈ நடுப்பகலிலிருந்து சூரியாஸ்தமனத்திற்குள் நிய்யத்துச் செய்தல்கூடாது.

ஸஹர் செய்வது.

நடுநிசிக்குப் பின் கிழக்கு வெளுப்பதற்குள், நோன்பு நோற்கும் எண்ணத்துடன் உணவருந்துவதற்கு ஸஹர் செய்தல் என்று பெயர். கிழக்கு வெளுப்பதற்கு முன்னதாகவே, ஒருவன் நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்துவிட்டாலும், அதற்குப் பின் கிழக்கு வெளுக்கும்வரை உண்ணவும் பருகவும் செய்யலாம்; நோன்புக்கு முரண்பட்ட மற்றெல்லாக் காரியங்களையுங்கூடச் செய்யலாம். கிழக்கு வெளுத்ததும் அவைகளிலெதையுஞ் செய்யக்கூடாது. கடைசிநேரத்தில் ஸஹர் செய்வது முஸ்த்தஹப்பு. ஆனால் கிழக்கு வெளுத்து விடுமோ என்று ஐயம் உண்டாகும் வரையில் அவ்வளவு நேரம் ஸஹர் செய்வதைப் பிற்படுத்துவது மக்றூஹ். ஆதலால் அவ்வாறு சந்தேக மேற்பட்டபின் சாப்பிடாமலிருப்பது நல்லது. ஒருக்கால் அவ்வாறு சாப்பிட்டாலும் நோன்பு நிறைவேறிவிடும். ஆனால் கிழக்கு வெளுத்தபின்பு சாப்பிட்டதாகப் பின்னால் வெளியாகின், நோன்பு கைகூடாது. அதைத் திரும்ப நோற்பது வாஜிபு.

நோன்பு திறத்தல்.

சூரியாஸ்தமனத்திற்குப் பின் நோன்பை விடும் எண்ணத்துடன் ஏதேனும் ஒரு வஸ்த்துவைப் புசிப்பதற்கு, நோன்பு திறத்தல் என்று பெயர். சூரியாஸ்தமனத்திற்குப்பின், மக்ரிப் தொழுவதற்குமுன் ஏதேனு மொரு வஸ்துவை நோன்பைவிடும் எண்ணத்துடன் புசிப்பதுசுன்னத்து. ஆனால்சூரியாஸ்தமனம் ஆனதும் தீவிரமாக நோன்புதிறக்கவேண்டும் நோன்பு திறக்கும்போது "யாஅல்லாஹ்! நான் உனக்காகவே நோன்பிருந்தேன்; உன்னையே விசுவசித்தேன்; (ஈமான் கொண்டேன்) உன்னையே நம்பினேன்; நீ கொடுத்த இரணத்தைக் கொண்டே நோன்பு திறக்கின்றேன்; நாளைக்கு என்மீதிருக்கும் றமலான் மாத நோன்பை நோற்கநாடுகின்றேன்; ஆதலால் யாஅல்லாஹ்! நான் முன் செய்த பாவங்களையும் பின் செய்யக்கூடியபாவங்களையும் மன்னித் தருள்க!" என்று இறைவனைப் பிரார்த்திப்பது சுன்னத்து. இவ்வாறு துஆ ஓதுவதிலேயே, மறுநாள் நோன்பு நோற்பதாகக் கூறப்படுவதால், மறுநாள் நோன்பிற்கெனப் பிரத்தியேகமான நிய்யத்துச் செய்ய வேண்டுமென்ற அவசிய மில்லை. ஆதலால் பிரத்தியேகமான நிய்யத்துச் செய்யாவிட்டாலும், மறுநாள் நோன்பு நிறைவேறிவிடும். எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் மூன்று பேரீத்தம்பழங்களைப் புசித்து நோன்பு திறந்திருக்கின்றார்கள். தண்ணீரை மட்டும் அருந்தியும் நோன்பு திறக்கலாம். சூரியாஸ்தமனமாய்விட்டதென நிச்சயமாகத் தெரியுமுன், நோன்பு திறத்தல் கூடாது. அவ்வாறு நிச்சயமாகத் தெரியாமல் சந்தேமாயிருக்கும் நேரத்தில் நோன்பு திறந்தால், அதனைக் கலாச் செய்யவேண்டும். வானத்தில் மப்பு மந்தாரங் காரணமாக, சூரியாஸ்தமனநேரம் துலங்காவிட்டால், தாமதித்து நோன்பு திறக்கவேண்டும். சூரியாஸ்தமனமாகி விட்டதெனத் திட்டமாகத் தெரிந்தால், ஆகாயத்தில், மேகமுள்ள காலத்திலுங்கூட தாமதியாது நோன்புதிறக்கலாம். சந்தேகமான நேரத்தில் நோன்பைத்திறந்து சூரியாஸ்தமனத்திற்கு முன்ன தாகவே நோன்பு திறந்ததாகப் பின்னால் வெளியானல், அந்த நோன்பைக் கலாச் செய்வதுடன் கப்பாறுவும் செய்யவேண்டும்.

(ஷாபிஈ மத்ஹப்பிரகாரம்.)

றமலான் மாதத்தில் தினந் தோறும் நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்ய வேண்டும். பொழுதடைந்ததிலிருந்து கிழக்கு வெளுப்பதற்குள் நிய்யத்துச் செய்வதும், பரலான நோன்பு என்றும், கலாவான நோன்பு என்றும் விவரமாகக் குறிப்பிடுவதும், கிழக்கு வெளுத்ததிலிருந்து சூரியாஸ்தமனமாகும் வரையில் நோன்பை முறிக்கக் கூடியவைகளைச் செய்யாமலிருப்பதும் நோன்பின் நிய்யத்துக்களுக்கு ஷர்த்தாகும்.

ரமலான் மாதம் முழுதும் நோன்பு நோற்பதாக றமலான் மாதத்தின் முதல் இரவிலேயே நிய்யத்துச் செய்தால், அன்றைய ஒரு நோன்பு மாத்திரமே அந்த நிய்யத்தினால் நிறைவேறும். ஆதலால் ஒவ்வொரு நாளிலும் தனித்தனியே நிய்யத்துச் செய்தல் வேண்டும். ஆயினும் மாத ஆரம்பத்

திலேயே அம்மாதம்முழுதும் நோன்புநோற்பதாக நிய்யத்துச் செய்வது சுன்னத்து. கிழக்கு வெளுப்பதற்குள் நிய்யத்துச் செய்ய மறந்துவிட்டால் அதற்குபின் ஷரா நடுப்பகல்வரை நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்துகொள்ளலாம். "என்பேரில் கடமையான றமலான் மாதத்தின் நோன்பை அல்லாஹ்த ஆலாவுக்காக நாளை நோற்கிறேன்" என்று நிய்யத்துச் செய்யவேண்டும், பிறகு "அல்லாஹு—லாயிலாஹஇல்லாஹு—வல்ஹைய்யுல்கைய்யூம் அலாகுல்லிநப்ஸின் பீமாகஸபத்" என்று ஏழுமுறை ஓதுவது சுன்னத்து.

நோன்பை முறிக்கும் விஷயங்கள்

(ஹனபிமத்ஹப் பிரகாரம்)

உணவாக உபயோகிக்கக் கூடாத கல், மண், கடிதம், வெள்ளி, பித்தளை, தங்கம், பொன்போன்ற வஸ்துக்களை உட்கொண்டாலும், நோன்பை விடுவதற்கு ஆகுமான காரணங்களாகிய வியாதி, பிரயாணம் முதலியவைகளை உத்தேசித்து ஆகாரம் அருந்தினும், வாய் கொப்பளிக்கும்போதும், நாசிக்குத் தண்ணீர் செலுத்தும்போதும் தவறுதலாகத் தண்ணீர் உள்ளே போய்விட்டாலும், மற்றவர்களின் கட்டாயத்தின் பேரில் பயந்துகொண்டு நோன்பை முறித்தாலும், மூக்கு வயிறு தலைபோன்ற அவயங்களில் புரை வைத்திருக்கும் புண்களிலே எண்ணெய், மருந்து முதலியவைகளை ஊற்ற அவைகள் மூளை அல்லது வயிற்றினுள்ளே சென்றாலும், கிழக்கு வெளுத்தது தெரியாமல் இன்னும் நேரமிருக்கிறதென்று எண்ணிக்கொண்டு கிழக்குவெளுத்தபின் சாப்பிட்டாலும் சூரியாஸ்த்த மனத்திற்கு முன் சூரியாஸ்தமனமாகி விட்டதென்று எண்ணிக்கொண்டு தவறுதலாக நோன்பைத் திறந்துவிட்டாலும், வெற்றிலை புகையிலைபோன்ற பொருள்களைத் தின்றாலும், மூக்குப் பொடி போட்டாலும், காதினுள் எண்ணெய் வார்த்துக் கொண்டாலும் தூக்கத்திலிருக்கும் போது ஏதேனும் வஸ்த்துக்களைத் தின்றுவிட்டாலும், தான் நோன்பிருக்கிற ஞாபகமில்லாமல் காம நுகர்ச்சி கொண்டாலும், பற்களுக்கிடையிலுள்ள பருமனுள்ள வஸ்த்துக்களைக் கிழக்கு வெளுத்தபின் விழுங்கினாலும், பற்களுக்கு மத்தியிலுள்ள கடலைப்பருமனுக்குச் சிறியதான வஸ்த்துக்களை எடுத்து மறுபடியும் விழுங்கினாலும் நோன்பு முறிந்துவிடும். ஆனால் கப்பாரு வாஜிபில்லை. (ஆலங்கீர்) ஒரு நோன்பாளி ஞாபகமில்லாமல் சாப்பிடுவதால், நோன்பு முறியாது. ஆனால் அவ்விதம் செய்ததால் நோம்பு முறிந்துவிட்டதென நினைத்து, பின்பு சாப்பிட்டாலும், பானமருந்தினாலும் நோன்பு முறிந்துவிடும். அதைக் கலாச் செய்யவேண்டும். ஆனால் கப்பாருவாஜிபில்லை. நித்திரையில் இந்திரிய ஸ்கலிதமானாலும், தாடி மீசைகளுக்கு எண்ணெய் தடவினாலும், பல்குச்சியினால் பல் துலக்கினாலும் நோன்புமுறியாது. ஏதாகிலுமொரு காரணத்தை முன்னிட்டு நோன்பு முறிந்து போகுமாயின், அந்த மாதத்தின் கண்ணியத்தை உத்தேசித்து பகலில் பாக்கியுள்ள நேரங்களில் சாப்பிடாமலும் பருகாமலுமிருப்பது வாஜிபு.

றமலான் மாதத்தில் நோன்பாளி, பிறருடைய நிர்ப்பந்தமின்றி, தனது மனப்பூர்வமாக நோன்பை முறித்தாலும், நோன்பாளி என்பது ஞாபகமிருக்க காமநுகர்ச்சி கொண்டாலும் நோன்பு முறிந்து போவதுடன் கப்பாருக்கொடுப்பதும் வாஜிபாகும்.

(ஷாபிஈ மத்ஹப்பிரகாரம்)

கிழக்கு வெளுத்ததிலிருந்து பொழுது அஸ்மிப்பதற்குள் காமநுகர்ச்சி கொள்ளுதல், தனக்கு விவாகஞ்செய்துகொள்வதற்கு மார்க்கச் சட்டப்படி அனுமதிக்கப்பட்ட பெண்களைத் திரையில்லாமல் தொட்டு அதனால் இந்திரியம் வெளியாதல், வேண்டுமென வலுவில் வாந்தி செய்தல், ஒலுச்செய்யும்போது அதிகமாக வாய்க்கொப்பளித்து அதனால் தண்ணீர் உட்செல்லுதல், ஸ்நானஞ் செய்கையில் தண்ணீருக்குள் மூழ்கி அதனால் துவாரத்திற்குள் தண்ணீர் செல்லுதல், காரல் முதலியவை தொண்டையை விட்டு நீங்கி வந்தபின் அவற்றை மறுபடியும் விழுங்குதல், வாயிலிருக்கிற இரத்தம் முதலியவைகளைத் துப்பி வாயைச் சுத்தி செய்வதற்குமுன் உமிழ் நீரை விழுங்குதல், சரீரத்தின் உட்புறம் வரையில் துவாரங்களின் வழியே கண்ணுக்குப் புலப்படக்கூடியபொருள்கள் உட்செல்லுதல் ஆகிய இவைகளால் நோன்பு முறிந்துபோம்.

நோன்பை முறிக்காதவைகள்.

(ஹனபி மத்ஹப் பிரகாரம்)

நோன்பை முறிக்கக்கூடிய காரியங்களா

கிய சாப்பிடுதல், குடித்தல், காமநுகர்ச்சி கொள்ளுதல்போன்ற காரியங்களை நோன் பாளி என்ற ஞாபகமில்லாமல் செய்துவிடு தல், எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதல், ஸ்நானஞ்செய்தல் ஆகிய இவற்றால் நோன்பு முறியாது. காதுக்குள் தண்ணீர் போய்விட் டாலும், வாய் நிரம்ப இல்லாமல் கொஞ்ச மாக வந்த வாந்தியை நோன்பாளி என ஞாபகமிருக்க விழுங்கிவிட்டாலும் ஈ, தூசு முதலிய அற்ப வஸ்த்துக்கள் தவறி வாய்க் குட் சென்றுவிட்டாலும், மருந்துகளை இடிக் கும்போது உண்டாகும் காரங்கள், தானியங் களை அரைக்கும்போது உண்டாகும் தூசுகள் முதலிய வாய்க்குள் சென்றாலும், பற்களுக் கிடையிலிருந்து உதிரம் வெளிப்பட்டாலும், பெண்களை இச்சையுடன் பார்ப்பதால் (தொடுவதாலல்ல) இந்திரியம் வெளிப்பட் டாலும், மத தர்மப்படி நீராடக்கடமைப் பட்டவன் பகல் முழுதும் ஸ்நானஞ் செய்யா திருந்தாலும், வாசனைத் திரவியங்களை முகர்ந் தாலும், ஈரத்துணியை வயற்றில் சுத்திக் கொண்டாலும் நோன்பு முறியாது. காதுக் குள் தண்ணீரை வேண்டுமென்றே வார்த்துக் கொண்டால், நோன்பு முறிந்துவிடுமென சில உலமாக்கள் கூறியிருக்கின்றார்கள். (ரத்துல் முஹ்தார்) ஆனால் காதின் வழியாக எண் ணெய் மூளைக்குச் செல்வதால், காதுக்குள் எண்ணெய் ஊற்றுவதும் நோன்பை முறித்து விடும்.

(ஷாபிஈ மத்ஹப் பிரகாரம்)

தான் விவாகஞ் செய்துகொள்ள மதம் அனுமதிக்கும் பெண்களைத் திரையுடன் தொடுவதாலும், அன்னோர்களைத் திரை யுடன் முத்தமிடுவதாலும், காம இச்சையை உண்டாக்கக் கூடியவைகளைக் கூர்ந்துபார்ப்ப தாலும், அவைகளைப்பற்றிச் சிந்திப்பதாலும், சொப்பன ஸ்கலிதத்தாலும், தான் விவாகஞ் செய்துகொள்ள மதம் அனுமதிக்காத பெண் களைத் திரையில்லாமல் தொடுவதாலும், தன் னால் அடக்க முடியாமல் வாந்தி எடுப்பதா லும், காற்று காரம் முதலியவை உட்சென் றாலும், அசுத்தமாகயிருக்கிற தன்வாயை துப்பரவு செய்வதற்குமுன் தற்செயலாக உமிழ்நீரை விழுங்கிவிட்டாலும், ஈ போன்ற வைகள் தொண்டைக்குள் சென்றாலும் வாய் கொப்பளிக்கும்போது தண்ணீர் தவறுத லாக உள்ளே சென்றுவிட்டாலும், கொஞ்ச நேரம் அறிவுமயங்கி பின்பு தெளிவு ஏற்பட் டாலும், சுத்தமான தன் உமிழ்நீரை விழுங் கினாலும், பிறரது நிர்ப்பந்தத்திற்கு அஞ் சியோ அல்லது ஞாபகமில்லாமலோ நோன் பை முறிக்கக் கூடியவைகளைச் செய்தாலும் நோன்பு முறியாது.

நோன்பு நிறைவேறுவதற்கான அம்சங்கள்.

பகல் முழுதும் புத்தி சுவாதீனத்துடனும், முஸ்லிமாகவும் இருக்கவேண்டும். பெண்க ளுக்கு மேற்கூறிய இரண்டு காரியங்களுடன் மாதவிடாய், பிரசவத்தொடக்கு (ஹைளு நிபாஸ்) ஆகியவை இல்லாதிருப்பதும் அவ சியமாகும். பகல் முழுதும் நித்திரை செய் தாலும், மதச்சட்டப்படி ஸ்நானஞ் செய்யக் கடமைப்பட்டவர்கள் பகல் முழுதும் குளி க்காதிருந்தாலும் நோன்பு முறியாது ஆனால் பாவ மேற்படும்.

ஆசிரியர் குறிப்புகள்.

ஹுஸைனியின் பிதற்றல்:—சென்னை மத்ரஸெ அஃலமில் ஆசிரியர் பதவி வகித்துவரும் S. A. K. ஹுஸைனி என் பார் ஆங்கிலமாத சஞ்சிகையாகிய "இந்தி யன் நேஷனல்" என்னும் மாசிகையின் இத ழொன்றில் ஓர் கட்டுரை வரைந்துள்ளார் அதில் நமது பரிசுத்த சுத்த சத்திய இஸ் லாம் மார்க்கத்திற்கு முற்ற முற்ற விரோத மான அநேக முரண்பட்ட கூற்றுகள் மலி ந்து கிடப்பதுடன், நம் முஸ்லிம் அரசர்கள் விஷயமாயும் அநேகத் தவறான-தப்பான- உண்மைக்கு விரோதமான விஷயங்களும் குறிப்பிடப்பட்டுளது. ஆகவே அக்கூற்றுக் களைக் கண்டித்து அவ்ஹுஸைனிக்கு அறி வுறுத்தவேண்டியது நம்மீது கடமையாகும். எனவே அவர் "அன்பும், அஹிம்ஸையும்

ஹிந்துகளுடைய கொள்கையாக யிருப்பது போல்,ஸூபியாக்களுடைய கொள்கையாகவு மிருக்கிறதென்றும், ஹிந்துக்களுடைய பூஜை எவ்வாறு பயனற்றதாக யிருக்கிறதோ, அதே விதமாக முஸ்லிம்களுடைய தொழுகையும் பிரயோஸனமற்றதாகயிருக்கிறதென்றும், உண்மை ஹிந்து உண்மை முஸ்லிமாக மதிக்கப்படுவான்; உண்மைமுஸ்லிம் உண்மை ஹிந்துவாக மதிக்கப்படுவான் என்றும் பிதற்றி யிருக்கின்றார். அதாவது நமது தூய்மையான சத்திய மார்க்கத்தில் தலை சிறந்து விளங்கும் மகான்களான ஸூபியாக்களின் கொள்கையும் அச் சன்மார்க்கத்தின் விரோதியான காபிர்களின் கொள்கையும் ஒன்றென்றும், அல்லாஹ்த ஆலாவால் நம் மீது கடமையாக்கப்பட்டு, குர்ஆன் ஷரிபின் பற்பல இடங்களிலும்அதனை நிறைவேற்றும்படி தூண்டப்பட்டும் வருவதும், இஸ்லாத்தின் தூணென எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களால் அறிவிக்கப்பட்டதுமாகிய தொழுகையைப் பிரயோசனமற்றதெனவும், ஹிந்துவும் முஸ்லிமும் ஒன்றுதான், உண்மை முஸ்லிமை ஹிந்துவென்று அழைக்கலாமென்றும், உண்மை ஹிந்துவை முஸ்லிமென்று அழைக்கலாமென்றும் உளறிக் கொட்டியிருக்கின்றார். இவரின் அறியாமைக்கு நாம் மிகவே வருந்தவேண்டியிருக்கிறது. தவிர முஸ்லிம் பாதுஷாவாகிய ஔரங்ஜேப்பைப்பற்றியும், அவர் மதவெறி பிடித்தவரென்றும், குறுகிய மனப்பான்மையுள்ளவரென்றும், தொழுகையாளி என்றும் கூறி அவரால் முஸ்லிம் இராஜியத்திற்கு ஏதோ கெடுதி நேரிட்டுவிட்டதுபோல் நடிக்கின்றார்.

இதனை நம் முஸ்லிம்கள் யாவரும் தக்க முறையில் கண்டித்து, அவர் உண்மையைத் தெரிந்துகொண்டு தம் தப்பான கொள்கையைவிட்டுத் தவ்பாச் செய்துவெளிவரும்படிசெய்யவேண்டியது நம்மவர்களின்கடமையாகும். எனவே நம் "ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம்" சென்னை மஸ்ஜித மஃமூரில் ஓர் மகாநாடு கூட்டி, அதனை தக்கமுறையில் கண்டனஞ்செய்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது சிற்சில இடங்களிலும் இதனைக் கண்டித்து தீர்மானஞ்செய்திருக்கின்றார்கள். இதுவன்றி நம் முஸ்லிம் சங்கங்களும் பொது ஜமா அத்தார்களும் ஆங்காங்குமகாநாடுகள் கூட்டி, இதனை தக்க முறையில் கண்டித்து ஹூசைனி என்பார், அவருடைய தவறான கொள்கையினின்று தவ்பாச் செய்து சத்தியத்தைக் கடைபிடித் தொழுகும்படி செய்வதற்குள்ள முயற்சிலீடுபட்டு உழைப்பார்களென எதிர்பார்க்கின்றோம். அது நம்மவர்கள் மீதுள்ள கடமையுமாகும்.

பேகம் ஹமீதலியின் பேதமை :— இலங்கையின் கண்வதியும் முஸ்லிம் சோதர சோதரிகளை ஏமாற்றித்துர்ப்பிரசாரஞ்செய்ய கொளும்பு நகருக்கு விஜயஞ் செய்திருக்கும் பேகம் ஹமீதலி பிதற்றியுள்ள அநேக மார்க்கமுரணான கூற்றுக்களை தினகரன், வீரகேசரி முதலிய பத்திரிகைகள் பத்திபத்தியாய்த் தங்கள் இதழ்களில்வெளியிட்டிருப்பதை நாம்கண்டு மிக ஆச்சரியப்படுவதுடன் அப்பேதை மாதுவின் அறியாமைக்கும் வருந்துகின்றோம். அம்மாது தமக்குத் தெரியாத ஒரு விஷயத்தில் தலையிட்டு அவ்விஷயம் நமது சன்மார்க்கத்திலேயே கிடையாதென்று பஹிரங்கமாகக் கூற முற்பட்டது, அம்மாதிற்கு நமது சன்மார்க்கத்தில் எவ்வித சம்மந்தமுமில்லை என்பதை நன்கு தெறிவிக்கின்றது. எனவே அம்மாது குர்ஆன் ஷரீபில் கூறப்பட்டிருக்கும் கோஷா பர்தாமுறைக்குமுரணாகவும், எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் அனுஷ்டித்துக் காட்டிய பலதார மணங்களை துர்ப்பழங்களென்றும் அறியாத்தனமாகக் கூற முற்பட்டு மிருப்பதை இலங்கைவாசிகள் பொருட்படுத்தமாட்டார்களென நம்புவதோடு, உண்மை அறியாது அம்மாதுவின் கூற்றுத்தான் சரியானதென்று கருதி ஹிந்துப்பத்திராதிபர்களும் தம்பத்திகளை நிறப்பா திருப்பார்களென்றும் எதிர்பார்க்கின்றோம்.

இஷா அத்துல் இஸ்லாமும், ஜகாத்தும்.

மேலும் நீங்கள் தொழுகையைக் கடைபிடித் தொழுங்கள். ஜகாத்தைக் கொடுங்கள். இன்னும் (இவ்வுலகினில்) நீங்கள் உங்களுக்காக என்ன நன்மைகளைச் செய்திருந்தபோதிலும் அதை (பிற்காலத்தில்) அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ்த ஆலா நீங்கள் செய்வதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான்.
—அல்குர்ஆன்.

சோதரர்காள்! மேல் கூறப்பட்டுள்ள திருவஸனத்தில் அல்லாஹ்த ஆலா நம்மவர்களை நோக்கி, ஜகாத் கொடுங்களென கட்டளையிடுவதுடன் வேறு திருவஸனங்கள் மூலம் அதைப்பெறுவதற்கு அருகதையுடையோர்களின் விபரத்தையும் குறிபிட்டுத் தெரிவித்திருப்பதால், நாம் அதனை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளோம். எனவே அக்கடமையை நாம் சரிவர நிறைவேற்றுமலோ, அல்லது அதனை அதற்குறியவர்களுக்குக் கொடுக்காமல் இதரர்களுக்குக் கொடுத்தோ விடுவோமாகில், நாம் குற்றவாளியாவதுடன் அதன் பலாபலன்களையும் பெற்றுக்கொள்ளாதவர்களாகவுமாய் விடுகின்றோம்.

ரமலான் ஷரீபானது இவ்வாறான புண்ணிய கைங்கரியம் செய்வதற்குத்தக்க காலமாகும். இதில் மானிடனால் புரியப்படும் நன்மைகளுக்கு அளவற்ற நற்கூலிகள் கிடைக்கின்றன. எனவே, நஞ்சோதிரர்கள் இம் மாண்புமிக்க காலத்தில் தங்கள்மீது கடமையாக்கப்பட்டுள்ள ஜகாத் பொருளை அதற்குறியவர்களுக்குக் கொடுக்க முயற்சிப்பார்களாக. ஜகாத்தைப்பெற அருகதையுடையவர்களென அல்லாஹ் (ஜல்) கூறியிருப்பதில், "முஅல்லபத்துல் குலூப்" அவர்களின் ஹிருதயங்கள் சந்தோஷமாக்கி வைக்கப்பட்டவர்களும் ஒரு பிரிவினர்களாகும். எனவே நவ் முஸ்லிம்கள் இஸ்லாத்தின் மீது அன்பு பூண்டொழுகுமாறு செய்வதற்கு ஜகாத் பணங்களை அவர்களுக்குக் கொடுத்து உதவி செய்வது நம்மீது மிகக் கடமையாகும்.

இவர்களுக்கு நமது ஜகாத் பணங்களைக் கொடுப்பது தொழுகையில்லாத இதர முஸ்லிம்களுக்குக் கொடுப்பதைப் பார்க்கினும் பதின்மடங்கு மேலாகுமென்பது வெள்ளிடை. புதிதாய் இஸ்லாத்தைத் தழுவியவர்கள் விஷயமாய் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் எவ்வளவு சிரத்தை எடுத்துக்கொண்டார்களென்பது உலகறிந்த விஷயமாகும். எனவே அவர்களுக்குச் சகல துறைகளிலும் உபகாரஞ் செய்வது நம்மீது கடமைமாகும்.

சோதிரர்காள்! மதுரைஜில்லா கம்பத்தில் இது சமயம் அநேகர் மனஉவப்போடு குடும்பங்குடும்பமாய் நம் பரிசுத்த இஸ்லாத்தைத் தழுவி வருகின்றார்களென்பது யாவரு மறிந்ததே. அவ் வேழை நவ் முஸ்லிம்களுக்கு உபகாரஞ் செய்வான் வேண்டி அநேகர் மனஉவப்போடு அனேக நன்கொடை அளித்திருக்கின்றார்கள். ரமலான் ஷரீபில் தங்களுடைய ஜகாத் ஸதகா முதலியவைகளை அளித்து உபகாரமும் செய்திருக்கின்றார்கள். இவ்வாறு அந் நவ்முஸ்லிம்களை ஆதரிப்பது நம்மீது கடமையாகும். நம்முடைய ஆதரிப்பையும் ஆதரவையுங்கண்டு இன்னு மனேகர் பரிசுத்த இஸ்லாத்தைத் தழுவ தயாராகயிருப்பதாகவும் தெரிகிறது. இதற்கெல்லாம் தக்க பண்டு தேவையாகுமென்பது தங்களுக்குத் தெரிந்தவையே. முஸ்லிம் இராஜர்களிருந்து அவர்களுடைய பொக்கிஷத்திலிருந்து இவ்வாறான செவைகளெல்லாம் செய்யப்படல்வேண்டும். துர்அதிர்ஷ்டவசமாய் நாம் அன்னோரை இழந்துவிட்டதால் இவ்வுத்தமச் சேவையை நாம் மேற்கொண்டு செய்யவேண்டிய சந்தர்ப்ப மேற்பட்டுப்போயிருக்கிறது. எனவே இதுசமயம் அவ்விடத்திற்குப் பணத்தேவை அதிகரித்திருக்கின்றது. இதை உத்தேசித்து "இஷாஅத்துல் இஸ்லாம்" சங்கத்தார் இது பொழுது தஞ்சை ஜில்லாவின் பற்பல பகுதிகளிலும் சுற்றுப்பிரயாணஞ் செய்கின்றார்கள். ஆங்காங்குள்ள முஸ்லிம்களும் அவர்களை ஆதரித்து வருகின்றார்கள். ஆதலின் நஞ்சோதரர்கள் இம்மகத்தான ரமலான் ஷரீபில் தங்கள் ஜகாத், ஸதகா, நன்கொடை, முதலானவைகளை அப்புனித காரியத்திற்கு அளித்து அளவில்லா நற்பலன்களை, எல்லாம் வல்ல அல்லாஹ்த ஆலாவின் சன்னிதானத்தில் பெற்றுக்கொள்வார்களாக.

மஃரிபத்துல் ஔகாத் (நேரங்களின் விபரம்)

நோன்பு வைக்கும் நேரம், நோன்பு திறக்கும் நேரம், சூரிய உதயம் முதலியவைகளை இதன்கீழ் குறிப்பிடுகிறோம். இதிற் கண்ட நேரங்கள் சென்னை நகருக்கு உரியனவாகும். சென்னைக்கு நேர்மேற்கில் உள்ளவர்கள் 69½ மைலுக்கு 4 நிமிஷம் கூட்டியும் நேர்கிழக்கில் உள்ளவர்கள் 69½ மைலுக்கு 4 நிமிஷம் வீதம் குறைத்தும் கணக்கிட்டுக் கொள்ளவேண்டும். கீழே குறிப்பிட்டுள்ள நேரங்களில் அஸ்தமனத்தை 5 நிமிஷம் பிந்தியும் சுப்ஹையும், சூரியோதயத்தையும் 5 நிமிஷம் முந்தியும் அனுஷ்டிப்பது நலம்.

இதனடியில் சில முக்கியமான ஊர்களையும் அவைகள் சென்னைவிட்டு எவ்வளவு தூரம் இருக்கிறதென்பதையும், அவ்விடத்திலுள்ளவர்கள் கூட்டிக்கொள்ளவேண்டிய நிமிஷங்களையும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குச் சமீபத்திலுள்ளவர்கள் அதற்கேற்றவாறு தங்கள் ஊரின் நேரத்தை நிர்ணயித்துக்கொள்வார்களாக.

ரமலான் மீ	1உ 7	8உ 14	15உ 21	22உ 28	29உ 30
நேரங்கள்	ம. நி.	ம. நி.	ம. நி.	ம. நி.	ம. நி.
ஸஹர் முடிவு	4—50	4—53	4—54	4—55	4—55
சுப்ஹு சாதிக் (மெய் வெள்ளை)	5—15	5—17	5—20	5—21	5—21
சூரியோதயம்	6—35	6—38	6—40	6—40	6—40
சூரியாஸ்தமனம்	5—53	5—56	6— 0	6— 3	6— 4

முக்கிய பட்டணங்கள்

ஊர்	மைல்	நி	ஊர்	மைல்	நி
விழுப்புரம்	56	3½	தாராபுரம்	193	11¼
திருவண்ணாமலை	59	4	பெங்களூர்	187	10¾
கொழும்பு	25	1½	கோயமுத்தூர்	241	14
இராமேஸ்வரம்	70	4	காஞ்சிவரம்	43	2½
பட்டுக்கோட்டை	67	4	வேலூர்	81	4½
மன்னார்குடி	35	2	ஆற்காடு	81	4½
நாகப்பட்டணம்	31	2	தூத்துக்குடி	147	8½
தஞ்சாவூர்	80	4	ராமநாதபுரம்	103	6
சீர்காழி	39	2	புதுக்கோட்டை	201	12
சிதம்பரம்	42	2	திருச்சினாப்பள்ளி	111	6½
பரங்கிப்பேட்டை	37	2	சேலம்	144	8½
கூடலூர்	37	2	தர்மபுரி	147	8½
செங்கல்பட்டு	22	1	மேட்டுப்பாளையம்	236	14
வாணியம்பாடி	126	7	உதகமண்டலம்	248	14½
திருநெல்வேலி	180	10½	மதுரை	150	8
திண்டுக்கல்	162	9½	சிவகங்கை	124	7½

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.